

# ஒரு சுறங்கைப் பேரீச்சம்பழங்கள்

Short stories of
Mahmoud Saeed, Thoufik Al Hakim, Tayeb Saleh, Zakariyya Tamir, Ghassan Kanafani, Yasser Abdel Baqi, Rabia Raihane, Jokha Al Harthi and Omar El Keddi.



அஷ்ரஃப் சிஹாப்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
16 JUL 2013
LIBRARY

அரச தேசிய சாஹித்திய விருது பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

662853

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
16 JUL 2013
LIBRARY

# ஒரு சுறங்கைப்
# பேரீச்சம் பழங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சுறங்கைப்
# பேரீச்சம் பழங்கள்

அஷ்ரஃப் சிஹாப்தீன்

யாத்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

662853

ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள்
(மொழிபெயர்க்கப்பட்ட அறபுச் சிறுகதைகள்)
அஷ்ரஃப் சிஹாப்தீன்
உரிமை: அமீனா அஷ்ரஃப்
முதற் பதிப்பு: நவம்பர் 2011
வெளியீடு: யாத்ரா
தொடர்பு:
37. ஸ்ரீ சித்தார்த்த மாவத்தை.
மாபோளை. வத்தளை. ஸ்ரீலங்கா.
அலை பேசி: 0777 303 818
விலை: 300.00 ரூபாய்கள்

ORU SURANGAIP PEREECHAM PALANGKAL
(Collection of Translated Arabic Short Stories)
ASHROFF SHIHABDEEN
© Ameena Ashroff
First Edition: November 2011
37, Sri Sidhartha Mawatha, Mabola, Wattala, Sri Lanka
Yaathra Publication
0777 303 818
ashroffshihabdeen@gmail.com
ashroffshihabdeen.blogspot.com
Price: Rs.300.00

Printers: Talent Printech
20/4, Madampitiya Road, Colombo -15
0114367575

ISBN: 978 - 955 - 8448 - 07 - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது

சமநிலைச் சமுதாயம் சஞ்சிகையின் நிறுவனரும்
அதன் கௌரவ ஆசிரியருமான
உடன்பிறவாச் சகோதரர்

**ஹாஜி. ஏவி.எம்.ஜாபர்தீன்**

அவர்களுக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு தமிழில் அரபுக் கதைகள்

அஷ்ரஃப் சிஹாப்தீன் ஓட்டமாவடியைச் சேர்ந்தவர். 2000 ஆம் ஆண்டு முதல் வெளிவரும் 'யாத்ரா' என்ற பிரசித்தி பெற்ற கவிதை இதழின் ஆசிரியர். கவிதை, சிறுகதை, வானொலி நாடகம், பத்தியெழுத்து, சிறுவர் இலக்கியம், பயண இலக்கியம் என்று பல்வேறு துறைகளிலும் தடம் பதித்த இவர், தம்மை ஒரு சிறந்த மொழி பெயர்ப் பாளர் என்ற வரிசையிலும் பெயர் பதித்துள்ளார் என்பதை, ஈராக்கியக் கவிஞர் ஜமால் ஜூமாவின் "உன்னை வாசிக்கும் எழுத்து" (2007) எனும் நெடுங் கவிதையை மொழிபெயர்த்து அளித்ததன் மூலம் நிரூபித் துள்ளார். இது தவிர, "காணாமல் போனவர்கள்" (1999), "என்னைத் தீயில் எறிந்தவள்" (2008) என்பன இவரது கவிதைத் தொகுதிகள். "புள்ளி" (2007), "கறுக்கு-மொறுக்கு - முறுக்கு" (2009), "புல்லுக்கு அலைந்த மில்லா" (2009) என்பன இவர் படைத்த சிறுவர் கதைகள். பல்சுவைப் பத்திகளின் தொகுப்பான "தீர்க்க வர்ணம்" (2009), பயண அனுபவங்களைச் சுவைபடக் கூறும் "ஸ்ரீலங்காவிலிருந்து ஸ்ரீரங்கப் பட்டணம் வரை" (2009) என்பன இவரது குறிப்பிடத்தக்க பிற படைப் புக்களாகும்.

அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளராக இணைந்து தமிழ்ச் சேவை, முஸ்லிம் சேவை, கல்விச் சேவை போன்றவற்றில் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரித்தும், தொகுத்து வழங்கியும் தனக்கென ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியிடத்தைப் பெற்றிருந்தார். முஸ்லிம் சேவையில் இவர் நடத்திய "அறிவுக் களஞ்சியம்" நிகழ்ச்சி மக்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றிருந்தது. அத்துடன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் சுமார் 10 வருட காலத்துக்கும் மேலாகச் செய்தி அறிவிப்பாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார். "நாட்டவிழி நெய்தல்" (WWW.ashroffshihabdeen.blogspot.com) என்ற வலைப்பூவுக்குச் சொந்தக்காரரான இவர், அதில் சுவாரசியமான பல பதிவுகளைத் தொடர்ச்சியாகத் தருவதன் மூலம் இணைய உலகிலும் உற்சாகமாக வலம் வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத் தமிழ்ச் சிற்றிதழ்ச் சங்க இலங்கைக் கிளையின் உபதலைவராகப் பணியாற்றி வரும் இவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா ஃபோரத்திலும் உப தலைவராகச் செயற்பட்டுள்ளார். அஷ்ரஃப் சிஹாப்தீன், 2002 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் பொதுச் செயலாளராகப் பணியாற்றியதோடு, 2011 ஆம் ஆண்டில் கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக் குழுச் செயலாளராகவும் இருந்து காத்திரமான பங்காற்றியுள்ளார். இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தினதும் சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினதும் செயலாளராக இயங்கி வருகின்றார்.

ஓர் ஆசிரியராகப் பணிதொடங்கி இலங்கை குடிவரவுத் திணைக்கள அதிகாரியாய் முன்னேறிய அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள், எத்தனையோ ஆற்றல்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு மூத்த படைப்பாளியாகத் தமிழ்கூறும் நல்லுலகில் தனக்கெனத் தனியானதோர் இடத்தைப் பெற்றிருந்தும் பழகுதற்கு எளியவராய், இளந் தலைமுறையினரின் திறமைகளுக்கு எப்போதும் ஊக்கமும் உற்சாகமும் அளிப்பவராய் இருப்பது விதந்துரைக்கத் தக்கதாகும்.

இவருடைய படைப்புக்கள் பல்வேறு தரப்பட்டவர்களையும் உள்வாங்கி, தமக்கெனத் தனியானதொரு வாசகர் வட்டத்தை இன்றுவரை தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது. இவரது படைப்புக்களில் "ஸைத்தூன்" என்ற கவிதை 1985 ஆம் ஆண்டுகளில் நாட்டில் நிலைகொண்டிருந்த நெருக்கடியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சூழலை அடியொட்டியதாய் அமைந்திருந்தது. இலங்கையிலும் இந்தியாவிலும் பல்வேறு பத்திரிகை, சஞ்சிகைகளில் பலமுறை மீள் பதிப்புச் செய்யப்பட்டுத் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் பெரும் புகழை ஈட்டித்தந்த இந்தக் கவிதையும், "என்னைத் தீயில் எறிந்தவள்" என்ற அற்புதமான கவிதையும் "மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்" (2002) தொகுதியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் அந்த நூலின் பிரதான தொகுப்பாளருங்கூட.

அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் "என்னைத் தீயில் எறிந்தவள்" கவிதைத் தொகுதிக்கு 2009 ஆம் ஆண்டு அரச சாகித்திய விருது கிடைத்தது. அண்மையில் காயல்பட்டினத்தில் இடம்பெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் இவர், 'தமிழ்மாமணி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவரது படைப்புக்களில் என்னை மிகவும் கவர்ந்தது, கலாநிதி எம். எஸ்.எம். அனஸ் அவர்களின் கனதியான அணிந்துரையோடு உண்மைக் கதைகளின் தொகுப்பாக வெளிவந்த "ஒரு குடம் கண்ணீர்" (2010) நூல்தான். அதிகார மமதையாலும் அரச யந்திரத்தின் எதேச்சதிகாரச் செயற்பாடுகளாலும், பகைமையின் குரோதத்தாலும் ஆறறிவு படைத்த மனிதர்கள் மிருகங்களைவிட நிலை தாழ்ந்து போன மானுட அவலங்களை நெஞ்சை உலுக்கும் அதியற்புதமான நடையில் இந்த நூல் பேசி இருக்கிறது. எடுத்ததும் படித்து முடிக்காமல் கீழே வைக்க விடாமல் கட்டிப் போடும் அப்படியோர் ஆற்றொழுக்கான தமிழ்நடை. பொதுவாக இஸ்லாமிய மார்க்க நூல்களையே படிக்கும் வழக்கமுடைய 60 வயதான என்னுடைய மாமியார் தற்செயலாகத்தான் இந்த நூலைக் கையில் எடுத்தார். படிக்கத் தொடங்கியவர் இரண்டு நாட்களுக்குள் படித்து முடித்துவிட்டுச் சொன்னார். "இப்படியான கொடுமைகளும் உலகத்துல நடக்குதா மகளே? மனசெல்லாம் பாரமாப் போச்சு." வயது வித்தியாசமின்றிப் படிப்பவரை ஈர்த்துக் கொள்ளும் அருமையான எழுத்துக்குச் சொந்தக்காரர் இவர் என்பதை உணர்த்தும் ஒரு சின்னச் சம்பவம் இது.

இவருடைய "ஒரு குடம் கண்ணீர்" நூலுக்குச் சாகித்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருது கிடைக்கும் என்ற பரவலான எதிர்பார்ப்புக்கு மாற்றமாக தேசிய சாகித்திய விழாவில் (2011) வெறுமனே ஒரு சான்றிதழ் மட்டுமே வழங்கப்பட்டமையானது இலக்கிய உலகில், குறிப்பாக இணையத்தில் பலத்த சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருப்பதை நாமறிவோம். இந்த நூலைப் பற்றி 2011 ஆகஸ்ட் 17 ஆம் திகதி 'இந்தியா டுடே' சஞ்சிகையில் வெளிவந்த குறிப்பில், **"ஒரு மரத்தையும்கூட மனித உரிமைப் போராளியாக ஆக்கி விடும் எழுத்து அஷ்ரஃபுடையது"** என்று இடம்பெற்றிருந்தமை இங்கு நினைவு கூறத்தக்கது.

**"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லும் சொல் இன்மை அறிந்து"** என்றார். வள்ளுவர் பெருந்தகை. அத்தகைய தோர் வெல்லும் சொல் நடைக்குச் சொந்தக்காரராக அஷ்ரஃப் சிஹாப்தீன் திகழ்கின்றார் என்பதையே மேற்படி குறிப்பு நமக்கு உணர்த்தி நிற்கின்றது எனலாம்.

□□

**"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!"** என்றும்,
**"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்**
**இறவாத புகழுடைய புது நூல்கள்**
**தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும"**என்றும் கட்டளையிட்டான் மகாகவி பாரதி. ஒரு மொழி அபரிமிதமாக வளம் பெற்று என்றென்றும் வாழும் மொழியாகப் பரிணமிப்பதற்கான அடிப்படையை அவன் நமக்குச் சொல்லிச் சென்றான். அந்த வகையில், ஏனைய மொழிகளில் எழுந்த கலைச் செல்வங்கள் மொழிபெயர்ப்பு வழியே தமிழுக்குள் பிரவேசித்தன. பிரான்ஸிய, ரஷ்ய, அமெரிக்க இலக்கியங்கள் உட்பட உலகின் பல்வேறு நாடுகளில், வெவ்வேறு மொழிகளில் படைக்கப்பட்ட இலக்கியங்கள், இலக்கியக் கோட்பாடுகள் என்பன தமிழ் வாசகர்களாலும் சுவைஞர் களாலும் பெரிதும் வரவேற்கப்பட்டன. விடுதலைப் போராட்ட கால முதல் மாப்பசான், விக்டர் ஹியூகோ போன்றோரின் பிரான்சிய இலக்கிய நூல்கள் பல தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஷ்யப் புரட்சி, சீனப் புரட்சி என்பன ஏற்படுத்திய அலைக ளால் இடதுசாரி இயக்கங்கள் வலுவடைந்தன. நவகாலனிய எதிர்ப்பு தன்முனைப்புப் பெற்றது. இலக்கியங்கள் இந்த மக்கள் போராட்டங் களைக் கூர்மைப்படுத்தின. அவை ஆயுதங்களுக்கு நிகராகக் களத்தில் குதித்து ஆதிக்கச் சக்திகளுக்கெதிரான போராட்டத்துக்குப் புத்துயி ரூட்டின.

சேகுவாரா படுகொலை செய்யப்பட்ட 1967 ஆம் ஆண்டு அஸ்தூரியாஸ் எழுதிய "சைக்ளோன்" எனும் நூலுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டதையடுத்து இலத்தீன் அமெரிக்க இலக்கியங்களும் ஆபிரிக்க இலக்கியங்களும் பரவலடைய ஆரம்பித்தன. தமிழிலும் அவை வலம் வரத் தொடங்கின. சினுவா அச்செபே, அலெக்ஸ் ஹீலி, கூகி வா தியாங்கோ, லத்தீன் அமெரிக்கப் பெண் எழுத்தாளர் இஸபெல் அலன்டே, ஆபிரிக்கப் பெண் எழுத்தாளர் மாயா ஆஞ்சலூ, பாப்லோ நெருடா போன்றோரின் எழுத்துக்கள் இப்படித்தான் தமிழ் வாசகரி டையேயும் பரிச்சயமாயின.

தமிழிலும் புதிய பரிசோதனை முயற்சிகள் பல மேற்கொள் ளப்பட்டன. நவீன தொழினுட்பம் என்ற சவாலைத் தமிழ்மொழி மிக இலாகவமாக எதிர்கொண்டது. "மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்ற கூற்றைப் பொய்ப்பித்துக் கணினி யுகத்திலும் தமிழ் கோலோச்சத் தொடங் கியது. இணையம் வரை தமிழுக்கு இறக்கை முளைத்தது. உலகம் ஒரு பூளோகக் கிராமம் என்ற அளவில் சுருங்கச் சுருங்க தமிழ் உள்ளிட்ட உலக மொழிகளில் எல்லாம் பரஸ்பரம் வெவ்வேறு நாடுகளின் இலக் கியப் பரிவர்த்தனைகள் நிகழ, இலக்கியம் மிகப்பரந்த தளத்தை எட்டிப் பிடித்தது.

இந்தப் பின்புலத்தில் நாம் அரபு இலக்கிய உலகு குறித்தும் சற்று நோக்கவேண்டியுள்ளது. அரபு இலக்கியத்துக்கு மிக நீண்டதொரு பாரம்பரியம் இருந்து வந்த போதிலும், பல நூற்றாண்டுகளாக அரபு லகுக்கு வெளியே அதன்பால் கவனம் ஈர்க்கப்படவில்லை. எனினும், 1988 ஆம் ஆண்டு எகிப்தின் நகூப் மஹ்ஃபோஸ் (Naguib Mahfouz) எனும் பிரபல நாவலாசிரியர் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றபின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலைமை மாறியது. மொரோக்கோவின் முஹம்மது பெர்ராதா (Mohamed Berrada), பலஸ்தீனரான கஸ்ஸான் கனாஃபானி (Ghassan Kanafani), எமில் ஹபீபி (Emile Habiby), அண்மைக் காலமாய் எழுதி வரும் பாஹா தாஹிர் (Bahaa Taher), யூசுஃப் ஸெய்தான் (Yusuf Zeydan), இப்ராஹிம் அல்கோனி (Ibrahim Al- Koni), அப்துல் றஹ்மான் முனீஃப் (Abdel Rahman Munif), நஜீப் கைலானி (Najib Kailani) போன்ற பலரது எழுத்துக்கள், குறிப்பாகப் புனைகதைகள் உலக அளவில் பேசப்படலாயின.

இவ்வாறாக, மேலைத்தேய நாடுகளில் லத்தீன் அமெரிக்க இலக்கியம், ஆபிரிக்க இலக்கியம் என்பவற்றுக்கு நிகரான மிக உன்னதமான ஓர் இடம் அரபு இலக்கியத்துக்கும் அளிக்கப்பட்டு வருகின்றமை கண்கூடு. என்றாலும், தமிழ் மொழியைப் பொறுத்தளவில் ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க எழுத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டதற்கு இணையான முக்கியத்துவம் அரபு இலக்கியத்துக்கு வழங்கப்படவில்லை என்பதே நிதர்சனம். தமிழிலே, எட்வர்ட் சயீட், இப்றாஹீம் துக்கான், அபூ சல்மா, சமீஹ் அல் காசிம், சுலஃபா ஹிஜாவி, மஹ்மூத் தர்வீஷ், சல்மா கத்றா ஜய்யூசி, அமினா கஸக் முதலானவர்களின் எழுத்துக்கள், பெரும்பாலும் கவிதைகள் ஆங்காங்கே தனியாகவும் தொகுதியாகவும் வெளிவந்துள்ளன என்பது இங்கே நினைவு கூறத்தக்கதே.

இந்தப் பின்னணியில், அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் "ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள்" என்ற இம் மொழியாக்க நூல், தமிழில் வெளிவரும் முதலாவது அரபுச் சிறுகதைகளின் தொகுப்பாகும் என எண்ணுகின்றேன். அந்த வகையில் இந்த நூல் மிகுந்த முக்கியத்துவம் உடையதாகின்றது. மஹ்மூத் சயீத், தௌஃபீக் அல் ஹக்கீம், தையிப் ஸாலிஹ், ஸகரிய்யா தாமிர், கஸ்ஸான் பாயிஸ் கனஃபானி, யாஸர் அப்தல் பாக்கி, ராபியா ரைஹான், ஜூக்ஹா அல் ஹார்த்தி, ஒமர் அல் கித்தி முதலான எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தனக்கே வாலாயமான அழகுத் தமிழ் நடையில் தந்திருக்கின்றார், அஷ்ரஃப் சிஹாப்தீன்.

இத்தொகுதியில் உள்ள சிறுகதைகள் யாவும் ஈராக், எகிப்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடான், சிரியா, பலஸ்தீன், யெமன், மொரோக்கோ, ஓமான், லிபியா முதலான அரபு நாடுகளின் வெவ்வேறு காலகட்டத்து மக்கள் வாழ்வியலைக் கதைக்களமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளன. சர்வாதிகார ஆட்சியின் இரும்புக்கரங்களில் எந்த நிமிடமும் எதுவும் நேரலாம் என்ற அச்சுறுத்தலான வாழ்க்கை, யுத்த நெருக்கடியில் எதிர்காலத்தைத் தொலைத்து நிற்கும் அவலம், மதத்தின் பெயரால் சமூகத்தில் புரையோடிப்போயுள்ள சடங்கு சம்பிரதாயங்கள், போலிப் பித்தலாட்டங்கள், நிலப்பிரபுத்துவச் சுரண்டல்கள், காலாகாலமாக மக்கள் மத்தியில் வேரூன்றியுள்ள மூடநம்பிக்கைகள், அடக்குமுறை ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தின் குரல், கலாசாரம் என்ற புனைவுகளின் பெயரில் நிலவும் பெண்களுக்கெதிரான அடக்குமுறைகள் என்று இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள சிறுகதைகளின் பேசுபொருள் பலதரப்பட்டதாக அமைந்துள்ளது.

இவற்றுள் அனேகமான கதைகள் நம்முடைய மண்ணுக்கும் பொதுவான சில பண்புக்கூறுகளைத் தன்வயப்படுத்தியனவாக இருக்கின்றமை நோக்கத்தக்கது. கற்பு, கன்னிமை போன்ற பெண்கள் சார்ந்த சமூக மதிப்பீடுகள் குறித்த கேள்வியை எழுப்பும் "சிவப்புப் புள்ளி". கிராமிய மக்களிடையே நிலவும் மூடநம்பிக்கைகளைப் பிரதிபலிக்கும் "சின்னச் சூரியன்", "கறுப்புப் பூனை", "திருமணம்" முதலான கதைகள், ஆட்சியாளரின் எதேச்சதிகாரப் போக்கை, அடக்குமுறைகளை, சித்திரவதைகளைப் பதிவுசெய்யும் "விசர்நாய்க்கடி", "நெடுநாள் சிறைவாசி", போரின் அவலங்களைச் சித்தரிக்கும் "புகையிரதம்", "காஸாவிலிருந்து ஒருகடிதம்" என்பன இதற்கான எடுத்துக்காட்டுகளாகும்.

இந்தத் தொகுதியில் ஆசிரியர் நமக்குத் தந்துள்ள அரபுச் சிறுகதைகளில் விதந்துரைக்கத்தக்க எத்தனையோ சிறப்பம்சங்கள் இருப்பதை அவதானிக்கலாம். அரபுலக மக்கள் வாழ்வியலின் ஒரு பகுதியை, ஒரு நிகழ்வை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள இக்கதைகளின் வாயிலாகப் புலப்படுத்தப்படும் கலாசார அம்சங்கள் குறித்த புதிய தரிசனம் தமிழ்மொழி வாசகருக்குக் கிடைத்துள்ளது. அரபு மக்களைப் பொறுத்தவரை மறுமணம் என்பது சர்வசாதாரணமானது. அழகு, உயர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் முதலான காரணங்களுக்காய் ஒரு பெண் விதவையானதன் பின்னர் மீண்டும் மீண்டும் மணமுடிக்கப்படுவதுண்டு. இங்கு, "திருமணம்" கதையில் வரும் நாயகி ஸலாமா பத்துமுறை திருமணம் முடித்தவள் என்பது தமிழ் வாசகருக்கு முற்றிலும் விந்தையான செய்தியாய் அமையும் என்பது உறுதி. அவ்வாறே, ஓமானிய திருமணச் சடங்கு சம்பிரதாயங்கள் மனதை ஈர்க்கும் வகையில் இக்கதையில் இடம் பெற்றிருப்பது தனிச் சிறப்பாகும்.

தமிழ் வாசகர்கள் அரபு மக்களின் சமய அனுட்டானங்கள், நம்பிக்கைகள் பற்றிய அம்சங்களை எந்த இடையூறுமின்றிப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் இக்கதைகள் அழகுற மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பதும், தேவையான இடங்களில் உரிய அடிக்குறிப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதும் பயனுடைத்தாகும். ஜின்கள், பேய்கள், கெட்ட ஆவிகள் பற்றிய நம்பிக்கை, லைலத்துல் கத்ர் இரவு வணக்கம், கியாமுல் லைல் தொழுகை, அந்தந்த அரபுப் பிரதேசத்துக்குரிய உணவு வகைகள், ஆடையலங்கார முறைகள் என்பன இத்தொகுதியில் அமைந்துள்ள பல கதைகளில் சுவைபட இடம்பெற்றுள்ளன.

இக்கதைகளில் வரும் மாந்தர்கள் பலதிறப்பட்ட குணாதிசயங்கள், அவர்களின் உணர்ச்சிப் போராட்டங்கள் என்பன மிக அற்புதமாகப் படைக்கப்பட்டிருக்கின்றமையைப் பார்க்கும்போது இவை தமிழிலேயே எழுதப்பட்ட கதைகள்தாமோ என்ற எண்ணத்தையும் இடையிடையே ஏற்படுத்தத் தவறவில்லை.

மிகுந்த நகைச்சுவையாகவம் வித்தியாசமாகவும் படைக்கப்பட்டு நல்லதொரு படிப்பினையையும் தரும் "விற்பனைக்கான அற்புதங்கள்" சிறுகதை இறுதி வரை சுவாரஷ்யமாகவும் விறுவிறுப்பாகவும் நகர்த்திச் செல்லப்பட்டுள்ள விதம் அருமை. அவ்வாறே, இத்தொகுதியில் அமைந்துள்ள முதலாவது கதையான "விசர் நாய்க்கடி" இலும், இறுதிக் கதையான "நெடுநாட் சிறைவாசி" இலும் அதிகார வர்க்கத்தின் எதேச்சதிகாரப் போக்குக்கு எதிராக மிக நுண்மையாக இழையோடிச் செல்லும் எள்ளல் தொனியை அப்படியே தமிழுக்குக் கொண்டுவருவதில் மொழிபெயர்ப்பாளர் வெற்றி கண்டுள்ளார் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபு மக்கள் இயல்பாகவே கவித்துவமாகவும் உணர்ச்சிப் பெருக்குடனும் பேச்கூடியவர்கள் என்று கேள்வியுற்றுள்ளேன். இத் தொகுதியின் வாயிலாக அதனைத் தரிசிக்க முடிந்தது. இத்தொகுதியின் மணி மகுடமாய் இடம்பெற்ற "ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள்" கதையிலே, 'பெரிய பேரீச்சங் குலை உயரத்திலிருந்து கீழே விழும் சத்தத்தில் மட்டும் அவனது கவனம் ஈர்க்கப்பட்டது. மரத்திலிருந்து பேரீச்சங் குலைகளைத் தனது நீண்ட கூரிய கத்தியால் அறுக்கும் பையனை நோக்கி ஒரேயொரு முறை அவன் சத்தமிட்டுச் சொன்னான்: "கவனம்... மரத்தின் இதயத்தை அறுத்து விடாதே!"' என்ற வரிகளும், 'திருமணம்' என்ற சிறுகதையில், "ஓஹ்.. ஆண்டவனே... உன்னுடன் இருந்ததைப் போல் நான் வேறு எந்தப் பெண்ணுடனும் சந்தோசமாக இருந்ததில்லை ஸலாமா... நீ பெரும் இன்பம்... நீ ஒரு நன்கொடை.... எடுத்துக் கொள்... எனது மண்டூஸ்களை எடுத்துக் கொள்.... கழுதையை எடுத்துக் கொள்... பேரீச்ச மரங்களையும் எடுத்துக் கொள்... இவ்வளவு காலமும் நீ எங்கிருந்தாய் பெண்ணே..!" எனும் கூற்றும், 'சிவப்புப் புள்ளி' என்ற கதையின் நாயகி, "யார் கன்னிமையுள்ளவள், யார் கன் னிமையிழந்தவள் என்றெல்லாம் பேசும் அருவருக்கத்தக்க, பைத்தியக் காரத்தனமான செயலைத் தாங்கிக் கொள்ளும் அவலத்தை நினைத்துப் பாருங்கள்!" என்று குமுறியெழுவதும் ஒரு பானைச் சோற்றின் சில பருக்கைகள்தாம்.

அடுத்து, இக்கதைகளின் தலைப்புக்கள் வாசகரின் ஆவலைத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளன என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். அதுமட்டுமன்றி, இக்கதைகளில் இடம்பெறும் மனதை நெகிழச் செய்யும் அழகான வர்ணனைகள் படிப்போரின் சிந்தையை நிச்சயம் ஈர்க்க வல்லன. போரின் அவலத்தைச் சித்தரிக்கும் வகையில் அமைந்த, "அறுவைத் தொழுவத்துக்கு அருகில் உள்ள, அலைகளால் கொண்டுவரப்பட்ட, துருப்பிடித்த நத்தைக் கோதுகளால் நிறைந்த இறுகிய மணல் மேடாக காஸா எனக்குத் தோற்றமளித்தது. நோயுற்றிருக்கும் ஒருவனின் உறக்கத்தில் உள்ள மனக்கிலியை விட நோவினை தரக் கூடியதாக ஒடுக்கமான வீதிகளும் நீட்டிக் கொண்டிருக்கும் பல்கனி களும் கொண்ட காஸா இருந்தது. இந்த காஸா... செம்மறியாட்டுச் சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தையை தனது திசை நோக்கித் திருப்பும் ஊற்றுப் போல ஒரு மனித னைத் தனது குடும்பம், வீடு மற்றும் நினைவுகளை நோக்கி நகர வைக் கும் மறைமுகமான காரணிகள் யாவை...?" (காஸாவிலிருந்து ஒரு கடிதம்) என்ற வரிகளாகட்டும், ஒரு சிறுவனின் பார்வையில் சொல்லப்பட்டிருக் கும் "காலையில் குர்ஆன் ஓதி முடிந்ததும் எனது ஓதற் பலகையைச் சட்டெனப் போட்டுவிட்டு ஒரு ஜின்னைப் போல் வேகமாகத் தாயாரிடம் சென்று விடுவேன். மளமளவென்று எனது காலையுணவைச் சாப்பிட்டு விட்டு நேராகச் சென்று ஆற்றில் பாய்ந்து விடுவேன். நீந்திக் களைத்ததும் ஆற்றங்கரையில் அமர்ந்து ஆற்றின் சிற்றலைகள் கிழக்குப் பக்கமாக நகர்வதையும் அவை தடித்த அடிப்பகுதிகளைக் கொண்ட அக்கேசியா மரங்களின் பின்னால் மறைவதையும் உற்றுப் பார்த்தபடி அமர்ந் திருப்பேன். இராட்சத அக்கேசியா மரங்களுக்கப்பால் அரக்கர்கள் கூட் டம் வாழ்வதாக நான் கற்பனை செய்வேன். அவர்கள் எனது பாட்ட னாரைப் போல, மிக உயரமானவர்களாகவும் ஒல்லியானவர்களாகவும் வெள்ளைத் தாடியுடன் நீண்ட கூர்மையான மூக்கும் கொண்டவர் களாகவும் என் கற்பனையில் படமாக வருவார்கள்." (ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள்) என்னும் வரிகளாகட்டும் இக்கதைகளைக் கவித்து வத்தோடு நகர்த்திச் செல்கின்றன என்பதற்கான வெகுசில உதாரணங் களாகும். இவ்வாறான இனிய அழகிய கவிதைப் பாங்கான தமிழ் நடை யழகை இத்தொகுதி முழுவதும் நாம் கண்டு அனுபவிக்கலாம்.

எந்த ஓர் இலக்கியப் படைப்பும் அது சார்ந்த மண்ணின் மணத்தை, மக்களின் பண்பாட்டை, அதன் அழகைத் தனக்கே இயல் பான முறையில் பதிவு செய்திருக்கும். இப்பண்பாட்டுக் கூறுகளையும் அப்படியே சுவை குன்றாமல், மூலத்தின் இயல்புத்தன்மை திரிபடைந்து விடாமல் இன்னொரு மொழிக்குக் கொண்டு செல்லுதல் என்பது கத்தி மேல் நடப்பதான மிகப்பெரும் சவாலாகும். இதனைத்தான் "மூல மொழியில் உள்ள பிரதிகள் முற்றிலும் அவ்வாறே மொழிபெயர்க்கப்பட முடியாதவை என்று கூறுவதை விட, கூடுதலாகவோ குறைவாகவோ மொழி பெயர்க்கப்படக் கூடியவை" என்று கற்ஃபோர்ட் குறிப்பிடுகின் றார். மொழிபெயர்ப்பின் போது மூலமொழியின் பண்பாட்டம்சங்கள், அப்பிரதி சொல்லவரும் செய்தி முதலானவற்றுக்குக் கொடுக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவத்துக்குச் சற்றும் குறைவுபடாமல் இலக்கு மொழியின் வாக்கியவியல், நடையியல் அம்சங்களும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். பேராசிரியர் எம். ஏ. நுஃமான் குறிப்பிடுவது போல, "ஒரு நல்ல மொழிபெயர்ப்பு என்பது இலக்கு மொழியில் சுயமாக எழுதப் பட்டது போன்ற தற்புதுமையுடன் காட்சி தர வேண்டும்."

எனவே, ஒரு மொழிபெயர்ப்பாளர் தான் தேர்ந்தெடுத்த பிரதியை மொழிபெயர்க்கும் போது மிக நுண்ணிய ஒரு சமநிலைப் போக்கைக் கடைப் பிடிப்பவராக இருக்கும் நிலையிலேயே அவரால் ஒரு நல்ல மொழிபெயர்ப்பைத் தருவது சாத்தியமாகின்றது எனலாம். அந்த இலக்கை அடைவதில் அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார் என்பதையே இத்தொகுதியில் அமைந்துள்ள அவருடைய மொழியாக்கச் சிறுகதைகள் நமக்கு உணர்த்துகின்றன. ஆக மொத்தத்தில் இத்தொகுதியில் அமைந்துள்ள பத்துக் கதைகளும் முத்துக்கள்தாம் என்றால் மிகையன்று.

"ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் அனுபவத்தினைச் சான்று பகரும் ஆய்வறிவாளரைப் போன்று எழுத்தாளருக்கும் ஒரு சிறப்பான, குறியீட்டுப் பாங்கான பாத்திரம் உண்டு. இவ்வாறு சாட்சி பகர்வதன் மூலம் அந்த அனுபவத்திற்கு ஒரு பொது அடையாளம் இடப்படு வதுடன் பூகோள ரீதியாக மேற்கொள்ளப்படும் சொல்லாடலில் அது என்றென்றும் பொறிக்கப்படும்" என்று எட்வர்ட் சயீட் குறிப் பிடுவார். அந்த வகையில், பல்வேறு நாடுகளின், அவற்றின் மக்களின் அனுபவங்களை மற்றொரு மொழிக்குக் கொண்டு செல்லும் மொழி பெயர்ப்பாளருக்கும் அந்தச் சிறப்பு உண்டு என்பதில் ஐயமில்லை.

எனவே, அரபுச் சிறுகதைகளைத் தமிழுக்குத் தந்து, அரபு நாட்டு மக்களின் கனவுகளை, எதிர்பார்ப்புக்களை, ஆதங்கக் குமுறல் களை, சமுதாய விமர்சனங்களை, அவர்களின் அன்றாட வாழ்வியலில் இரண்டறக் கலந்துள்ள பண்பாட்டம்சங்களைத் தனக்கே உரித்தான ஆற்றொழுக்கான தமிழ்நடையில் உணர்வுபூர்வமாகப் பதிவுசெய்துள்ள அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் இந்த முன்முயற்சி தமிழ் இலக்கிய வரலாற்றில் முத்திரை பதிக்கும் என எதிர்பார்க்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்ற மற்றும் பல படைப்புக்களை அவர் தமிழுலகுக்குத் தரவேண்டும். அதற்குரிய நீண்ட ஆயுளையும் நிறைந்த ஆரோக்கியத்தையும் வளங்களையும் அல்லாஹ் அவருக்கு அருள வேண்டும் என்று மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கின்றேன்.

**லறீனா அப்துல் ஹக்**
பீ.ஏ.(சிறப்பு), எம்.ஃபில் (ஆய்வு மாணவர்)
முன்னாள் விரிவுரையாளர்,
மொழிபெயர்ப்புக் கற்கைகள்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.
26.10.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது முன் குறிப்பு

கவிதை இலக்கியத்தைப் போலவே அரபு மொழியின் கதை இலக்கியத்துக்கும் ஆழ வேரூன்றிய மிக நீண்ட ஒரு பாரம்பரியம் உண்டு.

ஆயிரத்தில் ஓர் இரவு அராபியக் கதைகள் அந்தப் பாரம்ப ரியத்தின் சிறப்பு மிக்க ஆதாரம். அப்பாஸிய கலீபாவான ஹாரூன் அல் ரஷீத் அவர்களது பெயர் கதைகளில் வருவதைக் கொண்டு ஏறக் குறைய அக்காலப் பிரிவின் கதைகள் என்று அவை கொள்ளப்படுகின் றன. கலீபா ஹாரூன் அல் ரஷீத் அவர்களின் ஆட்சிக் காலம் கி.பி. 786 முதல் 808 வரை என்று வரலாறு சொல்கிறது.

பிற்காலத்தில் ஆயிரத்தில் ஓர் இரவு அராபியக் கதைகளில் சேர்க்கப்பட்டிருந்த 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்', 'அலாவு தீனும் அற்புத விளக்கும்', 'இளவரசன் அகமதும் அவனது இரண்டு சகோதரிகளும்', 'சிந்துபாத்தின் கடற் பயணங்கள்' ஆகியன ஆயிரத் தில் ஓர் இரவு கதைகளுக்குள் அடங்காதவை என்று அறியப்பட்ட போதும் அவை அரபு நாட்டார் கதைகள் என அடையாளங் காணப் பட்டன. இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் இந்தக் கதைகள் இலத் திரனியல் சாதனங்களில் வலம் வருவதும் கதாபாத்திரங்கள் உயிர்த் துடிப்புடன் இருப்பதும் அரபுக் கதையின் சிறப்பைப் பறைசாற்றப் போதுமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1870இல்தான் முதலாவது அரபுச் சிறுகதை வெளியானதாக அறியக் கிடைக்கிறது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் எகிப்து, லெபனான், சிரியா ஆகிய நாடுகளிலிருந்து சிறுகதைகள் எழுதப்பட்டுப் பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவர ஆரம்பித்தன. இந்த எழுத்துக்கள் ரிவாயத் (தகவல் சொல்லுதல்), கிஸ்ஸா அல்லது ஹிக்காயா (கதை) என்ற வகையிலான எழுத்துக்களாகவே அமைந்திருந்தன. இந்த வகை எழுத்திலிருந்து அரபுச் சிறுகதையை நவீனச் சிறுகதை வடிவங்களுக்கு நகர்த்தியவர்களுள் முகம்மது ஹுஸைன் ஹைகல், மஹ்மூது தைமூர், தௌஃபீக் அல் ஹகீம், யூஸுஃப் இத்ரீஸ் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களுக்குப் பின்னால் ஸகரியா தாமிர், பாரிஸ் ஃபர்ஸுர், கத்தா அல் ஸமான் ஆகியோர் வருகிறார்கள்.

அரபுச் சிறுகதை வளர்ச்சி மூன்று கால கட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. 19ம் நூற்றாண்டுக்கும் 1914க்கும் இடையில் ஆரம்பக் கட்டம் என்றும் 1914க்கும் 1925க்குமிடையில் பரீட்சார்த்தக் கட்டம் என்றும் 1925லிருந்து இன்று வரையான காலம் வடிவத்துக்குள்ளான கட்டம் என்றும் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த இறுதிக் கட்டத்தின் முதல் படைப்பாளியாக மஹ்மூது தைமூர் கருதப்படுகிறார்.

எந்தவொரு இலக்கியமும் சர்வதேசக் கவனத்தை ஈர்க்க வேண்டுமாயின் அது மேற்கத்தைய மொழிகளுக்குள் கொண்டு செல்லப் படுவது அவசியமாகும். 1948லேயே நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட பலஸ்தீன அரபிகள், மன்னராட்சி அல்லது தொடர்ச்சியான அதிகாரத்தை வைத்திருக்கும் ஆட்சியாளர்களைக் கொண்ட அரபு நாடுகளின் ஜன நாயக விரோதப் போக்கை எழுதிய படைப்பாளிகள் தமது நாடுகளை விட்டு வெளியேறி மேற்கத்தைய நாடுகளில் தஞ்சம் புகுந்து அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் ஒரு சாரார் தொடர்ந்தும் அரபு மொழியிலும் மறு சாரார் தாம் தஞ்சமடைந்த நாடுகளின் மொழிகளிலும் எழுதி வருகிறார்கள். இந்த எழுத்துக்களின் இலக்கிய வளமும் அழகும் வலிமையும் உலகளாவிய கவனத்தைப் பெற்றிருக்கின்றது எனலாம்.

இந்தக் கவனம் மொத்தமாக அரபு இலக்கியத்தின் பால் உலகத்தின் கவனத்தைத் தொட்டிருக்கிறது. எனவே அரபு இலக்கியங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்து வேறு மொழிகளுக்குள் கொண்டு செல்கிறார்கள். அறபுச் சிறு கதையின் முன்னோடி என அழைக்கப்படும் மஹ்மூது தைமூரின் சிறு கதைகள்தாம் முதன் முதலாக மற்றொரு மொழிக்கு மாற்றம் பெற்றன என்று தெரிய வருகிறது. 1946ம் ஆண்டு அவரது சிறுகதைகள் சில வற்றை டெனிஸ் ஜோன்ஸன் டேவிஸ் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஒரு சிறு நூலாக வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து 1967ல் அரபுச் சிறுகதைகளை மொழி பெயர்த்துத் தொகுத்து வெளியிட்டுள்ளார். பின்னர் எகிப்தியச் சிறுகதைகளையும் மற்றொரு அரபுச் சிறுகதை மொழி பெயர்ப்புத் தொகுதியையும் முறையே 1978, 1983 ஆகிய வருடங்களில் வெளியிட்டுள்ளார். 2000ஆம் ஆண்டிலும் கூட 30 அரபுக் கதைகளை மொழி பெயர்த்து ஒரு நூலாகத் தந்துள்ளார். அரபுச் சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் டெனிஸ் ஜோன்ஸன் டேவிஸின் பங்கு மிக முக்கியமானது.

1969ல் சூடானைச் சேர்ந்த அற்புதமான எழுத்தாளரான தையிப் சாலிஹின் இரண்டு சிறுகதைகள் மற்றும் ஒரு நாவல் அடங்கிய தொகுதி The Wedding of Zain என்ற தலைப்பில் மொழி பெயர்த்து வெளியிடப் பட்டுள்ளது. இதிலுள்ள இரண்டு சிறுகதைகளில் ஒன்று 1962இலும் மற்றைய கதையான இத்தொகுதியில் தமிழில் இடம் பெற்றிருப்பதும் நூலின் தலைப்புக்குரியதுமான ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள் என்ற கதை 1966இலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

லண்டனைத் தளமாகக் கொண்டு 1998இல் ஆரம்பிக்கப்பட்ட 'பானிபால்' சஞ்சிகை அரபு இலக்கியங்களை ஆங்கில மொழிக்குக் கொண்டு வருவதில் பெரும் பங்காற்றி வருகிறது. அரபுக் கவிதைகள், சிறுகதைகள், நாவல் மற்றும் இலக்கிய விமர்சனங்கள், நேர்காணல்கள், அரபு மொழிப் படைப்பாளிகள் பற்றிய விபரங்கள், இலக்கியத் தகவல் கள் அனைத்தையும் இச்சஞ்சிகை ஆங்கிலத்தில் தருகிறது. அரபுப் படைப்பாளிகளுக்கும் உலகுக்குமிடையிலான மிகச் சிறந்த இலக்கியப் பாலமாக இந்தச் சஞ்சிகை விளங்குகிறது. இந்நூலுக்கான சில கதைகளை அச்சஞ்சிகை மூலம் பெற்றுக் கொள்ள முடிந்தது.

ஆங்கிலம் படித்த அரபுப் படிப்பாளிகளும் படைப்பாளிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபியில் வெளிவரும் படைப்புக்களைத் தேர்ந்து இப்போது ஆங்கிலத்திலும் தமக்குப் பரிச்சயமான வேறு மொழிகளிலும் மொழி பெயர்த்து வருகிறார்கள். அரபு மொழியில் எழுதப்பட்டு ஆங்கிலத்துக்கு மொழி பெயர்க்கப்பட்ட பத்துக் கதைகளையே தமிழ் மொழிபெயர்ப்புக்காக நான் தேர்ந்தெடுத்தேன்.

அரபுச் சிறுகதைகள் சிலவற்றை மொழி பெயர்க்க ஆரம்பித்த காரணத்தால் நான் அறிந்து கொண்ட தகவல்களையே மேலே குறிப்பிட்டேன். எனது தேடலுக்கு அப்பாலும் இன்னும் தகவல்கள் இருக்கலாம். 'வேற்று மொழிகளுக்குக் கொண்டு வரப்பட்ட அரபுப் படைப்புக்கள்' பற்றிய ஓர் ஆய்வை மேற்கொள்ளும் ஒருவரோ ஒரு கட்டுரையை எழுத விரும்பும் ஒருவரோ எதிர்காலத்தில் மேலதிகத் தகவல்களைத் தரக் கூடும். இப்போதைக்கு நான் இந்தக் கதைகளை மொழி பெயர்ப்பதுடன் என்னை மட்டுப்படுத்திக் கொள்கிறேன்.

வேற்று மொழிப் படைப்பு ஒன்றைப் படிக்கையில் அது பேசும் விடயங்களும் பேசப்படும் முறையும் நம்மைக் கவர்கின்ற போது நமது மொழிக்கு அதைக் கொண்டு வரும் ஆவல் தூண்டப்படுகிறது. எனவே மொழிபெயர்ப்பு ஒரு சுகானுபவமாக மாறிவிடுகிறது. இந்தக் கதைகளை நான் முதன் முதலில் படித்த போது கதைகளில் சொல்லப்படும் செய்திகளும் அவற்றைச் சொல்லிச் செல்லப் பயன்படுத்தப்படும் கலை நுணுக்கங்களும் வார்த்தைப் பிரயோகங்களும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. இந்தக் கலையழகும் நுணுக்கங்களும் எனது மொழிக்கூடாகவும் வெளிவரவேண்டும் என்ற ஆவலே என்னை இக்கதைகளை மொழி பெயர்க்கத் தூண்டின.

கஸ்ஸான் கனபானியின் கதை எழுப்பும் அதிர்வுகள் படிப்போரை ஆட்கொண்டு விடும் என்பதில் சந்தேகமேயில்லை. கதையைப் படித்து முடிந்தும் கூட அதன் தாக்கத்திலிருந்து யாராலும் உடனடியாக வெளிவர முடியாது. பலஸ்தீனர்கள் நவீன ஆயுதங்களுக்கு எதிரான ஒரு மகத்தான எதிர் ஆயுதமாக எழுத்தை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதை இக்கதை மூலம் நம்மால் உணர முடிகிறது. அதேபோல் மஹ்மூத் சயீத் எழுதிய 'புகையிரதம்' என்ற கதை ஏகாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியத்தால் நிர்மூலமாக்கப்பட்ட ஒரு தேசத்தை நான்கே நான்கு சிறார்களுக்கூடாகத் தரிசிக்கச் செய்கிறது. கதையில் ஒரு துளி இரத்தமோ அங்கமிழந்த நபரோ ஒரு துப்பாக்கியோ பற்றி ஒரு வார்த்தையேனும் பயன்படுத்தாமல் அழிக்கப்பட்ட தேசத்தின் அவலத்தைக் கண் முன்னே தந்து சயீத் நம்மை ஆச்சரியப்படுத்துகிறார்.

அரபுக் கதைகளின் மொழிபெயர்ப்புப் பெருமளவில் இணையத்தில் கிடைப்பதில்லை. அநேகமாகவும் அவை நூல்களாகவே வெளிவந்துள்ளன. ஆங்கிலத்தில் வெளிவந்த அரபுச் சிறுகதைத் தொகுப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் லண்டனில் வாழும் சட்டத்தரணி ஷர்மிலா ஜெயினுலாப்தீன், சகோதரி ஷைஃபா மலிக் ஆகியோர் உதவி புரிந்தனர். தொடர்ந்தும் மொழி பெயர்ப்பு முயற்சியில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை இவர்கள் எனக்கு ஏற்படுத்தித் தந்துள்ளனர். பேராதனைப் பல்கலைக் கழக மொழிபெயர்ப்புக் கற்கைகளுக்கான முன்னாள் விரிவுரையாளரும் தற்போது மொழிபெயர்ப்புத் துறையில் தனது முதுமாணிப் பட்ட ஆய்வை மேற்கொண்டிருப்பவருமான சகோதரி லரீனா அப்துல் ஹக் அவர்கள் இந்த நூலுக்கான மதிப்புரையை விரிவாகவும் சிறப்புடனும் மிகக் குறுகிய காலத்துள் எழுதி வழங்கினார்.

கலைத்துவமாக இருக்கவேண்டும் என்ற நினைப்பிலோ அரபு மொழியின் கலைத்துவத்தைக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற எண்ணத்திலோ என்னவோ சில மொழிபெயர்ப்பாளர்கள் ஆங்கிலத்தில் கொஞ்சம் சிக்கலான வசனங்களையும் சில இடங்களில் கையாண்டிருந்தார்கள். இவ்வாறான இடறல்களைச் சரி செய்து கொள்ளக் கவிஞர் அல் அஸூமத் அவர்களுடன் விரிவாகக் கலந்துரையாடி முடிவுக்கு வந்தேன். அதேபோல் அவ்வப்போது சில இடறல்கள் நேரும் போது களனிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஹரீரா இப்றாஹீம், எனது புதல்வி பாத்திமா அஷ்ஃபா ஆகியோர் கை கொடுத்தார்கள்.

நூலுக்குரிய அட்டைப் படத்துக்கான கருத்தையும் அதற்குரிய அடிப்படை எண்ணத்தையும் தந்தவர் என் நெஞ்சுக்கு நெருக்கமான நண்பரும் சமநிலைச் சமுதாயம் சஞ்சிகையின் ஆசிரியருமான ஜாபர் சாதிக் பாக்கவி அவர்கள். எனது நூல்களை மற்றவர் வியக்கும் வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிட்டுத் தரும் முனாப் அஸீஸ் அவர்களே அட்டைப் படத்தை வடிவமைத்துத் தந்ததுடன் இந்நூலையும் அச்சிட்டுத் தந்துள்ளார்.

இவ்வருடத்துள் இந்த நூலை வெளியிடும் எனது கனவை நனவாக்கியவர்கள் எனது சகோதரர் அஜ்வாத் சிஹாப்தீன் மற்றும் சகோதரி ஷைஃபா மலிக், நாச்சியாதீவு பர்வீன் ஆகியோர். இவர்களது உதவி இன்றேல் இந்த நூலை உரிய வேளை வெளிக்கொணர முடியாது போயிருக்கும்.

இவர்கள் அனைவரும் எனது இந்தப் பணிக்குத் துணை நின்ற வர்கள். எனது முயற்சி வெற்றியடையத் தங்களது காலத்தைச் செலவிட்ட வர்கள். உதவி ஒத்தாசை புரிந்தவர்கள். எனவே இவர்கள் அனைவ ரையும் என்றும் அன்புடன் நான் நெஞ்சில் சுமக்கிறேன்.

**அஷ்ரஃப் சிஹாப்தீன்**

01.11.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | விசர் நாய்க் கடி | 01 |
| 02. | புகையிரதம் | 19 |
| 03. | விற்பனைக்கான அற்புதங்கள் | 39 |
| 04. | ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள் | 51 |
| 05. | சின்னச் சூரியன் | 61 |
| 06. | காஸாவிலிருந்து ஒரு கடிதம் | 72 |
| 07. | கறுப்புப் பூனை | 82 |
| 08. | சிவப்புப் புள்ளி | 97 |
| 09. | திருமணம் | 104 |
| 10. | நெடுநாள் சிறைவாசி | 113 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஹ்மூத் சயீத்

மஹ்மூத் சயீத் (பி. 1939) ஈராக்கின் புகழ்பூத்த எழுத்தாளர். இருபதுக்கும் மேற்பட்ட நாவல்களையும் சிறுகதைத் தொகுதிகளையும் எழுதியுள்ளார். ஈராக் அரசுக்குத் தலையிடியாக விளங்கிய இவரது சில நாவல் கள் தடை செய்யப்பட்டன. அவரது எழுத்துக்களுக்காகப் பலமுறை விசாரிக்கப்பட்டவர். அதே போல் சிறை வாசமும் அனுபவித்தவர்.

சிறுவர் இலக்கியம் உட்படத் தனது படைப்புக்களுக்காக விருதுகளைப் பெற்றுள்ளார். I Who Witnessed என்ற சயீதின் நாவல் ஆங்கிலத்திலும் இத்தாலி மொழியிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நூலில் இவரது இரண்டு சிறுகதைகள் உள்ளன. Figure in Repose என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் பொஸ்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஷாகிர் முஸ்தபா மொழிபெயர்த்த கதை 'விசர் நாய்க்கடி' என்ற தலைப்பில் இடம் பெறுகிறது. The Train என்ற கதையை ஆங்கிலத்தக்குக் கொண்டு வந்தவர் விபரம் கிடைக்க வில்லை. முதலாவது கதை சதாம் ஹுஸைன் ஆட்சி யையும் இரண்டாவது கதை அவருடைய ஆட்சிக்குப் பின்னரான ஈராக்கையும் தத்ரூபமாக நம் கண்முன்னே கொண்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசர் நாய்க் கடி

"வாயில் மணி ஒலிக்கிறது... உனக்குக் கேட்கிறதா?"

அவர் மனைவியிடம் கேட்டார். அவரது கண்கள் மூடி யிருந்தன.

"பேசாமல் தூங்குங்கள்; அது அதான் ஒலி!"

அவள் அவருக்கு முதுகைக் காட்டியபடி புரண்டாள். மிருதுவான படுக்கைக்குள் தனது தலையைப் பதித்துக் கொண்ட போது காலைத் தொழுகைக்கான அதானின் எதிரொலி தேய்ந்து வந்து காதில் விழுந்தது.

அந்த அதானின் வார்த்தைகள் சொல்லின:-

"தூக்கத்தை விடத் தொழுகை சிறந்தது!"

"இது அதிசயமாக இருக்கிறது... இன்னும் ஐந்து மணி கூட ஆகவில்லை! என்ன அதான் இது? யாருக்கோ நேரம் தப்பி விட்டது!"

"நீங்கள் பேசாமல் தூங்க மாட்டீர்களா? அது ஷாபிஈ அதான்! மற்றவர்களை விடச் சற்று முன்னதாகத்தான் ஒலிக்கும். என்னைச் சற்றுத் தூங்க விடுங்கள்!"

புலம்பியவாறு அவள் அவரது தலைக்கு மேலாக மிருது வான போர்வையை இழுத்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02

வாயில் மணி மீண்டும் ஒலித்தது. அவர் போர்வையை விலக்கிவிட்டுச் சொன்னார்...

"நான் வாயில் மணி என்கிறேன்... நீ ஷாபிஈ அதான் என்கிறாய்...!"

அவள் எழுந்து மின் விளக்கை எரியவிட்டாள். 'இந்த வேளையில் யாராக இருக்கும்?' அவள் யோசித்தபடி எழுந்து உட்கார்ந்தாள். இப்போது என்ன செய்வதென்று அவளுக்குப் புரியவில்லை. அவரும் எழுந்து அமர்ந்தார். அவரது முகத்தில் நித்திரையின் ரேகைகள் முழுதாய்ப் படர்ந்து கிடந்தன.

"கதவைத் திறந்து விட வேண்டாம்" என்று அவரிடம் சொன்னவள், "கீழ்த் தளத்துக்குப் போகவும் வேண்டாம்" என்றாள்.

"இது சரியான வேலையா?" என்று அவளைத் திருப்பிக் கேட்டார்.

"அவர்களைப் பற்றி யோசிக்க வேண்டாம். நீங்கள் இங்கே இருங்கள்!"

"அவர்கள் தொடர்ந்து மணியை அழுத்துகிறார்கள். வீட்டில் யாருமில்லை என்று தெரிந்து கொண்டால் வீட்டை உடைத்துப் புகுந்து நம்மைக் கொலை செய்யவும் கூடும்"

அவர் தன் இரவு மேலாடையை எடுத்து அணிந்தார். அது இடுப்பில் இறுக்கமாகக் கட்டப்பட்டு விட்டதா என்று ஒரு முறை சரிபார்த்தார். லாச்சியை இழுத்துக் கைத்துப்பாக்கியை எடுத்தார். அவள் அவரைப் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இதை எப்படிப் பயன்படுத்துவது என்று உனக்குத் தெரியுமா? விசையை அழுத்தினால் போதும். அபூ காலித் சொல்லித் தந்தான். இது ஒன்றும் பெரிய ரொக்கட் இயக்கும் விடயமல்ல..."

"நானும் உங்களுடன் கீழே வருகிறேன்... கீழே கவனமாகச் செல்ல வேண்டும்... உங்களுக்கு அறுபது வயதாகிவிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை மறந்து விடவேண்டாம்."

அவரது அழுத்தமான காலடி வைப்பு அவரது அசைவைக் காட்டியது.

"கதவைத் திறக்க வேண்டாம். இப்படித்தான் உம்மு சமியின் வீட்டுக் கதவைத் திறந்ததும் அவர்கள் சுட்டார்கள்..."

" எனக்குத் தெரியும்!"

"சில வேளை அவர்கள் ஏதோ ஒரு பக்கத்தால் வீட்டுக்குள் நுழைந்து ஒளிந்திருக்கவும் கூடும். நகைக் கடைக்காரர் அபூ அமீரின் வீட்குக்குள் நுழைந்தது போல கார் நிறுத்துமிடத்தில் ஒளிந்துமிருக்கலாம்; அவர்கள் அனைவரையும் வெட்டிக் கொன்றார்கள், தெரியுமா?"

அவருக்கு ஒரே குழப்பமாக இருந்தது. கைத்துப்பாக்கியின் பாரம் உறுத்தியது. 'பாரமற்ற ஒன்றை அபூ காலித் தந்திருக்கக் கூடாதா? சிறியதாக இருந்தால் இதை விட அரைப் பங்குப் பாரம் தான் இருக்கும்; உள்ளங்கைக்குள்ளேயே வைத்திருக்கலாம். ஒட்டோமன் சகாப்தத்துக் கைத்துப்பாக்கியை அவன் எனக்குத் தந்திருக்கிறான். குறைந்தது இரண்டு கிலோ பாரம் இருக்கும். "ஆமாம் டாக்டர்... பாரம்தான். ஆனால் நிச்சயமானது"' என்று சொன்னான்.

"நான் எல்லா விளக்குகளையும் எரிய விடுகிறேன்: நீ வீட்டின் பகுதிகளையும் கார் நிறுத்துமிடத்தையும் மெதுவாகப் பார்!"

"ஆனால் நான் கீழே இறங்கும் வரையும் கதவைத் திறக்க வேண்டாம்!"

அவர் எல்லா விளக்குகளையும் எரிய விட்டார். மேல் தளம், கீழ்த்தளம், கார் கராஜ், வீட்டு முன்புறம் எல்லாம். அவள் படியிறங்கும் சத்தம் கேட்டதும் கதவைத் திறக்கச் சென்றார். ஜனவரி மாதத்தின் குளிர் காற்று அவரது உடம்பின் ஒவ்வொரு எலும்புக்கூடாகவும் துளைத்துச் சென்று கொண்டிருந்தது. கதவை முற்றாகத் திறக்க முடியாத படியான சங்கிலிக் கொக்கியை மாட்டினார். துப்பாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அவரது கையில்தான் இருந்தது. கரிய இருளுக்கூடாக இன்னும் அதானின் சத்தம் விட்டு விட்டு ஒலித்துக் கொண்டிருந்தது. அவரது மனைவி வாட்டமுற்ற முகத்துடன் அவர் அருகே வந்து, 'இந்த வேளையில் வந்தவர்கள் யார்?' என்று கிசு கிசுத்தாள். அவர்கள் கதவை அடைந்ததும் அவள் கதவின் சாவியைத் தனியே பிரித்தெடுத்தாள். அவர் விறைத்துப் போன தன் கரங்களால் கதவை மெதுவாகத் திறந்தார். நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு மனிதன் இராணுவ உடையில் நின்றிருந்தான். அவனது முகத்தில் வலிந்து வரவழைக்கப் பட்டிருந்த சிரிப்பையும் மீறிக் களைப்புத் தெரிந்தது. கறுப்பு நிற மேர்ஸிடஸ் கார் ஒன்று வீட்டுக்கு முன் நிறுத்தப்பட்டிருந்தது.

"பயப்படவேண்டாம். கதவைத் திறவுங்கள்!"

"நீங்கள் யார்?"

"ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து..."

அவரது இதயம் புதிதாகத் துடித்தது... சூடான இரத்தம் தன் உடல் முழுவதும் பரவுவதை அவர் உணர்ந்தார். வியர்வை, குளிரை விரட்டியடித்தது. அவரது மனைவி தன்னுடைய நடுக்கத்தைக் கட்டுப்படுத்த அவரில் சாய்ந்து கொண்டாள். அந்த மனிதன் என்ன சொன்னான் என்பதை நினைத்துப் பார்த்தாள்; முடியவில்லை!

"நீங்கள் பயப்படுவதற்கு எந்தக் காரணமும் கிடையாது."

- இராணுவத்தினனின் குரல் குளிர் உறைந்த கதவு வழியாக வந்தது.

"ஒன்றுமேயில்லை... கொஞ்ச நேரம்.... எங்களுடன் வாருங்கள்...!"

"எங்கே போக?"

"ஜனாதிபதி காரியாலயத்துக்கு!"

"விடியும் வரை ஏன் தாமதிக்கக் கூடாது"

அவள் தளைந்த குரலில் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தினனின் புன்னகை மறைந்தது. அவன் எதற்காக வந்தானோ அதிலேயே கண்ணாயிருப்பது அவனது பேச்சில் வெளிப் பட்டது.

"அதிமேதகு ஜனாதிபதி அவர்கள்தான் இவரை அழைத்து வரும்படி சொன்னார்!"

அவர், அழுகையைக் கட்டுப்படுத்தப் போராடிக் கொண்டி ருக்கும் தனது மனைவியைப் பார்த்தார்.

"எதற்காக?"

"அது ஏதோ ஒரு ஐந்து நிமிடத் தேவைக்காக!"

உங்களுக்கு விளக்கம் சொல்வதற்கு அவசியம் இல்லை யென்ற தொனியில் கதவுக்கு அப்பால் நிற்கும் மனிதன் உரையாடி யதை உணர்ந்து அவர் திணறினார். அவர் இணங்கிச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை இருள் கலையாத குளிர் மிகுந்த காலைப் பொழுதில் வந்திருக்கும் அந்த மனிதன் அறிவான். அவர் அதிக நேரம் அமைதியாக இருக்கவில்லை.

"நான் உடை மாற்றி வரும்வரை சற்றுப் பொறுத்திருங்கள்"

அவரது குரல் பயமும் தளர்ச்சியும் கலந்து வெளிவந்தது.

"போதிய நேரத்தை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்!"

அவர் வீட்டுக்குள் திரும்பி நடந்தார். சட்டெனக் குளிர் தாக்கியதை உணர்ந்தார். தனக்கு முன்னால் நடந்து செல்லும் மனைவி மிகக் குழப்பமான மன நிலையில் இருக்கிறாள் என்பது பார்த்த மாத்திரத்திலேயே அவருக்குப் புரிந்தது.

"நீங்கள் போகவா போகிறீர்கள்?"

அவர்கள் சற்று உள்ளே வந்ததும் கேட்டாள்.

"அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று யாருக்குத் தெரியும்? அவர்கள் நம்மைக் கண்காணித்துக் கொண்டிருந் திருக்கிறார்கள். டாக்டர் இப்றாஹீம் நேற்று இங்கு வந்திருந்தார் என்பது அவர்களுக்குத் தெரிய வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறார்கள். அவரது மச்சானும் அவரது மூத்த மகனின் மாமனாரும் டாக்டர் இப்றாஹீமின் கண்காணிப்பில் இருந்த போது இறந்திருக்கிறார்கள். டாக்டரை அவர்கள் போக விடுவார்களா? நீ அதை நம்புகிறாயா? இது ஐரோப்பா அல்ல. நமது நாகரிக மற்ற கனவுகள் போல் அல்ல."

"அவரை ஏன் தண்டிக்க வேண்டும்? அவர் என்ன செய்து விட்டார்? அந்தக் கதையைப் பலமுறை என்னிடம் சொல்லியிருக்கிறார். முழுக் கதையையும் அவர் உங்களிடம் சொல்லும் போது நீங்கள் சிரித்தீர்கள். உறவினருக்கு நாய் கடித்து நாற்பது நாட்களுக்குப் பிறகுதான் அவரை அழைத்து வந்தார்கள். காப்பாற்றுவதற்கு அவரால் என்ன செய்ய முடியும்? வைரஸ் கிருமிகள் நாய் கடித்தவரின் நரம்பு மண்டலம் முழுவதையும் தாக்கியிருக்கின்றன."

அந்தக் கதையைச் சொன்ன போது டாக்டர் இப்றாஹீமின் முகம் எப்படியிருந்தது என்பதை அவர் கற்பனை செய்து பார்த்தார். பரிவுடன் அதைக் கேட்டுக் கொண்டிருந்த தனது மனைவி வாதியாவின் முகத்தையும் அவர் கற்பனையில் கொண்டு வந்தார். குடியரசுப் படை வீரர்கள் அவரை அழைத்து வந்த போது போர் முனைக்கு அந்த வைத்தியசாலை மாற்றப்பட்டு விட்டதோ என்ற சந்தேகம் ஏற்பட்டதாக டாக்டர் இப்றாஹீம் சொல்லியிருந்தார். இராணுவக் கவச வாகனங்கள் மற்றும் ஜனாதிபதியின் படையணி ஆகியன அவரை அழைத்து வந்திருந்தன. அவற்றின் சைரன் ஒலி காதுகளைச் செவிடாக்கி விடக் கூடியவை. ஹோர்ன் சத்தம் வெறுப்பூட்டக் கூடியது. இராணுவத்தினராலும் ரைபிள்களோடு நின்றிருந்த விசேட படையினராலும் வைத்தியசாலை கைப்பற்றப் பட்டதைப் போல அத்தனைப் பேர் நிரம்பி வழிந்தார்கள்.

'தோழர் ரக்கான் மிஹ்கான் மிஸ்:பான், அதிமேதகு ரக்கான் மிஹ்கான் மிஸ்:பான், லெப்டினன்ட் ஜெனரல் ரக்கான் மிஹ்கான் மிஸ்:பான்' என்ற பெயரையே அந்த இடத்தில் எல்லோராலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கக்கூடியதாக இருந்தது. அவரை உங்களுக்குத் தெரியுமா என்று டாக்டர் இப்றாஹீம் கேட்ட போது நாங்கள் எல்லோரும் சிரித்தோம். ஒரு மாடு மேய்ப்பவனை இரவோடு இரவாக லெப்டினன்ட் ஜெனரலாக்கியதாக ஒரு கதை நிலவுவதை நாம் அறிவோம்.

ஒரு நாள் டாக்டர் இப்றாஹீம் சொன்னார்:-

"ஒரு நாள் நோயாளிகளைப் பரீட்சிக்கும் அறைக் கதவு உதைத்துத் திறக்கப்பட்டது. விசேட படையின் கேர்ணல் அவ்வழியாக வந்தார். அப்போது ஒரு மூதாட்டியை நான் பரிசோதித்துக் கொண்டிருந்தேன். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. என்னை ஒரு திமிர்ப் பார்வையால் நோக்கினார் அவர். நான் மூதாட்டியைக் கைவிட்டு அவருடன் வெளியேறினேன். நடை வழி இராணுவத்தினரால் நிறைந்து காணப்பட்டது. அந்தக் கூட்டத்துக்குள் ஒருவர் நுழைந்து செல்வதுகூடக் கஷ்டமானது. ரக்கான் மிஹ்கான் மிஸ்:பானை நாங்கள் காணச் செல்லும் வழியில், 'இராணுவத்தினரை வைத்தியசாலையை விட்டு வெளியேற உத்தரவிடுமாறு' கேர்ணலிடம் கோரினேன். 'அவர்கள் அவசியப்படும் போது வெளியேறிவிடுவார்கள்' என்றும் 'நாம் நமது வேலையைக் கவனிக்க வேண்டும்' என்றும் பதில் சொன்னார் கேர்ணல். நாங்கள் அங்கு சென்ற போது மிஸ்:பான் வெளியேறிக் கொண்டிருந்தார்."

□□□

வாயிலிருந்து வீணீர் வழிந்து கொண்டிருந்தது... கண்கள் இரத்தச் சிவப்பாகியிருந்தன... அவருக்கு அதியுச்சக் காய்ச்சல் இருந்தது... அவரது உறவினர்கள் சொன்னார்கள்... அவர் அவரால் முடிந்த எல்லோரையும் கடித்திருந்தார்... அவரது மனைவி, அவரது இரண்டு புதல்வர்கள், அவரது மகள்.. மற்றும் சில மிருகங்களையும் - அதாவது ஒரு நாய், ஒரு குதிரை ஆகியவற்றையும் கடித்திருந்தார். அவர் மயங்கும் வரை ஓர் அறையில் அவரைப் பூட்டி வைத்திருந்தார்கள். அவருக்கு முதலில் சிகிச்சை வழங்க வேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்த் தடுப்பூசி மருந்தை ஜோர்தானிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் அன்றே கொண்டு வந்தார்கள். அவரது நான்கு மனைவியர், அவர்களது பிள்ளைகள், மற்றும் அவரது முப்பத்து ஏழு பேரப் பிள்ளைகள் அனைவருக்கும் தடுப்பூசி மருந்தேற்றினேன்.

ஜனாதிபதியின் தோட்டத்துக்கு நானே சென்றேன். பல வகையான கால் நடைகள் அங்கு நிறைந்திருந்தன. அவர் இரண்டு தினங்களில் இறந்து விடுவார் என்றும் தடுப்பு மருந்து ஏற்ற வேண்டும் என்றும் அவர்களுக்கு நான் சொன்னேன். அவரை அங்கிருந்து அப்புறப்படுத்து மாறு அவர்கள் என்னை வற்புறுத்தினார்கள். நான் என்னிடமிருந்த ஆவணங்களில் அவரது புதல்வர்களின் கையெழுத் துக்களைப் பெற்றுக் கொண்டேன்.

"ஆனால் அவர்கள் டாக்டர் இப்றாஹீமின் பின்னால் ஏன் செல்கிறார்கள்? உங்களுக்குத் தெரியாதா?"

"நீ மிகைப்படுத்துகிறாய்... வைத்தியசாலையிலிருந்து நேற்று டாக்டர் இப்றாஹீம் போனில் பேசினார். ஒரு தொகை ஜோக் சொன்னார். நாங்கள் சிரித்து மகிழ்ந்தோம்"

"அவர்கள் ஏன் உங்களைத் தேடி வரவேண்டும், அதுவும் இந்த அகாலப் பொழுதில்?"

"எனக்கு எப்படித் தெரியும்?"

"இவ்வளவு பிரச்சினையும் உங்களால்தான். இங்கிருந்து போய் வெளிநாட்டிலிருக்கும் நமது பிள்ளைகளுடன் இருப்போம் என்று பத்து வருடங்களாக உங்களைக் கெஞ்சிக் கொண்டிருக்கிறேன். உங்களது நண்பர்கள் எல்லோரும் போய் விட்டார்கள். இங்கு நாம் வாழ்வது ஒரு வாழ்க்கையா? ஒரு நாளைக்கு பலநூறு தடவை செத்துப் பிழைக்கிறோம். நாம் எதற்காக இங்கு இருக்க வேண்டும்?"

அவர் தனது 'கோட்'டை எடுத்தார். உடைகளை அமைதியாக அணிந்தார். கடுஞ்சிவப்பு நிறத்தினாலான கோடுகள் கொண்ட நீல நிலக் கழுத்துப் பட்டியை அணிந்தார். கொஞ்சம் வாசனையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசிக் கொண்டார்.

"அவர்கள் உங்களை என்ன செய்யப்போகிறார்கள்?"

அவள் அழ ஆரம்பித்தாள்.

அவருக்குப் பிரியாவிடை கொடுக்கும் போது அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். இப்போது அவளால் குளிரை உணர முடியவில்லை. கதவுக்குப் போடும் பூட்டு மற்றும் சங்கிலியை எடுத்துக் கொள்ள அவள் அவகாசம் எடுதது்க் கொண்டாள். பூட்டு இப்போது குளிரில் இறுகிப் போயிருக்கும். அவளை உறுத்திய தனிமை கதவருகே அவளைச் சற்றுத் தாமதப்படுத்தியது. மேர்ஸிடஸ் அவரை ஏற்றிக் கொள்ள, இரண்டு பாதுகாப்பு வாகனங்கள் பின் தொடர்ந்தன. இந்த இரண்டு வாகனங்களும் எங்கிருந்து வந்தன என்பது அவளுக்குத் தெரியாது. அவள் மீண்டும் அழ ஆரம்பித்தாள்.

புறப்படுவதற்கு முன்னர் காருக்குள் இருந்த அவரது புன்னகையும் பார்வையும் கையசைவும் அவளது மனதில் நிரந்தர மாகத் தங்கி விட்டிருந்தன. அவை அவளுக்கு நம்பிக்கையைக் கொடுத்தனவா? அல்லது கசப்பான பிரிவை உணர்த்தினவா? தனக்கு எதுவும் நேராது என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது போல் அவர் இருந்தார். அதனால்தான் அவர் புன்னகைத்திருக்க வேண்டும். அவர் திரும்பி வருவதற்கான சைகை அது. அவளுக்கு அதில் நம்பிக்கை இருந்தது.

இராணுவத்தினன் அவரது ஆசனப் பட்டியை அணிந்து கொள்ளப் பணித்தான். அவர் ஆச்சரியமாகப் பார்த்த போது 'அது மேலிடத்து உத்தரவு' என்றான். பின்னர் தனது காற்சட்டைப் பையி லிருந்து முகத்தை மூடும் அங்கியை எடுத்து அவரிடம் கொடுத்து முகத்தை மூடிக் கொள்ளுமாறு பணிவுடன் சொன்னான். கைவிலங்கு மாட்டாமல் விட்டார்களே என்பது அவருக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. பிள்ளைகளை விட்டுத் தூரத்தில் வசிக்கும் இந்த வாழ்க்கையில் அவள் அவர் மேல் வைத்திருக்கும் கவனத்தைப் போல அவர் தன்மேல் கவனம் கொண்டதில்லை. ஆனால் இப்போது தனிமையும் பயமும் ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் காணாமல் போனவராக மாறினால் அவள் நிச்சயம் வலுவிழந்து விடுவாள். வாழ்க்கை என்பது ஊறுகளை ஏற்படுத்தும் புரிய முடியாத சதி வலை. ஆண் என்று சொல்லிக் கொள்வது கூட மடத்தனம்தான். சில மணி நேரங்களுக்கு முன்னர் அவர் நாட்டின் முக்கியமான வைத்தியசாலைகளினது பணிப்பாளரும் உரிமையாளரு மாக இருந்தார். ஆனால் இப்போது முகம் மூடப்பட்டு அறுவைக்குக் கொண்டு செல்லப்படும் ஆடு போல ஆகிவிட்டிருக்கிறார்.

கார் அதன் அதிகாரத்தை அந்த இருள்பிரியாக் காலையில் வேகம் பிடித்துக் காட்ட ஆரம்பித்த போது அவருக்குப் பயம் ஏற்பட் டது. ஆசனப் பட்டியை அவர்கள் ஏன் போட்டுக் கொள்ளச் சொன் னார்கள் என்பது இப்போது அவருக்குப் புரிந்தது. அந்த வாகனத்தின் வேகம் பாதைச் சட்ட விதிகளை மீறுவது மட்டுமன்றித் தப்பிச் செல்வதற்கு வாய்ப்பற்றவர்களின் வாழ்வின் மீதும் மீறிக் கொண்டி ருப்பதை உணர்த்தியது. அவர் எவ்வளவு தூரம் பயணம் செய்தார் என்று தீர்மானிக்க முடியவில்லை. முகமூடி நீக்கப்பட்ட போது இருபது நிமிடங்களுக்கு முன்னர் பார்த்த அதே முகத்துடன் அந்த இராணுவத்தினன் தோற்றமளித்தான்.

> "நீங்கள் எதிர்கொள்ளும் எந்தவொரு விடயத்தின் போதும் எதுவும் பேச வேண்டாம். நேரடிக் காட்சிக் கமராக்கள் எல்லா இடங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன. நான் சொல்வதைப் புரிந்து நடந்து கொள்வீர்கள் என்று நம்பு கிறேன்"

- காரிலிருந்து அவர் இறங்குவதற்கு முன்னர் அவன் சொன்னான்.

அவரது பார்வையில் அவன் ஒரு பிழையான நபராக இல்லாமல் நம்பத் தகுந்தவனாகத் தெரிந்தான்.

அது வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படும் இடம் போலத் தோற்றமளித்தது. முழுவதும் கொங்கிறீற்றினால் வார்க்கப்பட்ட கரிய சாம்பல் நிறக் கட்டடத்துள் மஞ்சள் நிற மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அது ஓர் அழுத்தமான சூழலாக இருந்தது. பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு வகையான ஒரு தொகைப் புதிய கார்கள் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அந்த இடம் போர் அல்லது வியாபாரம் ஆகியவற்றின் சாயல் தொடாத இடம் போலத் தோன்றிற்று. அநேக மாக அவர் ஐந்து நிமிடமளவில் தரித்து நின்றார். அங்கு வீசிய இதமான குளிர்க் காற்று அந்த இடம் புறநகர்ப் பகுதியில் அமைந் திருப்பதற்குச் சான்று பகர்வதாயிருந்தது. அவன் தனக்கு முன்னால் அவரை நிற்கப் பணித்தான்.

சில நிமிடங்களின் பின்னர் லிஃப்டுக்கு முன்னால் அவர்கள் தரித்து நின்றனர். சாம்பல் நிற உலோக லிஃப்டின் பொத்தான்களை அவன் அழுத்தினான். அந்த லிஃப்ட் விசாலமானதாகவும் சூடாகவும் இருந்த அதே வேளை அந்த இடம் அவருக்குப் பரிச்சயமான ஓர் இடம் என்பதைப் போன்ற உணர்வையும் ஏற்படுத்தியது. இருந்த போதும் அது எந்த இடம் என்று அவரால் நினைவுக்குக் கொண்டுவர முடியாதிருந்தது. அதன் பக்கங்கள் கடினமான பலகைகளாலும் கண்ணாடிகளாலும் ஆனவையாக இருந்தன. தொல்பொருளியல் காட்சியகத்திலிருப்பது போன்ற சலிப்புத் தரும் படங்கள் சிலவும் இருந்தன. அவர் இருவருடங்களுக்கு முன்னர் தங்கிய ஐந்து நட்சத்திர ஹோட்டலிலும் இதே மாதிரி ஒரு லிஃப்ட் இருந்ததல்லவா! என்னவொரு மறதி! லிஃப்டின் கதவு திறந்ததும் எதிரே நீண்ட ஒரு நடை வழி இருந்தது. சுவர்களில் புகழ் பெற்ற ஓவியங்கள். ‘இந்த இடம் எனக்கு ஏற்கனவே பரிச்சயமான இடம்’ என்ற உணர்வு மீண்டும் துளிர்த்தது. ஆனால் எங்கே... எங்கே... ?

“தயவு செய்து இந்த வழியாக...” இராணுவத்தினன் சொன் னான். அவனுக்கு முன்னால் குட்டையான, உருண்டை போன்ற கனமான ஒரு மனிதன். இராணுவத்தின் பச்சை உடையில் இருந்த அவன் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். முகத்தில் ரோமங்கள் இல்லை; உறைந்த தோற்றம்!

“டாக்டர் அல்லவா?” அவன் கேட்டான். அவனது குரல் சன்னமாக ஒலித்தது.

“ஆம்!” இராணுவத்தினன் பதில் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பார்வையற்றவருடன் எவ்வாறு நடந்து கொள்வது என்று அவருக்குத் தெரியாது. அந்த இடத்தில் இராணுவத்தினன் மறைந்து போனான். டாக்டருக்கு வழிகாட்டும் பொறுப்பைக் குட்டையான அந்தப் பார்வையற்றவன் ஏற்றுக் கொண்டு மற்றொரு நடை வழியூடு அழைத்துச் சென்றான். அந்த வழியும் கூட வெது வெதுப்பாக இருந்தது. எனவே 'கோட்'டைக் கழற்றிக் கைகளில் எடுத்துக் கொண்டார். ஒரு திருப்பத்தில் மாறி நிமிர்ந்த போது மற்றொரு லிஃப்ட் இருந்தது. வெகு லாகவமாக அவன் பொத்தானைச் சரியாக அழுத்தினான். 'இவன் உண்மையிலேயே பார்வையற்றவனா?' என்ற சந்தேகம் அவருக்குள் எழுந்தது.

"உள்ளே போகலாம்" என்றான் அவன். ஏற்கனவே அவர் வந்த லிஃப்ட் போலவே இதுவும் இருந்தது. இங்கு வருபவர்கள் நாம் ஒரே இடத்திலேயே சுற்றிக்கொண்டு நிற்கிறோம் என்ற எண்ணத்தை இது உருவாக்காதா? அந்த விடயம் முக்கியமானதல்ல. லிஃப்ட் ஏதோ ஒரு தளத்தில் நிற்கக் கதவு திறந்தது. அங்கே அவருக்காக மற்றொரு பார்வையற்ற மனிதன் நின்று கொண்டிருந்தான். முன்னர் வழி காட்டியவனை விட இவன் கொஞ்சம் உயரமாகவாவது இருக்கக் கூடாதா? அவனைப் பார்த்தவுடன் சந்தேகம் தோன்றும்படியாக இருந்தான் அவன். முன்னர் அழைத்து வந்தவனை அப்படியே அச்சில் வார்த்தாற் போல் இருந்தான் இவனும். சில வேளை இவன் அவனது சகோதரனாக இருப்பானோ? அவர்கள் சகோதரர்கள் இல்லா திருக்கலாம். ஆனால் ஒரே லிஃப்ட்டில் ஐந்து முறை வருவதில் உள்ள மர்மம்தான் புரியவில்லை.

ஒருவாறாக ஒரு தளத்தின் கீழ்ப் பகுதியில் வெளியிறங்கிய போது அங்கே டாக்டரை வரவேற்க ஒரு பார்வையற்றவர் காத்திருக்க வில்லை. முப்பது வயது மதிக்கத்தக்க வாட்டசாட்டமான ஒருவன் நின்றிருந்தான். அநேகமாக அவன் சேவகனாக இருக்க வேண்டும்; தன்னைத் தொடருமாறு சைகை செய்தான்.

தன்னை வழிகாட்டி அழைத்து வந்த பார்வையற்றவர்களது நினைவுகளை அறுத்தார். கீழ்த் தளத்துக்குச் செல்லும் சைகையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழித் தொடர்ந்தார். தான் ஓர் ஆடு போல இயங்கிக் கொண்டிருப் பதை உணர்ந்தார். தற்போது அவர் வந்து கொண்டிருந்த நடை வழி முடிவற்று வளைந்ததாக இருந்த போதும் மீண்டும் அது தனக்குப் பரிச்சயமான இடம் என்பதை உணர்வூட்டியது. சற்றுத் திறந்திருந்த கதவுகளூடாக நம்மை யாரோ அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவரது உள்ளுணர்வு தெரிவித்தது. எல்லாக் கதவுகளும் சற்றுத் திறந்த நிலையில் இருந்தன. யாராவது அங்கு துப்பாக்கி களைத் நீட்டிக் கொண்டு நிற்கிறார்களோ?

"தயவு செய்து இந்த வழியாக..."

அவருக்கு இடது பக்கத்திலிருந்த கதவு திறந்தது. அங்கு ஒரு பெரிய கழிவறையைக் கண்டார். அதற்குள் ஒரு பெரிய முகம் பார்க்கும் கண்ணாடியிருந்தது. ஒரு பரீட்சிப்பு மேசை, இரண்டு சிறிய அலுமாரிகள், கதிரைகள், ஒரு சிறிய மேசை. மற்றும் ஒரு வைத்திய ரும் அங்கிருந்தார்; முறுவல் முகத்துடனான கட்டுமஸ்தான நபர்! இந்த இடமும் கூடப் பரிச்சயமானது போல் இருந்தது. அல்லது அவரது மனம் தடுமாற ஆரம்பித்து விட்டதா என்ன?

"தயவு செய்து இங்கே..."

சேவகன் அவருக்குப் பின்னால் நின்றான்.

"ஆடைகளைக் களையுங்கள்" என்றவாறு அங்கிருந்த டாக்டர் கையுறைகளை அணிந்தார்.

அவர் எதுவும் புரியாமல் அந்த டாக்டரைப் பார்த்தார்.

"தயவு செய்து ஆடைகளைக் கழற்றுங்கள்"

அந்த டாக்டர் மீண்டும் சொன்னார்.

"என்னுடைய ஆடைகளையா கழற்றச் சொல்கிறீர்கள்?"

ஒருவாறு தயக்கத்துடன் கேட்டார்.

"ஆம்!"

சேவகன் அவரது 'கோட்'டை எடுத்து வெண்ணிறக் கொளுவியில் வைத்தான். மேலாடைகளைக் களைவதில் ஒத்தாசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தான். கழுத்துப் பட்டி, பனியன் என்பனவற்றைக் கழற்றும் வேளை அவனது முகத்தின் இலேசான ஒரு புன்னகை இருந்தது. மேலாடைகள் களையப்பட்டன. அவரது மேலுடம்பு முழுவதையும் வெண்ணிற ரோமங்கள் மூடியிருந்தன. ஆனால் அவரது கரங்களில் உள்ள ரோமங்கள் கறுப்பானவை. சேவகன், அவரது காற்சட்டைப் பட்டியை அவிழ்த்த போது அவர் ஆச்சரியப்பட்டார்.

அங்கிருந்த டாக்டரைக் கெஞ்சும் பார்வையுடன் அவர் பார்த்த போது அவர் அங்கிருந்த தொலைக் காட்சியில் கடல் பற்றிய ஒரு நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நிகழ்ச்சியில் அப்போது ஒரு பெரிய சுறா ஓர் அப்பாவிப் பிராணியை முரட்டுத் தனமாகத் தாக்கிக் கொண்டிருந்தது. சேவகன் லாகவமாக அவரது காற் சட்டையை உருவிக் கொளுவினான். அந்த டாக்டர் தனது பார்வையைச் சுறா மீனிலிருந்து திருப்பி அவர் மீது ஒரு இனிமை யான புன்னகையுடன் படிய விட்டார்.

"எல்லாவற்றையும், சேர்!"

அந்த டாக்டர் அவரை சேர் என்று அழைத்ததும் தனது மாணவர்களில் ஒருவராக அந்த டாக்டர் இருக்க வேண்டும் என்று நம்பினார். ஆனால் அவரது பெயரை ஞாபகிக்க அவரால் முடிய வில்லை. ஆனால் அவரது பெயரல்ல இப்போது முக்கியம்: அந்த இடத்தில் முழு நிர்வாணமாக நிற்பதுதான்! அது பெரும் அவமான கரமானதாக இருந்தது. அவர் தனது ஆணுறுப்பைத் தன் கரங்களால் மறைத்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து அந்த டாக்டர் ஒரு சிறிய புன்னகையை வழிய விட்டார்.

இந்தச் செயல்களின் பின்னால் உள்ள அர்த்தம்தான் என்ன? ஓர் ஐந்து நிமிடச் சிறிய விடயம் என்று அந்த இராணுவத்தினன் சொன்னானே..!

அந்த டாக்டர் அவரைப் படுக்கையில் கிடத்தினார். சேவகன் வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். அவர் தனது ஆணுறுப் பைக் கைகளால் மறைத்தபடி பெரும் மன அழுத்தத்தில் இருந்தார். இரண்டு கமராக்கள் மேலே தெரிந்தன. ஏன் இரண்டு? அநேகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று எனக்கும் மற்றது அந்த டாக்டருக்குமாக இருக்கும்! அவர் கண்ணை மூடிக் கிடந்தார்.

இராணுவத்தினன் கமராக்கள் பற்றியும் யாருடனும் பேசாமல் இருக்கும் படியும் சொன்னவற்றை ஞாபகப்படுத்தினார். அவருக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்த சந்தர்ப்பத்தில் அந்த டாக்டர் வாயை அகலத் திறக்கும்படி சொன்னார். அவர் 'ஆ' என்று விரித்தார். கமராக்களைப் பார்ப்பதை அவர் தவிர்த்தார். தானே ஒரு வைத்தியராக இருக்கும் போது எதற்காகத் தன்னைப் பரிசோதிக்க வேண்டும் என்ற கேள்வி தோன்றியது.

பரிசோதனையை முடித்த டாக்டர் அவரைப் புரண்டு படுக்கும் படி கேட்டார்.

என்னவொரு வெட்கம் இது! வயிற்றில் பாரம் கொடுத்தபடி புரண்டார். பிரச்சினை அந்த டாக்டரோடு அல்லவே! டாக்டர் தனது ஸ்டெதஸ்கோப்பை உடலில் ஆங்காங்கே வைத்துப் பார்த்தார். பரிசோதனை முடிந்த உடனேயே ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

"ஒரு நிமிடம், சேர்!"

அந்த டாக்டர் அவரது குதத்தில் தனது விரலைச் செருகிப் பார்ப்பது அவருக்குப் புரிந்தது. அவர் எத்தனையோ பேரை அப்படிப் பரிசோதித்திருக்கிறார். ஆனால் தனக்கு ஏன் இந்தப் பரிசோதனை?

"அவ்வளவுதான், சேர்!"

கட்டிலிலிருந்து கீழே குதித்தார். அவருக்கு யாருடனாவது பேச வேண்டும் போலிருந்தது. ஆனால் இராணுவத்தினன் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. அவர் தனது ஆடைகளை நோக்கி நகர்ந்த போது அந்த டாக்டர் அவரைத் தடுத்தார். சேவகன் அவருக்கு ஒரு பருத்தி மேலாடையை அணிவித்தான். அதற்குப் பொருத்தமான கீழ் உள்ளாடையையும் வெண்ணிறச் சப்பாத்தையும் அவருக்குக் கொடுத்தான். அவற்றை அணிவதற்கும் அவன் உதவி செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசோதனைக் கூடத்திலிருந்து அவர்கள் வெளியேறி கறுப்புக் கண்ணாடிகளிலான அறை ஒன்றுக்குள் நின்றார்கள். சேவகன் அவரை அடுத்த அறைக்குச் செல்லுமாறு பணித்தான். அவர் அந்த அறையைத் தாண்டியதும் கதவு தானாகவே மூடிக் கொள்ள அவர் நின்றது பெரிய ஓர் அறையாக இருந்தது. அதையும் தாண்டி அடுத்த அறைக்குள் நுழைந்த போது மற்றொரு கண்ணாடி அறை இருந்தது.

அதையும் தாண்டி அவர் சில எட்டுக்கள் வைத்த போது அது மிகவும் விசாலமான பெரிய மண்டபம் போல் அமைந்த அறை யாக இருந்தது. அந்தப் பெரிய விஸ்தாரமான அறையின் நடுவே ஒரு மனிதர் பச்சை நிறப் பட்டு இரவுடையில் சொகுசான சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தார். அவருக்கு முன்னாலிருந்த சுவரில் பொருத்தப்பட்டிருந்த மிகவும் விசாலமான தொலைக் காட்சித் திரையில் இரண்டு மாமிச மலைகள் மோதிக் கொள்ளும் மல்யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அவர் மிகவும் அமைதியாக ஓய் வெடுப்பது போல் இருந்தது. அவரது கண்கள் மூடியிருந்தன. டாக்டர் அப்பெரும் புள்ளியைக் கூர்ந்து பார்த்து அடையாளம் கண்டு கொண்ட அடுத்த கணம் ஏறக்குறைய உறைந்து போனார்.

சாய்ந்திருந்த தொட்டிற் கதிரை ஆடிக் கொண்டிருந்தது. அவரால் அப்பெரும்புள்ளியின் நிறத்தைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. வெளிர் பழுப்பு, வெளிர் மஞ்சள், மற்றும் நீலம் ஆகிய வற்றின் கலவை அது. அந்த அறையின் ஒரு கோடியில் பிரமாண்ட மான ஒரு கட்டில் கிடந்தது. அதற்குப் பின்னால் புத்தகங்கள் அடுக்கப்பட்ட ஒரு புத்தக அலுமாரி. மற்றொரு கோடியில் பிரம் மாண்டமான ஒரு மீன் தொட்டி. அதில் பல்வேறு நிறங்களில் பல வகையான மீன்கள் நீந்திக் கொண்டிருந்தன.

டாக்டர் தன் உணர்வுகள் கட்டுப்படுத்தப்பட முடியாமல் மேலும் மேலும் இறுக்கமடைவதாக உணர்ந்தார். சாய்ந்திருந்த அந்தப் பெரும் புள்ளி அதிர்ஷ்டவசமாகப் பேசத் தெடங்கினார். ஆனால் அவரது கண்கள் மூடிக் கிடந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொட்டுக் கொள்ளாமலும் நாய் விசர் நோய் தொற்றிக் கொள்ளுமா?"

அப்பெரும் புள்ளியின் வார்த்தைகள் காதில் சரியாக விழ வில்லை போலத் தோன்றிற்று. பெரும்புள்ளியின் சொற்கள் தெளிவானவை. குரலில் கம்பீரம். ஆனால் அவர் சரியாக எதைக் குறித்துக் கேட்கிறார்?

"மன்னிக்க வேண்டும். புரியவில்லை!"

வார்த்தை உளறலாக வெளியானது.

சாய்ந்திருக்கும் அந்தப் பெரும் புள்ளியின் கண்கள் மூடியே யிருந்தன. அவர் டாக்டரையோ சண்டை நடந்து கொண்டிருந்த தொலைக்காட்சித் திரையையோ அல்லது நீண்ட நேரம் முத்த மிட்டுக் கொண்டிருக்கும் கருஞ் சிவப்பு நிறமீன்களையோ பார்க்க வில்லை!

"வைரஸ் கிருமி காற்றில் பரவுகிறதா?"

பெரும்புள்ளி கேட்டார். கண்கள் மூடியேயிருந்தன.

"அது இடைவெளியைப் பொறுத்தது!"

"எனக்கும் உங்களுக்குமான இடைவெளி போல்?"

"பத்து வீதம் சாத்தியம்!"

"விசர் நாய்வெறி எப்படி?"

"எப்படியென்றால்....?"

"தொடுகை இல்லாமல் விசர் நாய்வெறி தொற்றுமா?"

"இல்லை!"

"ஒருவருடன் கைகளைக் குலுக்கிக் கொள்வதன் மூலம் வைரஸ் பரவுமா?"

"இல்லை!"

"நீங்கள் நிச்சயமாகச் சொல்கிறீர்களா?"

"நிச்சயமாக!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒய்விலிருக்கும் அப் பெரும்புள்ளி ஒரு வினாடி கண் திறந் தார். அவரது கண்கள் சிவப்பு நிறமாக இருப்பதை அவர் அவதானித் தார். அது அநேகமாக அவர் உறங்காமல் இருந்ததால் ஏற்பட்டிருக்க வேண்டும். திரையில் ஒரு மல்யுத்த வீரன் மற்றையவனின் பின்னால் நின்று வெற்றிக் களிப்போடு ஆடிக் கொண்டிருந்தான். மீன் தொட் டிக்குள் இருந்த கருஞ் சிவப்பு மீன்கள் காணாமல் போயிருந்தன.

டாக்டருக்குப் பின்னாலிருந்த கண்ணாடி அறைக்கதவு திறந்து கொள்ளத் தூரத்திலிருந்த குரல் கேட்டது.

"டாக்டர்... இந்த வழியாக.."

சந்திப்பு முடிவடைந்து விட்டது என்பதை இந்தப் பெரும் புள்ளி எப்படி வெளியில் இருப்போருக்குத் தெரிவித்தார் என்பது அவருக்குப் புதிராக இருந்தது. அவர் திரும்பி அவ்விடத்திலிருந்து நகர்ந்தார்.

பரீட்சிக்கும் அறையில் வைத்தியரையோ சேவகனையோ அவரால் காண முடியவில்லை. அவர் தனது ஆடைகளை அணிந்து கொண்டார். அவருக்கு அழுகை எட்டிப் பார்த்தது; கமராக்களை நினைத்து அடக்கிக் கொண்டார். அவர் தனது சப்பாத்துக்களின் நாடாவைக் கட்டிக் கொண்டிருக்கையில் சேவகன் உள்ளே நுழைந்தான்.

"இந்த வழியாக...."

"எங்கே போக...?"

"வீட்டுக்கு!"

சந்தோஷத்துடன் அந்த அறையிலிருந்து அடியெடுத்து வைத்தார். அழுகைக்கான வெளிப்பாட்டுணர்வு இன்னும் அவரை உறுத்திக் கொண்டிருந்தது! □

குறிப்பு:

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சத்தாம் ஹுஸைனின் ஒன்று விட்ட சகோதரர்களான பர்ஸான், வத்:பான் ஆகியோர் அரச அதிகாரிகளாகவும் கட்சி முக்கியஸ்தர்களாகவும் இயங்கியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிரதம்

அவர்கள் நால்வரும் ஒன்றாகவே நடந்து சென்றார்கள்.

அவர்களில் மூவர் பாடசாலைச் சிறார்கள் போல பைகளை முதுகுகளில் தாங்கியிருந்தனர். பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க - அவர்களில் மூத்தவளாகத் தெரிந்தவள் மட்டும் சக்கரங்கள் பொருத் தப்பட்ட பிரயாணப் பெட்டியை இழுத்தபடி நடந்து கொண்டிருந் தாள். அவர்கள் கொஞ்சம் நடப்பதும் கொஞ்சம் தரிப்பதுமாயிருந் தனர். ரயில் நிலைய மின் விளக்குகளின் வெளிர் ஒளியைப் பார்த்து வியந்து தமது நடையைத் தாமதித்தனர்.

தள்ளு வண்டியொன்றில் வைக்கப்பட்டிருந்த விளையாட் டுப் பொருட்களைக் கண்டதும் அவர்களது கண்கள் ஆச்சரியத்தில் அகன்று விரிந்தன. அவர்கள் அவ்விடத்தில் தரித்து நின்று அவற்றை ஆசையோடு பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த வண்டியில் சீட்டுக் கட்டுக்கள், பலூன்கள், சாவிகளைக் கோர்க்கும் அழகிய சங்கிலிகள், விளையாட்டுப் பொருட்கள், பொம்மைகள், மற்றும் பிராணிகளின் உருவங்கள் என ஏராளமான பொருட்கள் இருந்தன.

"இதோ பார் டைனோசர்... ஒரு கொரில்லா.... ஒரு நாய்.... எவ்வளவு அழகான கார்... அது.."

"வாங்க... நாம ட்ரெயினைத் தவறவிட்டுறுவம்..."

மூத்த சகோதரி அவர்களைத் துரிதப்படுத்தினாள். திரும்பித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி அந்தப் பொருட்களைப் பார்த்துக் கொண்டே அவர்கள் வேகமாக நகர்ந்தார்கள். பெரியவளின் கவனத்திலிருந்து தவறிவிடா திருப்பதற்காக அவளது சட்டையைப் பற்றிப் பிடித்திருந்தார்கள்.

"சனா... இந்த மாதிரிப் பொருட்களை நாம் மௌஸூலில் பார்க்க முடியுமா?"

நான் புன்னகைத்தேன். சிறார்கள் எல்லா இடங்களிலும் எப்போதும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறார்கள். சனாவின் பதில் என் காதில் விழவில்லை. சிறிய தங்கையின் கைகளை இறுகப் பற்றிப் பிடித்தபடி அவர்களை ரயிலை நோக்கி அவள் அழைத்துச் சென் றாள். சிறியவளுக்கு மூன்று வயதிருக்கலாம். வயது போன பருவத்திலும் மனோ நிலைச் சிதைவிலும் மனிதர்கள் வாழும் நிலை யில் இவர்களை யாராவது அழைத்துச் செல்கிறார்களா என்று எண்ணிப்பார்க்கத் தோன்றவில்லை எனக்கு.

ஒரு பெண்மணி அவர்களுக்குப் பின்னால் மிக மெதுவாக நடந்து வருவதைக் கண்ணுற்று எனது நடையைத் தாமதப்படுத்திப் பின்னர் தரித்தேன். கடந்த நாற்பது வருடங்களில் ரயிலில் நான் மௌஸூலுக்குப் பயணம் செய்வது இதுதான் முதற் தடவை. துருப்பிடித்துப்போயிருந்த ரயில் பெட்டிகளில் நான் பயணம் செய்ய வேண்டிய பெட்டியைத் தேடினேன். உலோக எழுத்துக்கள் கழன்று விழுந்து விகாரமாகத் தெரிந்த இடங்களில் வெள்ளை மசி கொண்டு இலக்கங்கள் எழுதப்பட்டிருந்தன. ஆஹ்... இதோ எனது பெட்டி இலக்கம் 235. ஏறிக் கொண்டேன்.

இன்றைக்கும் நாற்பது வருடங்கள் முன்னருக்கும் இடையில் எவ்வளவோ வித்தியாசம். அப்போது ரயில் ஆசனங்கள் யாவும் மரப் பலகைகளால் ஆனவையாக இருந்தன. இப்போது தோலாலான வசதியான இருக்கைகள் - கிழிந்து போயிருந்த போதும் கூட. பெட்டிக்குள் ஒரு குழுவாக இருந்த இளைஞர்களது இரைச்சல் பெட்டியை நிறைத்திருந்தது. சிவப்பு, கறுப்பு மற்றும் வெள்ளை நிறங்களாலான அவர்களது ஆடைகள் அவர்கள் ஏதோவொரு விளையாட்டுக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதைக் காட்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வலப்புறமிருந்த இரண்டு ஆசனங்களில் சனாவும் அவளது சிறிய தங்கையும் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு நேர் எதிரே ஏனைய இருவரும் - ஐந்து வயதான சிறுமியும் பத்து வயதான சிறுவனும் - அமர்ந்திருந்தார்கள். சிறுவன் ஓர இருக்கையில் எனக்கு நேர் குறுக்கு வாட்டில் அமர்ந்திருந்தான். எனது இடப் புறத்தில் பழைய இராணுவக் கோட் அணிந்த வயதான ஒருவர் அமர்ந்திருந் தார். ஒரு முரட்டுக் கறுப்புத் துணியினால் முகத்தை மூடியிருந்த அவரது சரியான தோற்றத்தை என்னால் கணிக்க முடியவில்லை. அவர் தூங்குகிறாரா அல்லது தூங்குவது போல் பாவனை செய்கி றாரா என்று என்னால் சரியாகச் சொல்ல முடியவில்லை.

இந்த முதல் ரயில் பயணத்தின் சந்தோஷம் தாளாமல் மூன்று சிறார்களும் ஆரவாரித்தார்கள். ரயில் பெட்டியின் ஜன்னலுக்கு வெளியே அழுக்கு மண்டியிருந்த ஓரங்களையும் ஆகாயத்தையும் ஜன்னலூடாகத் தெரிந்தவற்றையும் ஆர்வத்துடன் பார்த்து ரசித்துக் கொண்டு வந்தார்கள். ஆசனத்தின் நுனிக்கு நகர்ந்து யாவற்றையும் ரசித்தார்கள். அவர்களது ஒவ்வொரு சொல்லிலும் மகிழ்ச்சி வெளிப் பட்டது. சனா மட்டும் ஆழ்ந்த சிந்தனையில் புதைந்து போயிருந்தாள்.

அப்போதுதான் அந்தப் பெண்மணி எனக்கு ஞாபகம் வந்தாள். 'அவள் எங்கே அமர்ந்திருக்கிறாள்? அவளைக் காணவே இல்லை. ஒரு வேளை இந்தப் பிள்ளைகளுக்கும் அவளுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாதோ...?' சட்டென வலது புறம் திரும்பிப் பெட்டியின் வாயிலைப் பார்த்தேன். அந்தப் பெண்மணி தன் துயரம் மிகுந்த விழிகளில் ஒரு வகையான கெஞ்சலுடன் என்னையே பார்த்தவாறு நின்றிருந்தாள். சுட்டு விரலை அசைத்து என்னைத் தன்னிடம் வருமாறு சைகை செய்தாள். மீண்டும் மீண்டும் அவள் சைகை செய்த போது, 'என்னையா?' என்று கேட்டேன். உடனே அவள் சுட்டு விரலைத் தனது உதடுகளில் வைத்துப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொண்டாள்.

நான் அவளை நோக்கிச் சென்றேன். அவளுக்கு ஐம்பது வயதளவில் இருக்கலாம். ஒல்லியான தோற்றம். எண்ணற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரங்களின் ரேகைகள் படர்ந்த அந்த முகத்தில் பராமரிக்கப்படாத அழகின் சாயை மங்கலாய்ப் படிந்திருந்தது. வெளிறிப் போயிருந்த கறுப்புப் புள்ளிகள் கொண்ட முழு ஆடை... நரைத்த முடிகளாலான இரண்டு பின்னல்கள் மார்பில் கிடந்தன. நான் அவளை நெருங்கிய தும் அவள் மெதுவாக ரயில் பெட்டியிலிருந்து கீழிறங்கினாள். அவளுக்குப் பின்னால் நானும் இறங்கியதும் அவள் என்னை நோக்கித் திரும்பினாள். அவளது கண்கள் கண்ணீரால் நிரம்பி யிருந்தன.

"உங்களைப் பார்த்தால் ஒரு நல்ல மனிதனாகத் தெரிகிறீர் கள்"

- என்னைப் பார்த்துச் சொல்லியபடி எனது கரங்களை இறுக்கிப் பிடித்தாள். நான் புன்னகைத்தேன்.

"ஒரு சின்ன உதவி. தயவு செய்து... உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்...."

- அவள் மெதுவாகப் பேசினாள்.

"என்ன உதவி?"

"எல்லாவற்றுக்கும் முன்னர் நிறைவேற்றுவேன் என்று எனக்குச் சத்தியம் செய்யுங்கள்..."

"அதற்கு முன்னர் அது என்னவென்று நான் தெரிந்து கொள்ள வேண்டும்!"

"சின்ன விசயம்தான்... ரயில் மௌஸூல் செல்லும் வரை, பிள்ளைகள் அவர்களது மாமா சாலிஹைச் சந்திக்கும் வரை, நீங்கள் அவர்களுடனிருந்து கொள்ள வேண்டும்."

"அது சின்ன விசயம்தான்!"

"நீங்கள் செய்வீர்களா...?"

கறுப்புப் புள்ளிகள் உள்ள தனது ஆடைப் பையிலிருந்து ஒரு சிறு அல்குர்ஆன் பிரதியை வெளியில் எடுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சத்தியம் பண்ணுங்கள்" என்றாள்.

நான் புன்னகைத்தபடி சொன்னேன்: -

"அதற்கு அவசியமில்லை. நான் கட்டாயம் செய்கிறேன்."

"இல்லை... சத்தியம் பண்ணுங்கள்..."

- எனது கையைப் பற்றிக் கொண்டாள்.

"இதுக்கெல்லாம் அவசியமே இல்லை..."

"சத்தியம் பண்ணுங்கள்!"

சத்தியம் பண்ணினேன்.

"சாலிஹ் மாமா வரும் வரை அவர்களை விட்டு விட்டு நீங்கள் போய்விடக் கூடாது."

"போகமாட்டேன்!"

அவள் புன்னகைத்தாள்.

"நீங்கள் ஒரு நல்ல மனிதர். நான் நினைத்தது மிகச் சரி!"

என்றவள் தொடர்ந்தாள்: -

"இவர்களது தாயார் மூன்று வருடங்களுக்கு முன்னர் ஹனாவைப் பெற்றெடுக்கும் போது இறந்து விட்டார். இதுதான் முடிவு! நாட்டை மீட்க யார்தான் இருக்கிறார்கள்! துன்பங்களாலோ அல்லது யுரேனியக் கசிவினாலோ தெரிய வில்லை, அவர்களது தந்தையும் மரணித்து விட்டார். என்ன வென்று யாருக்கும் சரியாகத் தெரியாது. தாஜ் தளத்தில் அவர் ஒரு பொறியியலாளராக இருந்தார். அந்த இடத்தை உங்களுக்குத் தெரியும்தானே... குவைத் போரின் போது அது அழிக்கப்பட்டது. சில மாதங்களுக்கு முன்னர் அவர் இறந்து விட்டார். ஆறுமாத வீட்டு வாடகையை வீட்டுரிமையாளர் தள்ளுபடி செய்து விட்டார். அவர்களுக்கென்று இருந்த எல்லாவற்றையும் விற்று விட்டோம். அவர்களுக்கு பக்தாதில் எதுவுமே கிடையாது...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவர்களின் மாமாவை உங்களுக்குத் தெரியுமா?"

"இல்லை. ஆனால் இவர்களை எடுத்துச் செல்வதற்கு அவர் ரயில் நிலையத்துக்கு வருவார்."

"அவர் வருவார் என்று நிச்சயமாகச் சொல்லுகிறீர்களா?"

முழு உடலையும் மூடியிருந்த வெளிறிப் போன ஆடைக் குள்ளால் அவள் தனது இரண்டு கைகளையும் விரித்தாள்.

"வராமல் என்ன...? அவரை மூன்று முறை தொலைபேசியில் அழைத்தேன். தொலைபேசி அழைப்புகளுக்கே ஆயிரம் தீனார்கள் செலவாயிற்று. அவரது தொலைபேசி இலக்கங் களைக் கண்டு பிடிப்பதற்கு நான் பட்டபாடு...! மூன்று மாதங்களாகத் தேடியலைந்து இறையுதவியால் ஒருவாறு கண்டு பிடித்து விட்டேன்."

அந்தப் பெண் தன் தலையைக் குனிந்தவாறு நின்றிருந்த கோலம் யார் மனதிலும் அனுதாபத்தை ஏற்படுத்தும் விதமாய் இருந்தது. கண்களில் நீர் கோக்க ஆரம்பித்தது. சொன்னாள்: -

"இன்றைய நிலைமை உங்களுக்குத் தெரியும்தானே... பிள்ளைகளைக் கடத்துதல்... குண்டுகள்... கொலைகள்... நீங்கள் இவர்களை சாலிஹ் மாமாவின் கரங்களில் ஒப்படைத்து விடுங்கள்!"

□□□

ரயில் புறப்படுவதற்கென ஊதப்பட்ட விசில் சிறாரை ஜன்னலருகே நகர்த்திய போதும் வெளியே பார்க்கத் தகுந்த எதுவும் இல்லாமையால் அவர்களை ஏமாற்றம் சூழ்ந்தது. காசிமிய்யா நகரின் அழுது வடியும் தெரு விளக்குகள் தூரத்தே தெரிந்தன. பாம் மரங்களின் உச்சிகள் இருட்டிலும் ஊசிகள் போலத் தோற்றமளித்தன. பக்தாதின் புறநகர்ப் பகுதியைத் தாண்டுகையில் தெரு விளக்குகள் வெளிச்சத்தை இழந்திருந்தன. சிறுவர்கள் ஜன்னலோரத்திலிருந்து தமது இருக்கைகளுக்கு மீண்டார்கள்.

கபாப், சவர்மா, முட்டை, மாங்காய் ஊறுகாய் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றின் வாசம் காற்றில் பரவி வராதிருந்திருந்தால் ரயிலின் தாளகதிப் போக்கின் அசதியில் அவர்கள் உறங்கிப்போயிருப்பார்கள். விளையாட்டுக் குழுவினர் சான்ட்விச்களைச் சாப்பிட்டபடி நகைச்சுவைகளைப் பரிமாறிச் சிரித்தார்கள். கூத்தும் கும்மாளமுமாக வாட்டப் பட்ட ரொட்டிகளையும் பெப்சி மற்றும் செவன் அப் ஆகிய மென் பானங்களையும் தங்களுக்குள் பரிமாறி மகிழ்ந்தார்கள்.

சிறார்களில் இருவர் சனாவைத் திரும்பிப் பார்த்து அவளது காதுக்குள் கிசுகிசுத்தார்கள். சனாவின் அருகே அமர்ந்திருந்த கடைசித் தங்கை சனாவைப் பார்வையால் கெஞ்சினாள். சனா எழுந்து ஆசனங்களுக்கு மேலாகப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து தனது பெட்டியை இறக்கினாள். ஏனைய மூவரினதும் கண்கள் சனாவின் அசைவுகளிலேயே நிலைத்திருந்தன.

அதற்குள்ளிருந்து ஒரு சிறிய குவளையை எடுத்தாள். பின்னர் சுருட்டி வைக்கப்பட்டிருந்த சிறிய துவாயை அவள் விரித்த போது இந்தச் சந்தர்ப்பத்துக்காக அவள் தயார் செய்து வைத்திருந்த பாண் துண்டுகள் இருந்தன. நான்கு சம துண்டுகளாகப் பிரித்து வைக்கப் பட்டிருந்தவற்றில் மூன்று பாண் துண்டுகளை எடுத்து மூவருக்கும் கொடுத்தாள். அவளது பங்கை எடுத்துக் கொள்ளாமல் மீண்டும் சுருட்டி வைத்தாள். பெட்டியை மேலே வைத்து விட்டு கழிப்பறைக்குச் சென்று தான் வைத்திருந்த குவளையில் நீர் பிடித்துத் திரும்பினாள். பாண் துண்டுகளைச் சாப்பிட்டு விட்டு அவர்கள் அந்த நீரை அருந்தினார்கள்.

"நாளைக்கு நாம் சாலிஹ் மாமாவின் வீட்டில் சாப்பிடுவோம்.." - பையன் சொன்னான்.

"பெப்சியும் குடிப்போம்..." - அவனுக்கு அருகே அமர்ந்திருந்த சிறுமி விளையாட்டுக் குழுவினர் சோடா அருந்துவதைப் பார்த்தபடி சொன்னாள்.

"செவன் அப்!"

"ஒரேஞ்ச் ஜூஸ்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
662853

"நாம் அவருடைய மகளுடன் விளையாடுவோம்.."

என்று சொன்னவள் சனாவைப் பார்த்துக் கேட்டாள்: -

"அவளது பெயர் என்ன..?"

"எனக்குத் தெரியாது."

"அவளுக்கு 'எனக்குத் தெரியாது' என்று பெயர் வைப் போம்" - சிறுவன் சொன்னான்.

அவர்கள் எல்லோரும் சிரித்தார்கள்.

"அவளுக்கு எத்தனை வயது?"

"எனக்குத் தெரியாது."

"அவளது வயதையும் 'எனக்குத் தெரியாது' என்று வைத்துக் கொள்வோம்!"

சிறுவன் சொன்ன போது மீண்டும் அவர்கள் நால்வரும் சிரித்தார்கள்.

"அப்படியென்றால் அவள் படிக்கும் பாடசாலையின் பெயரும் கூட 'எனக்குத் தெரியாது!' "

- அவன் சொன்னான்.

அப்பாவித்தனத்துடனான அவர்களது சந்தோஷக் களிப்பை நான் அவர்கள் அறியாத முறையில் அவதானித்து மகிழ்ந்தேன்.

**"சாலிஹ் மாமா சொல்ற மாதிரி கேட்டுக்குங்க..."**

ஆயிரமாயிரம் முறை இந்த வசனத்தைக் கேட்டவர்கள் போல் ஒருமித்த குரலில் சொன்னார்கள்.

**"ஆமா... அவருடைய மனைவி சொல்வதையும்தான்..."**

**"ஆமா... கௌதார் மாமியின் மகள் ஸைனாவைத் தொந்தரவு செய்த மாதிரி அவர்களது பிள்ளையைத் தொந்தரவு செய்ய வேண்டாம்."**

இந்த வசனங்களை எல்லோரும் ஒருமித்துச் சொல்லி விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகக் 'கலீர்' என வெடித்துச் சிரித்தார்கள்.

செந்நிறக் கூந்தல், சுத்த வெள்ளைத் தோல், பெரிய கருநீலக் கண்கள், ஒடுக்கமான ரோஸ் நிற உதடுகள் என்பன போன்ற பொதுவான உடலமைப்புகளைப் பற்றி அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

என்னிடமிருந்த ஒரு சஞ்சிகையைக் கையிலெடுத்து நான் படிக்கத் தொடங்கினேன். என் அருகே அமர்ந்திருந்த பையன் என்னைத் திரும்பிப் பார்த்தான்.

"எனது தந்தையார் இந்த 'மொடர்ன் ஸயன்ஸ்' என்ற சஞ்சிகையைத் தொடர்ந்து வாசிப்பார்" என்றான்.

நான் புன்னகைத்தேன்.

"நீ எப்படி... படிக்க முயற்சி பண்ணலியா...?"

"அது படிக்கக் கஷ்டம். நான் நாலாம் வகுப்புதான். நான் சும்மா படங்களைப் பார்ப்பேன்."

"தியா.... அந்தாளைக் கேள்வி கேட்டுச் சும்மா கரைச்சல் படுத்தாதே.."

- அவனது சகோதரி அவனை அறிவுறுத்தினாள்.

"இல்லை.. அது தொந்தரவு இல்லை..."

சனா எழுந்து சிறிய தங்கையின் கையைப் பிடித்துக் கழிவறைக்கு அழைத்துச் சென்றாள். திரும்பியதும் தூங்கி வழிந்த மற்றைய தங்கையின் தோளில் தனது ஈரக் கையால் மெதுவாகத் தடவி,

"ரஜா... தூங்குவதற்கு முன் வா..." என்று அழைத்துச் சென்று திரும்பினாள்.

அடுத்து தியாவின் முறை!

"நீயும் வா.. என்னுடன்...!" - சனா அழைத்தாள்.

"நான் சின்னப் பிள்ளையில்லை. நான் ஆம்பிளை. தேவையென்றால் நான் போய்க்கொள்ளுவேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை... நீ வா...!" - அவள் வற்புறுத்தினாள்.

"போ..." என்று மறுத்தான்.

"நீங்க மௌஸூலுக்குப் போயிருக்கிறீங்களா..."

- சிறுவன் என்னைப் பார்த்துக் கேட்டான்.

"நாற்பது வருடங்களுக்கு முன்."

- புன்னகையுடன் அவனுக்குப் பதிலளித்தேன்.

ஒரு மனிதனால் நாற்பது வருடம் வாழ முடியுமா என்பது போன்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்! நம்பிக்கை யீனத்துடன் கேட்டான்: -

"நாற்பது வருஷம்..!?"

"ஆம்!"

"நீங்க எல்லாத்தையும் இப்போ மறந்திருப்பீங்க, இல்ல...?"

"எனக்குத் தெரியல்ல.. அநேகமா எல்லாம் மாறிப்போயி ருக்கும். சிலதுகள் அப்பிடியே இருக்கும். நாளைக்குத் தெரிஞ்சிடும்..."

"அங்கே உதைபந்தாட்ட மைதானம் இருக்குமா...?"

நான் புன்னகைத்தேன். பின்னர் பதில் சொன்னேன்: -

"நாங்கள் திறந்த வெளிகளில்தான் விளையாடினோம்."

"இப்போ...?"

"சில இடங்கள் இருக்கலாம்... பாடசாலைகளிலாவது இருக்கும்..."

"என் வகுப்பில் நான்தான் சிறந்த உதைபந்தாட்ட வீரன். முக்கியமான தடுப்பாட்ட வீரன். எதிர்காலத்துல ஈராக் தேசிய அணியில் விளையாடுவேன்."

"நிச்சயமாக... அதிலென்ன சந்தேகம்...!"

"அதையெப்படி நீங்கள் சொல்வீர்கள்? நான் விளையாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?"

- அவன் தீர்க்கமாகக் கேட்டான்.

"இல்லை... உன்னிடம் உறுதியிருந்தால் நிச்சயமாக அந்த இடத்தை அடைந்து விடலாம்."

"என் தந்தையாரும் இப்படி அடிக்கடி சொல்வார்."

மெதுவாகச் சொன்ன அவன் தொடர்ந்தான்: -

"பக்தாதை விட்டு வர எனக்கு விருப்பமே இல்லை. எனக்கு அங்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் எங்கே தங்குவது? எங்களால் வாடகை செலுத்தக் கூட வழியில்லை!"

வார்த்தைகள் உள்ளத்திலிருந்து வெளிவந்தன.

"உங்களுடன் ரயில் நிலையம் வந்த பெண்மணி யார்?"

"அவர்தான்... கௌதார் மாமி. எங்கள் அயல்வீட்டுக்காரி. அவர் ஓர் ஆசிரியை. அவருடைய கணவரும் ஓர் ஆசிரியர் தான்!"

"அவர் உங்களுக்குச் சொந்தக்காரியா?"

"இல்லை. சாலிஹ் மாமாவைத் தவிர வேறு உறவினர்கள் எங்களுக்குக் கிடையாது. ஆனால் சாலிஹ் மாமாவை நாங்கள் பார்த்ததே இல்லை. பக்தாதில் போல் மௌஸூலிலும் குண்டுகள் வெடிக்குமா...?"

கேள்வி என் முகத்தில் அறைந்தது!

"ம்... ஈராக்கின் எல்லா இடங்களிலும்..!"

அவன் பதிலேதும் பேசவில்லை. கண்களில் இருந்த ஆர்வம் காணாமல் போயிற்று. கொட்டாவி விட்டான். ஆட்கொள்ள வரும் தூக்கத்துடன் போராடியபடி உறங்கிப்போனான்.

சனா, தனது உடன் பிறப்புக்கள் ஒவ்வொருவரையும் கவனமாகப் போர்த்தினாள். தூக்கத்தில் அவர்கள் அலங்கோலமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்ந்திருந்த நிலையிலிருந்து சரிப்படுத்தி விட்டுத் தானும் கண்களை மூடினாள்.

"இந்தா... ஒரு கழுதை!"

இந்தச் சத்தம் யாரிடமிருந்து வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. கழுதையின் கனைப்பை நான் கேட்பதற்கு முன்னர் விளையாட்டுக் குழுவினரிடமிருந்து ஒரு குபீர்ச் சிரிப்பு வெளியானது. அதைத் தொடர்ந்து சிறார்களிடமிருந்து சிரிப்பொலி கேட்டது. நான் கண்களைத் திறந்தேன். சிறுவர்கள் எழுந்து ஜன்னலை மொய்த்துக் கொண்டு நின்றிருந்தார்கள். கழுதையொன்றின் கனைப்புக் கேட்டது. பிறகு அது மறைந்து விட்டது.

களி மண் வீடுகள் தெரிந்தன. பின்னர் மறைந்தன. அதைத் தொடர்ந்து வரண்டு உலர்ந்து போய்க்கிடந்த வெண் சலவைக் கல் போன்ற மலைக் குன்றுகள் தெரிந்தன. 'ஹமாம் அல் அலில் நகர்' என்ற வார்த்தைகள் காதில் விழுந்தன. ரயில் மலைக் குகை வழிக்குள் நுழைந்தது. வெளிச்சம் அகன்று எங்கும் இருள் பரவிற்று. மூன்று வயதுச் சிறுமியின் அழுகுரல் கேட்டது.

"பயப்படாதே தங்கம்..."

சனா நடுங்கும் குரலில் சகோதரியைத் தேற்றினாள். சனாவுக்கும் பயம் பிடித்திருக்க வேண்டும்.

"பயப்பட வேண்டாம். இரண்டொரு நிமிடங்களில் குகையை விட்டு நாம் வெளியேறிவிடுவோம்."

அவர்களுக்குத் தென்பூட்டுவதற்காக நான் சொன்னேன்.

"குகை என்றால் என்ன?" - தியா கேட்டான்.

"ஹா... மலைக்குக் கீழே அமைந்திருக்கும் பாதை!" என்ற சிரிப்புடன் கூடிய பதில் முன்னாலிருந்து கேட்டது. அது அநேகமாக விளையாட்டுக் குழுவைச் சேர்ந்த ஒருவருடையதாக இருந்திருக்க வேண்டும்.

"இன்னும் பத்து நிமிடங்களில் நாம் மௌஸூலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்போம்." - நான் சொன்னேன்.

சில கணங்கள் அமைதி நிலவிற்று. ரயில் குகையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தது. பெட்டிக்குள் மெதுவாக வெளிச்சம் நுழைந்து கொண்டிருந்தது. நெருக்கியடித்துக் கொண்டு அமைந் திருக்கும் ஒற்றை மாடி வீடுகள், தெரு விளக்குக் கம்பங்கள், நிரந்தரமாகத் தங்கிவிட்டிருக்கும் புழுதி.... எல்லாமே ஜன்னலூ டாகத் தெரிந்தன.

"நாங்கள் மௌஸூலுக்கு வந்து விட்டோம். சாலிஹ் மாமா வந்து விடுவார்..."

சிறார்களின் முகங்களில் மகிழ்ச்சி ரேகைகள் படரத் தொடங்கின.

"சாலிஹ் மாமா தனியே வருவாரா... மனைவி, பிள்ளை யுடன் வருவாரா...?"

- ரஜா கேட்டாள்.

"எனக்குத் தெரியாது!"

"'எனக்குத் தெரியாது' வரமாட்டாள். அவள் பாடசாலை யில் இருப்பாள்."

தியா சொன்ன போது அவர்கள் அனைவரும் தம்மை மறந்து சிரித்தார்கள். ரயில் நிறுத்தப்படும் வரை இந்த விடயம் பற்றியே மிகழ்ச்சி பொங்கக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ரயில் நிறுத்தப் பட்ட போது காலை ஏழு மணி!

விளையாட்டுக் குழுவினர் வேகமாக வாயிலுக்கு நகர்ந்தார் கள். சனா தனது உடன் பிறப்புக்களை ஒருமுகப்படுத்தினாள். இரண்டு கரங்களையும் அகல விரித்து ஒரு வளையத்தை உருவாக்கி அதற்குள் அவர்களைச் சேர்த்து வாயிலருகே கொண்டு வந்து கீழிறக்கினாள். நான் அவசரமாக இறங்கி அவளுக்கு வழி விட்டேன். சற்றுத் தூரத்தே போய் நின்று அவர்களை அவதானித்துக் கொண்டி ருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரயில் நிலையப் பிரதான வாயிலால் மட்டுமே அங்கிருந்து நகருக்குள் நுழைய முடியும். நான் சிறுவனாக இருந்த காலத்தில் பக்தாதுக்கும் மௌஸூலுக்குமிடையில் பெரு வீதிகள் கிடையாது. ரயில் ஒன்றே பிரதான பயண மார்க்கமாக இருந்தது. அப்போது ரயில் நிலையம் சிறியதாக இருந்த போதும் அது சுத்தமாக, அழகாக இருந்தது. இன்று கவனிப்பாரற்று, அழுக்குப் பிடித்து, நாளையோ இன்றோ இடிந்து விழுந்து விடும் போல் பார்க்கவே சகிக்க முடியாத நிலையில் இருக்கிறது.

ரயிலில் இருந்து இறங்கிய அடுத்த கணத்திலேயே மௌஸூலின் கடுங் குளிர் என்னைத் தாக்கிற்று. ரயில் நிலையத்திலிருந்த சற்று அகன்று வெயில் விழும் இடம் நோக்கி நகர்ந்தேன். சிறார்கள் அதே இடத்தில் நின்றிருந்தனர். குளிருடன் போராடியபடி தங்களைச் சுருட்டிக் கொண்டு நின்றிருந்தனர். அவர்கள் எல்லோரது கரங்களிலும் ஒரு தாள் துண்டு இருந்தது. அதில் “சாலிஹ்” என்ற ஒரேயொரு சொல் எழுதப்பட்டிருந்தது.

பயணிகளை வரவேற்க யாரும் ரயில் நிலைய வாயிலூடாக நுழையவில்லை. மரபுசார் ஆடையணிந்த ஐம்பது வயது மதிக்கத் தக்க ஒருவர் வெயில் விழும் இடமாகப் பார்த்துக் காத்திருந்தார். அவர் ஹிஜாப் அணிந்த ஓர் இளம் கர்ப்பிணிப் பெண்ணையும் அப்பெண்ணுடன் வந்திருந்த வயதான பெண்மணியையும் புன் முறுவலுடன் வரவேற்றார். ஓர் இளம் வயதுப் பெண்ணுடன் வந்திருந்த இறுக்கமான முகமுடைய ஓர் இராணுவ அதிகாரி அவர்களுடன் இணைந்து கொண்டார். அந்த இளம் பெண் அவருடைய மகளாக இருந்திருக்க வேண்டும். அவர்கள் வெளியேறிய போது அவர்களை மற்றொரு பெண்மணியும் இரண்டு இளைஞர்களும் ஆளையாள் கட்டித் தழுவியும் முத்தமிட்டும் அன்பைப் பரிமாறிக் கொண்டனர். சில நிமிடங்களுக்குப் பின்னர் ரயில் நிலையத்தில் என்னையும் சிறாரையும் தவிர வேறு யாரும் இருக்கவில்லை. அது ஒரு கையறு நிலைபோல் இருந்தது!

வெண்கற்களாலான ரயில் நிலையத்தின் தரையில் குழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த இடங்கள் களிமண் கொண்டு நிரப்பப்பட்டிருந்தன. அந்த ரயில் நிலையத்தில் இருந்தது ஒரேயொரு பலகை பென்ச். அதுவும் முதுகைச் சாய்க்கும் இடத்தில் இரண்டு சென்ரி மீற்றர் அகல ஒற்றைப் பலகையுடன் கிடந்தது. அந்த பென்ச்சில் சிறார்கள் உட்கார்ந்திருந் தார்கள். சனாவின் மடியில் ஹனா அமர்ந்திருந்தாள். ரஜா அவளது வலது புறத்தில் அமர்ந்திருந்தாள். தியா அமராமல் நின்றிருந்தான். அவர்கள் அனைவரதும் கண்கள் சாலிஹ் மாமாவின் வரவை எதிர் பார்த்து ரயில் நிலைய வாயிலில் பதிந்திருந்தன.

சூரிய ஒளி பிரகாசமாக இருந்த போதும் குளிர் கடுமையாக இருந்தது. சூடேற்றும் கருவியை வெளியே எடுத்துப் பயன்படுத்திய போதும் கூடக் கைகளில் சூடு பரவவில்லை. நாற்பது வருடங்களுக்கு முன் இப்படித்தான் நான் சூடேற்றிக் கொண்டேன். ஆனால் இப்போது எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. எமது வாழ்வும் கூட!

கைகளில் துடைப்பக் கட்டையுடன் வந்த கூன் விழுந்த வயதான மனிதர் ஒருவர் ரயில் நிலையத்தின் மேடும் பள்ளமுமான தரையைக் கூட்டிப் பெருக்க ஆரம்பித்தார். நாகரிகமற்ற அசல் கிராமத்தவனைப் போல் தெரிந்த அவர், செப்பமற்ற அரபு வார்த்தை களில் உறுமினார்: -

> "வெளியே போங்க... இதுக்குப் பிறகு யாரும் வரவேற்க இல்லை... வெளியே போங்க...!"

சிறாரின் கண்களில் ஒளி குறைந்தது. அவர்களது உள்ளு ணர்வு தம்மைப் பாதுகாத்துக் கொள்ள உந்தியது. ஒரு வார்த்தை யேனும் பேசாமல் அவர்கள் நால்வரும் மிக நெருக்கமாகினர். இளையவர்கள் மூவரதும் கண்கள் சனாவுக்கும் உறுமும் கிழவருக்கும் இடைப்பட்ட தரையில் நிலைத்திருந்தன. வாயிலுக்கு வெளியே நின்ற நான் கிழவரை அணுகினேன். அவருக்கு ஒரு வெளிநாட்டு சிகரட்டை நீட்டினேன்.

> "உங்களுக்குப் பிரச்சினை இல்லையென்றால் அவர்களை இன்னும் கொஞ்சம் இங்கு நிற்க விடலாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறார்களுக்குக் கேட்காமல் அவரது காதில் மெதுவாகச் சொன்னேன். அவர் துடைப்பக் கட்டையைத் தனது நெஞ்சில் சாத்தி விட்டுச் சொன்னார்: -

"இப்போது இன்ஸ்பெக்டர் வருவார்."

"அதை அப்போ பார்த்துக்குவம்!"

"இவங்க உங்களோடயா வந்தாங்க?"

"ஆமா!"

கிழவரின் சிகரட்டைப் பற்ற வைத்தேன். அவர் புகையை ஆழமாக உள்ளிழுத்தார். கண்களை மூடி அனுபவித்தபடி புகையை வெளியே விட்டார். கையுயர்த்தி சிகரட்டை நன்றாகப் பார்த்துத் திருப்தியடைந்தார். அப்படியே கூடத்தின் ஓரத்தே நழுவிய அவர் சட்டெனக் காணாமல் போனார்.

அரை மணி நேரம் கடந்தது. சிறியவள் விம்மினாள்.

"சாலிஹ் மாமா எப்போ வருவார்..? எனக்குப் பசிக்கிறது...!"

சனா தனது பையைத் திறந்து சுற்றி வைத்திருந்த பாண் துண்டைக் கையிலெடுத்தாள். மூவரும் அதைச் சூழ்ந்தார்கள். அவர்களது கண்கள் அந்தப் பாண்துண்டில் மொய்த்தன. அதை மூன்று துண்டுகளாகப் பிய்த்து மூவருக்கும் கொடுத்தாள்.

"அப்போ உனக்கு?" - தியா கேட்டான்.

"நான் சாலிஹ் மாமாவின் வீட்டில் சாப்பிட்டுக் கொள்வேன்!"

"நாம அங்கே என்ன சாப்பிடப் போறம்?"

"எனக்குத் தெரியாது!"

"கைமார்... தேனுடன்...?"

"எனக்குத் தெரியாது!"

தியா சிரித்தான். பின்னர் சொன்னான்: -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாம சாப்பிடுவோம்... 'எனக்குத் தெரியாது'வும் நம்மோடு சாப்பிடும்!"

திடீரென்று அந்தக் கூன் விழுந்த கிழவர் எங்கிருந்தோ வந்து சேர்ந்தார்.

"நீங்க இன்னும் போகல்லியா... சீக்கிரம் கிளம்புங்க... நான் சுத்தப்படுத்தணும்.."

வெளியே நின்றிருந்த நான் உள்ளே சென்றேன். சிகரட் பக்கற்றை எடுத்து ஒரு சிகரட்டை உருவினேன். கிழவர் வாயைத் திறப்பதற்கு முன்னரே அதைப் பற்றவைத்து அவர் வாயில் வைத்தேன். பிள்ளைகளுக்குத் தெரியாமல் ஒரு சிறு தொகைப் பணத்தை அவரது கைக்குள் வைத்தேன். மீண்டும் அவர் காணாமல் போனார்.

"சாலிஹ் மாமா....."

- அவர்கள் வசனத்தை நிறைவு செய்தார்கள்.

"சொல்லுற மாதிரி க் கேட்டுக் கொள்ளணும்!"

சிறார்களுக்குப் பின்புறத்தைக் காட்டியவாறு நான் நின்றிருந்தேன். பின்னர் புகைப்பதற்காக அமர்ந்தேன்.

சனா சின்னத் தங்கையை கழிவறைக்குக் கொண்டு சென்று முகங்கழுவி அழைத்து வந்தாள். அவளது முகத்தைத் துடைத்து விட்டாள். அச்சிறுமி மிகவும் அழகாக இருந்தாள். சனா, ரஜாவை அழைத்தாள். அவள் மறுத்தாள்.

"ரயிலில் தூங்கிய பிறகு முகங்கழுவ வேண்டாமா... சாலிஹ் மாமா வருவதற்குள்...!"

ரஜாவின் பதிலுக்குக் காத்திராமல் அவளை இழுத்துச் சென்று திரும்பினாள். அவள் வந்த உடனேயே தியா பாத்ரூம் நோக்கிச் சென்றான்.

"என்னோட யாரும் வர வேணாம்!"

அவன் திரும்பியதும் உள்ளே சென்று வந்த சனா தனது ஈரத்தலை மயிரை சிறிய ஒரு சீப்புக் கொண்டு வார ஆரம்பித்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியா ஏதேதோ சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தான்.

ஒன்பது மணியாயிற்று. அவர்கள் விளையாட ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவரும் மற்றவருடன் கைகளைக் கோத்துப் பாட ஆரம்பித்தார்கள்.

**"ஓ... எங்கள் அழகிய தேசமே...!"**

சனா திடீரெனக் கழிவறைக்குள் நுழைந்தாள். அவள் அவ்விடத்தில் இல்லையென்பதை உணர்ந்ததும் அவர்கள் தமது விளையாட்டை நிறுத்தினார்கள். அவள் வெளியே வந்த போது கண்கள் சிவந்திருந்தன. அவளது அழகிய முகம் உள்ளார்ந்த கவலைகளால் களையிழந்திருந்தது. அவள் தனது கவலை வெளித் தெரியாதிருக்கப் பிரயத்தனப்பட்டாள். ஏனைய மூவரும் அவளைச் சுற்றி நின்றார்கள்.

"சாலிஹ் மாமா வருவாரா?"

ரஜா கேட்டாள். சனா பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தாள். நேரம் பத்தரையைத் தாண்டியது. சனா ரயில் நிலைய வாயிலை நோக்கினாள். மற்றவர்களும் அவளோடு சேர்ந்து வாயிலை நோக்கினார்கள். சனா மீண்டும் கழிவறைக்குள் சென்றாள். அங்கு சென்று வாய்விட்டு அழுதுவிட்டுத் திரும்பி வருகிறாள் என்று தோன்றியது.

"நாம விளையாடுவோம்..!"

தியா சத்தமிட்டான். சிறிய தங்கை 'எனக்குப் பசிக்கிறது' என்று அழத் தொடங்கினாள். சனா எழுந்து நின்று 'நாம் விளையாடுவோம்.. நானும் சேர்ந்து கொள்கிறேன்' என்றாள். வட்டமாக நின்று கைகளைப் பற்றிக் கொண்டு பாட ஆரம்பித்தார்கள். சாலிஹ் மாமாவின் பெயர் எழுதப்பட்ட கடதாசித் துண்டுகள் அவர்களது கரங்களில் இருந்தன.

**"ஓ... எங்கள் அழகிய தேசமே...!"**

நான் புன்னகைத்தபடி வெளியே சென்றேன். அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நேரமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். நான் உள்ளே மீண்டும் வந்த போது சனாவின் கண்களில் நீர் கோத்திருப்பதைக் கண்டேன்.

அவளால் விளையாட்டைத் தொடர முடியவில்லை. தன்னை விடுவித்துக் கொண்டு வந்து பெஞ்சில் அமர்ந்து தனது சின்னக் கரங்களால் முகத்தைப் பொத்தித் தேம்பித் தேம்பிக் குலுங்கிக் குலுங்கியழுதாள்.

சனாவை நோக்கி ஓடிவந்த மூவரும் அவளைக் கட்டிய ணைத்துத் தேம்பியழத் தொடங்கினார்கள். அவர்களது கைகளிலி ருந்து நழுவிய சாலிஹ் மாமாவின் பெயர் எழுதப்பட்ட தாள் துண்டுகள் காற்றில் பறந்தன. □

▣

கைமார் - ஈராக்கிய உணவு வகை

University of Peradeniya
16 JUL 2013
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தௌஃபீக் அல் ஹக்கீம்

தௌஃபீக் அல் ஹக்கீம் 1898ல் எகிப்தில் ஒரு செல்வந்த நீதிபதியின் மகனாகப் பிறந்தவர். சட்டமும் இலக்கியமும் கற்றவர். அரபுலகின் சிறந்த நாடகாசிரியர்களில் ஒருவர். நாவல், கவிதை, சிறுகதை, கட்டுரை எனப் பல துறை களிலும் இயங்கியவர். எகிப்திலும் பிரான்சிலும் கல்வி கற்ற இவர் யுனெஸ்கோவின் பிரதிநிதியாகவும் எகிப்தின் பிரதான செய்திப் பத்திரிகையின் பணிப்பாளராகவும் செயற்பட்டார். பிரதி வழக்குத்தொடுநராகவும் எகிப்தின் தேசிய நூலகத்தின் முகாமையாளராகவும் கடமை யாற்றிய இவரது படைப்புக்கள் பிரெஞ்ச், இத்தாலி, ரஷ்ய மற்றும் ஆங்கில மொழிகளுக்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளன. தௌபீக் அல் ஹக்கீம் 1987ல் காலமானார்.

ஹார்வார்ட் பல்கலைக்கழக மத்திய கிழக்குக் கற்கை களுக்கான நிலையத்துக்காக Carol Johnson Shedd தொகுத்த Are you listening என்ற நூற் பிரதியிலிருந்து இந்தக் கதை பெற்றுக் கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கான அற்புதங்கள்

பாதிரியார் அதிகாலையிலேயே துயிலெழுந்து விடுவது வழக்கம். பறவைகள் தங்களது கூடுகளிலிருந்து துயில் கலைந்து புறப்படுகையில் தனது பிரார்த்தனைகளை அவர் ஆரம்பித்து விடுவார்.

அவரது அர்ப்பணிப்பு மிகுந்த சேவை கிழக்கு நிலப் பிராந்தியத் திருச்சபையிலும் மக்கள் மத்தியிலும் பெரும் மதிப்பை யும் கண்ணியத்தையும் அவருக்கு ஈட்டிக் கொடுத்திருந்தன.

தனது வாயிற் கதவுக்கு முன்னால் ஒரு குருத்தோலை மரத்தை அவர் நட்டிருந்தார். சூரியனின் வெப்பக் கதிர்களைக் கருத்திற் கொண்டு தினமும் காலையில் அதற்கு நீர் வார்த்து வருவார். அன்றும் அச்செடிக்கு நீர் இறைத்து விட்டு உள்ளே நுழைய முயலும் போதுதான் பார்த்தார்; ஒரு சிறிய சனக் கூட்டம் அவரை எதிர் பார்த்து நின்றிருந்தது.

அவர்களது முகங்களில் கவலை படர்ந்திருந்தது. அவர்களில் ஒருவர் முன் வந்து கெஞ்சும் குரலில் பேசினார்.

"ஃபாதர்... எங்களைக் காப்பாற்றுங்கள். உங்களைத் தவிர வேறு யாரும் காப்பாற்ற முடியாது. எனது மனைவி மரணப் படுக்கையில் கிடக்கிறாள். அவள் தன் கடைசி மூச்சை விடுவதற்குள் தங்களது ஆசீர்வாதத்தைக் கோருகிறாள்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவள் எங்கே?"

"அண்மையிலுள்ள கிராமத்தில்தான். சவாரிக்கான பிராணி தயாராக இருக்கிறது."

என்று சொன்ன மனிதன் சற்று அப்பால் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த இரண்டு சவாரிக் கழுதைகளைச் சுட்டிக் காட்டினான்.

"போகலாம்தான்... ஆனால் சற்று அவகாசம் தந்தால் எனது பணிகளைச் சகோதரரிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்பி விடுவேன்."

"அதற்கு நேரம் போதாது."

- அவர்கள் எல்லோரும் ஒருமித்த குரலில் சொன்னார்கள்.

"அந்தப் பெண் இறந்து கொண்டிருக்கிறாள். நாம் அங்கு செல்வதற்குள் மிகவும் தாமதமாகிவிடும். இறந்து கொண்டிருக்கும் அந்த அப்பாவிப் பெண் மீது நீங்கள் உண்மையான அன்பு கொண்டவராகவும் கருணையுள்ள காப்பாளருமாக இருந்தால் இப்படியே எங்களுடன் வந்து விடுங்கள். அவ்வளவு தூரமில்லை. இப்படியே கிளம்பினால் சூரியன் உச்சிக்கு வரும் போது அங்கிருந்து திரும்பி விடலாம்."

"சரி, அப்படியானால் நாம் எல்லோரும் ஒன்றாகவே செல்வோம்"

பாதிரியார் ஓர் உற்சாக மனோநிலையில் சொன்னார். ஒரு கழுதையில் பாதிரியாரும் மறு கழுதையில் இறந்து கொண்டிருக்கும் பெண்ணின் கணவனும் ஏறிக் கொள்ள ஏனையோர் பின் தொடர்ந் தனர்.

சில மணித்தியாலப் பயணத்துக்குப் பின்னர், இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டியிருக்கிறது என்று பாதிரியார் கேட்டார். "அநேகமாக நெருங்கி விட்டோம்" என்று பதில் வந்தது. சூரியன் உச்சிக்கு வருவதற்கு முன்னரே அவர்களது கிராமத்தை அடைந்து விட்டார்கள். இப்பட்டாளத்தைக் கண்டதும் நாய்கள் குரைக்க ஆரம்பித்தன. அங்குள்ள மக்கள் பாதிரியாரை மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்துடன் வரவேற்றுக் கிராமத்தில் உள்ள ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்குள்ள ஒரு பெரிய அறைக்குள் ஒரு பெண் கட்டிலொன்றில் வளர்த்தப்பட்டிருந்தாள். அவளது பார்வை மோட்டு வளையைப் பார்த்தவாறு இருந்தது.

பாதிரியார் அவளை அழைத்துப் பார்த்தார். பதில் எதுவும் வரவில்லை. ஆகவே அவள் மரணத்துக்கு மிக அருகில் இருக்கிறாள் எனத் தீர்மானித்துப் பாதிரியார் அவளுக்காகக் கருணையுடன் பிரார்த்தித்தார். பிரார்த்தனை முடியுந் தறுவாயில் அவளிடமிருந்து பெருமூச்சொன்றும் விம்மலும் வெளிப்பட்டன. அவளைப் பீடித்திருந்த துன்பங்கள் அகன்று விட்டதாகப் பாதிரியார் நினைத்தார்.

பின்னர் அவளது கண் இமைகள் துடித்தன. தெளிவாகக் கண்ணைத் திறந்து பார்த்து மிக மெதுவாக முணுமுணுத்தாள்.

"நான் எங்கே இருக்கிறேன்?"

"நீ உனது வீட்டில்தான் இருக்கிறாய்."

- அதிசயம் நிகழ்த்திய பாதிரியார் சொன்னார்.

"எனக்குக் குடிப்பதற்கு நீர் வேண்டும்."

"நீர்க் கூஜாவைக் கொண்டுவாருங்கள்," என்றும் "குவளையில் நீர் கொண்டு வாருங்கள்," என்றும் சூழ இருந்தவர்கள் யார் யாரையோ பார்த்துச் சொன்னார்கள்.

ஒரு பெரிய குவளையைத் தேடி நீர் கொண்டு வந்தார்கள். அந்தப் பெண் அந்த நீரைக் குடித்து முடிக்க நீண்ட நேரம் எடுத்துக் கொண்டாள். குடித்து முடிந்ததும் ஏப்பம் விட்டபடி கேட்டாள்:-

"சாப்பிட ஏதாவது இருக்கிறதா? எனக்கு ரொம்பப் பசியாக இருக்கிறது."

அங்குள்ளவர்கள் அவளுக்கு உணவு ஏற்பாடு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டார்கள். அருட்பார்வையின் காரணத்தால் எழுந்த அந்தப் பெண் ஆவலுடன் உணவைச் சாப்பிட்டாள். பின்னர் கட்டிலிலிருந்து இறங்கி மிக இயல்பாக வீடு முழுக்க நடமாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தாள்.

அங்கு நடந்தவற்றைப் பார்த்து மலைத்துப் போன மக்கள் பாதிரியாருக்கு முன்னால் பயபக்தியோடு பணிந்து நின்றார்கள். அவரது கரங்களைப் பிடித்து முத்தமிட்டார்கள்.

"அருட் தந்தையே! உங்களது ஆசீர்வாதம் வீடு முழுக்கப் பரவி, இறந்து கொண்டிருந்த பெண்ணை மீட்டுத் தந்து விட்டது. நாங்கள் உங்களுக்கு நன்றியுடையவர்களாவோம். எங்களது மரியாதையையும் அன்பளிப்பையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீர்களா?"

- அவர்கள் பாதிரியாரைக் கேட்டார்கள்.

"நன்றிக்குரியதாகவோ அன்பளிப்புக்குரியதாகவோ நான் எதையும் செய்துவிடவில்லை. கர்த்தரின் சக்தியே அதைச் சாதித்தது," என்றார் பாதிரியார்.

"நீங்கள் எப்படிச் சொன்னாலும் சரி. அருட் தந்தையே, கர்த்தரானவர் உங்களது கரங்களூடாகத் தனது ஆசீர்வா தத்தை வழங்கியதனாலேயே இங்கு அத்தனை அதிசயங் களும் நடந்தேறின. எங்களது எளிய வீட்டுக்கு நீங்கள் ஒளியேற்றி விட்டீர்கள்; இது எங்களுக்கு நல்ல எதிர்காலத் தையும் கௌரவத்தையும் தரக்கூடியதாக இருக்கிறது. எங்களது வழக்கத்துக்கு ஒப்ப உரிய உபசாரத்தை வழங்கு வதற்குத் தாங்கள் அனுமதிக்க வேண்டும்."

அந்தப் பெண்ணின் கணவன் பாதிரியாரிடம் பணிவோடு கேட்டுக் கொண்டான்.

அந்த வீட்டில் பாதிரியார் தங்குவதற்கு ஓர் அறையைத் தயார்படுத்தக் கட்டளையிட்டான் வீட்டுக்காரன். பாதிரியார் திரும்பிச் செல்லக் கேட்டபோதெல்லாம் விருந்தினரை மூன்று தினங்கள் வீட்டில் தங்கவைப்பது தங்களது வழக்கம் என்றும் தனது மனைவியின் உயிரைக் காத்த அருள் மிகுந்த பாதிரியாரை இடையில் அனுப்ப முடியாது என்றும் உறுதியாகச் சொன்னான். இந்த மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினங்களிலும் பாதிரியார் மீது அளவு கடந்த பக்தியையும் மரியாதை யையும் அவன் வெளிப்படுத்தினான்.

மூன்றாவது தினம் ஓர் அன்பளிப்புக் குவியலைப் பாதிரி யாருக்கு வழங்கினான் வீட்டுக்காரன். வீட்டில் சுட்ட ரொட்டிகள், விதம் விதமான அவரை விதைகள், கோழிகள் ஆகியன அதில் அடங்கியிருந்தன. இவை தவிர, சேர்ச்சுக்குரிய பணமாக ஐந்து பவுண் களையும் பாதிரியாரிடம் ஒப்படைத்தான். பிரிவுக் கவலையுடன் பாதிரியாரைக் கழுதையிலேற்றி வாயிற் கதவருகே வழியனுப்பிய வேளை, திடீரென வந்த ஒருவன் மூச்சிரைத்தபடி ஓடிவந்து பாதிரி யாரின் முன்னால் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான்.

"தந்தையே, உங்களது அற்புதங்கள் பற்றிய செய்தி எல்லாக் கிராமங்களுக்கும் பரவி விட்டது. எனக்கொரு மாமா இருக்கிறார். அவர் எனக்குத் தந்தை போன்றவர். அவர் இப்போது மரணத் தறுவாயில் உங்களது ஆசீர்வாதத்தை எதிர்பார்க்கிறார். அவரது ஆசை நிறைவேறாமல் அவரது உயிர் பிரிந்து விடக் கூடாது. எனவே நீங்கள் வந்து ஆசீர்வதி யுங்கள்!" என்று அவன் கெஞ்சி நின்றான்.

"மகனே, நான் பயணம் வைத்து விட்டேனே.." என்றார் பாதிரியார் நிச்சயமில்லாமல்.

"அவ்வளவு நேரம் போகாது. எனது மாமாவைப் பார்க்கா மல் நீங்கள் போக நான் விடமாட்டேன்."

என்ற அவன் பாதிரியார் அமர்ந்திருந்த கழுதையின் கடி வாளக் கயிற்றைக் கையில் பற்றிக் கொண்டான்.

"உனது மாமா இப்போது எங்கே?" என்று கேட்டார் பாதிரியார்.

"மிகவும் அண்மையில்தான். சில நிமிடங்களில் போய்விட லாம்," என்றான்.

பாதிரியாருக்கு அவனது வேண்டுகோளுக்கு இணங்குவ தைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. ஒரு மணித்தியாலத்துக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவான பயணத்தில் கிராமத்தை அடைந்தார்கள். ஏற்கனவே மரணப்படுக்கையில் கிடந்த பெண்ணைப் போல இந்த மனிதனும் கட்டிலில் மரணப்படுக்கையில் கிடந்தான். அவனது உறவினர்கள் அவனைச் சுற்றி நம்பிக்கையும் அவநம்பிக்கையும் உள்ள மனோ நிலையில் நின்றிருந்தார்கள். பாதிரியார் தாமதிக்காமல் அம்மனிதனுக்காகத் தனது பிரார்த்தனையைச் செய்ய ஆரம்பித்தார். பிரார்த்தனை முடிவதற்குள் அந்த அதிசயம் நிகழ்ந்தது. திடீரென எழுந்த அந்த மனிதன் உணவும் நீரும் கேட்டான்.

அந்தக் கிராமத்து வீட்டிலும் மூன்று தினங்கள் தங்குமாறு வற்புறுத்தினார்கள். மூன்றாவது தினம் நிறைய அன்பளிப்புப் பொருட்களுடன் பாதிரியார் பயணம் கிளம்பினார். பொருட்களை ஏற்றிக் கொண்டு வாயிற் கதவருகே வந்த போது இன்னொரு கிராமத்திலிருந்து வந்த ஒருவன், தனது கிராமத்துக்குப் பாதிரியார் வந்தேயாக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து நின்றான். பாதிரியார் பதில் சொல்வதற்குள் கழுதையின் கயிற்றைப் பற்றிப் பிடித்து இழுத்துக் கொண்டு தனது கிராமத்துக்கு அழைத்துச் சென்றான்.

அங்கு முடமான நிலையில் ஓர் இளைஞன் படுத்திருந்தான். பாதிரியார் அவனைத் தொட்டதும் அவன் சட்டெனத் தனது இரு கால்களிலும் எழுந்து நின்றான். தனக்கு எதுவும் நடக்காதது போல் சிறியவர்கள் மற்றும் பெரியவர்களுடன் அவன் கலகலப்பாக உரையாடத் தொடங்கினான்.

அற்புதங்கள் புரியும் பாதிரியாரை முந்தைய இரண்டு கிராமங்களை விடவும் மிகவும் விசேடமாகக் கவனித்தார்கள். மதிப்பும் மரியாதையும் வழங்கினார்கள். கிராமங்களின் வழக்கப்படி அங்கும் மூன்று தினங்கள் தங்கியேயாக வேண்டும் என்று கட்டாயப் படுத்தினார்கள். அங்கு இன்னும் அதிகமான பரிசுப் பொருட்களைப் பாதிரியாருக்கு அவர்கள் வழங்கினார்கள். மூன்றாவது தினம் அவர் புறப்படுகையில் தன்மீது ஏற்றப்படும் சுமைகளைச் சுமக்க முடியாமல் கழுதை படுத்து விடுமோ என்னும் அளவுக்கு மூன்று கிராமங்களிலிருந்தும் கிடைத்த பொருட்கள் நிறைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய கிராமங்களில் கொடுக்கப்பட்ட பணத்தை விடச் சற்று அதிகமாகவே மூன்றாவது கிராமத்தவர் கொடுத்திருந்தார்கள். மொத்தமாகப் பாதிரியாரிடம் இப்போது இருபது பவுண்கள் இருந்தன. அவற்றை ஒரு பொதியில் வைத்துத் தனது உள்ளங்கிக்குள் பத்திரமாக வைத்துக் கொண்டார். தன்னைத் தனது கிராமத்தில் கொண்டு விடும்படி பாதிரியார் கேட்டுக் கொண்டதற்கிணங்கக் கழுதையில் ஏறிய பாதிரியாரைத் தொடர்ந்து அக்கிராமத்தவர் நடக்கத் தொடங்கினார்கள்.

நடை வழியில் பாதிரியாரை அவர்கள் போற்றிப் புகழ்ந்து கொண்டு சென்றார்கள்.

"உங்களைப் பாதுகாக்க நாங்கள் எதையும் செய்வோம். எங்களது வாழ்வு உங்களால் மீட்டுத் தரப்பட்டுள்ளது. உங்கள் சொந்த ஊரில் உங்களைச் சேர்ந்தவர்களிடம் உங்களைப் பத்திரமாக ஒப்படைத்து விட்டே திரும்புவோம். நீங்கள் தங்கத்தை விட விலை மதிப்புள்ளவர்."

பாதிரியார் அவர்களது வார்த்தைகளுக்குப் பதிலிறுத்தார்.

"நான் உங்களுக்குச் சிரமம் தந்து விட்டேன். வழியில் பயணம் செய்வது இப்போது பாதுகாப்பாக இல்லை. எல்லா இடங்களிலும் கொள்ளைக்காரர்களும் வழிப்பறிக் காரர்களும் நிறைந்திருக்கிறார்கள்."

"சரியாகச் சொன்னீர்கள். இப்பாதையில் மனிதர்களைக் கடத்திச் சென்றுமிருக்கிறார்கள்."

"சர்வசாதாரணமாகப் பரந்து இருக்கும் இந்தக் கள்ளப் பிசாசுகளைப் பிடிப்பதற்கு அரசாங்கத்துக்கும் துப்புக் கிடையாது. வழிப்பாதைகளில் பயணம் செய்யும் பஸ்களில் கள்வர்களும் கடத்தல்காரர்களும் பயணிகளை நோட்டமிடுவதாக எனக்குச் சொன்னார்கள். அப்படிப் பயணம் செய்பவர்களில் வசதியானவர்களைக் கடத்திச் சென்று வைத்துக் கொண்டு உறவினர்களிடம் பெருந் தொகைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் கேட்கிறார்களாம். ஒரு முறை இரண்டு பொலிஸ் காரர்கள் பயணம் செய்து கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து ஒருவரை ஒரு கும்பல் கடத்தியிருக்கிறது. அவர்கள் பொலிஸ்காரர்களிடம் முறையிட்ட போது, 'நாங்களும் உங்களுடன் வருகிறோம்' என்று சொன்னார்களாம். நிலைமை அவ்வளவு மோசமாக இருக்கிறது."

பாதிரியார் சொன்னதைக் கேட்டு அவர்கள் சிரித்தார்கள். பின்பு,

"நீங்கள் எங்களுடன் இருக்கும் வரை பயப்பட வேண்டாம். உங்களது ஊருக்குச் சென்று இறங்கும் வரை நாங்கள் உங்களைப் பாதுகாப்போம்," என்று சொன்னார்கள்.

"நீங்கள் எவ்வளவு துணிச்சலானவர்கள் என்று எனக்குத் தெரியும். உங்கள் தாராளத் தன்மையாலும் எனக்கு வழங்கிய கௌரவத்தாலும் என்னை மெய்மறக்கச் செய்து விட்டீர்கள்."

"நீங்கள் அவ்வாறு சொல்ல வேண்டாம். நீங்கள் எங்களுக்குக் கிடைத்த விலைமதிப்பற்ற செல்வம்!"

என்று சொன்ன அவர்கள் பாதிரியாரின் ஆற்றலையும் அவர் நிகழ்த்திய அற்புதங்களையும் பற்றிப் பேசிக் கொண்டு வந்தார்கள்.

அவர்களின் பேச்சுக்களைச் செவிமடுத்துக் கொண்டே நடந்த எல்லா விடயங்களையும் பற்றிச் சிந்தித்தார் பாதிரியார். பிறகு சொன்னார்: -

"உண்மையில் கடந்த சில நாட்களாக நடந்த விடயங்கள் அதிசயமானவைதான். இந்த அற்புதங்கள் எல்லாம் என்னுடைய ஆசீர்வாதத்தால் மாத்திரம்தான் சாத்தியமானது என்று நினைக்கிறீர்களா?"

"உங்களுக்கு அதில் சந்தேகம் இருக்கிறதா?"

"கடந்த ஒன்பது நாட்களிலும் இவ்வளவையும் சாதிக்க நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இறை தூதன் அல்லன். எனவே, இந்த அற்புதங்களைச் செய்வதற்கு என்னை ஆளாக்கியவர்கள் நீங்கள்தான்."

"நாங்களா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

- எல்லோரும் ஒருமித்த குரலில் கேட்டார்கள்.

"ஆம். நீங்கள்தாம் முக்கியமான காரணம்."

"உங்களுக்கு யார் அப்படிச் சொன்னது?"

- முணுமுணுத்துக் கேட்டபடி அவர்கள் தங்களுக்குள் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

"இது உங்களது நம்பிக்கை. நம்பிக்கைதான் நீங்கள் இவற்றை அடைவதற்குக் காரணம். நம்பிக்கையாளரின் ஆத்ம பலம் எத்தகையது என்பது உங்களுக்குத் தெரியாது. நம்பிக்கை என்பது பலம், மகனே... நம்பிக்கை என்பது பலம்! கல்லுக் குள் இருக்கும் நீரைப் போல நம்பிக்கையாளரின் இதயத் துக்குள் அதிசயங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன. அது வெடித்துக் கிளம்புவதற்கு நம்பிக்கையே காரணம்."

பாதிரியார் பேசப் பேசப் பின்னால் வந்தவர்கள் தலையை ஆட்டிக் கொண்டு வந்தார்கள். அவர் தனது பேச்சில் உணர்ச்சி வசப்பட்டுத் தொடர்ந்து பேசிக் கொண்டே வந்ததால் பின்னால் வந்த வர்கள் ஒவ்வொருவராக நழுவிச் சென்றதை அவரால் அவதானிக்க முடியவில்லை.

அவர் தனது பேச்சை முடித்துக் கூட வந்தமைக்காக அவர்க ளுக்கு நன்றி தெரிவிக்கத் திரும்பிப் பார்த்த போது கடைசியில் தனக்குத் தானே உபதேசம் புரிந்திருப்பது அவருக்குத் தெரிய வந்தது.

அவரது ஆச்சரியம் நீடிக்கவில்லை. அவரை எதிர்கொண்டு அவரது குடும்பத்தினரும் சகோதர பாதிரியும் மூத்த பாதிரிமார்களும் நின்றிருந்தனர். அவரைக் கண்டதும் அவர்கள் கட்டித் தழுவினார்கள். கைகளிலும் கன்னங்களிலும் முத்தமிட்டார்கள். அவர்கள் அனைவ ரதும் கண்களில் மகிழ்ச்சி நிறைந்து கன்னங்களில் கண்ணீர் வழிந் தோடிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடைசியில் வந்து சேர்ந்து விட்டீர்கள். அவர்கள் தங்களது வாக்கைக் காப்பாற்றி விட்டார்கள். பணத்தை அவர்கள் எடுத்துக் கொண்டதற்குப் பரவாயில்லை; உங்களைத் திருப்பி ஒப்படைத்தார்களே அதுவே ஒரு பெரிய விடயம். ஃபாதர், பணத்தை விடவும் நீங்கள் எங்களுக்குப் பெரிய சொத்து."

பணம் என்று சொன்னதும் அந்தச் சொல் அவர் சிந்தைக்கு உறைத்தது.

"பணமா? என்ன பணம்?" என்று கேட்டார்.

"அதுதான் அந்தக் கும்பலுக்குக் கொடுத்த பணம்."

"எந்தக் கும்பல்?"

"உங்களைக் கடத்திக் கொண்டு சென்றதே, அந்தக் கும்பல். முதலில் ஆயிரம் பவுண் வேண்டும் என்றுதான் அடம் பிடித் தார்கள். நீங்கள் உங்களுடைய நிறைக்குச் சம அளவான தங்கத்துக்குப் பெறுமதியானவர் என்று அவர்கள் சொன் னார்கள். ஒருவாறு கெஞ்சிக் கூத்தாடி ஐநூறு பவுண்களுக் குச் சம்மதிக்க வைத்தோம். சேர்ச் நிதியிலிருந்துதான் அப்பணத்தை வழங்கினோம்."

"ஐநூறு பவுண்கள்.....? எனக்காக நீங்கள் கொடுத்தீர்களா...? என்னைக் கடத்தியதாகவா அவர்கள் சொன்னார்கள்...?"

தன்னை மறந்து கூவினார் பாதிரியார்.

"நீங்கள் காணாமல்போன மூன்றாவது நாள் ஒரு சிலர் வந்து, மூன்று தினங்களுக்கு முன் காலையில் ஒரு கும்பல் உங்களைக் கடத்திச் சென்றதாகச் சொன்னார்கள். பணம் கொடுக்காத பட்சத்தில் நீங்கள் அழிக்கப்படுவீர்கள் என்றும் கொடுத்தால் பத்திரமாக அந்தக் கும்பல் உங்களைத் திருப்பி அனுப்பும் என்றும் அவர்கள் சத்தியம் செய்தார்கள்."

இந்த வார்த்தைகளில் அவருக்கு எதுவோ புரிவது போலிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. நடந்து முடிந்த விடயங்களை அவரது மனம் வேகமாக அசை போட்டது. 'அந்த சுகவீனமுற்றவர்கள்... பிரார்த்தித்துத் தொட்ட வுடன் துள்ளி எழுந்த அவர்களது நடிப்பு... ஹா... என்ன ஒரு கெட்டித்தனமான திட்டம்..!'

- அவர் தனக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

பாதிரியாரின் உறவினர்கள் அவரின் உடலைத் தொட்டுப் பரிசோதித்து விட்டு,

"ஆபத்து ஏதும் விளைவிக்கப்படவில்லை. ஃபாதர், உங்க ளைக் கடத்தியவர்கள் உங்களை மோசமாக நடத்தவில்லை என்பது புரிகிறது. ஆனால் அவர்கள் உங்களை வைத்துக் கொண்டு என்னதான் செய்தார்கள்?" என்று கேட்டார்கள்.

"என்னை அவர்கள் அற்புதம் செய்து காட்டுபவனாக ஆக்கி விட்டார்கள் - அந்த அற்புதங்களால் சேர்ச் நிதிக்குத்தான் நஷ்டம்!" □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தையிப் ஸாலிஹ்

தையிப் சாலிஹ் வட சூடானில் உள்ள Merowe என்ற இடத்தில் 1929ல் பிறந்தவர். அரபுலகின் அதிசிறந்த படைப்பாளிகளில் ஒருவரான இவர். நாவல், சிறுகதை, பத்தி எழுத்துக்களில் பெயர் பதித்தவர். "The Season of Migration to the North" என்ற நாவல் இவரது படைப்புக் களில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனைய படைப்புகளில் ஒன்றான 'The wedding day of Zain" குவைத்தில் "Urs Al-Zayn" என்ற பெயரில் 1976ல் படமாக எடுக்கப்பட்டது. "The Cypriot Man" என்பது அவரது மற்றொரு படைப்பு. சூடானில் இவரது படைப் புக்கள் அரசினால் தடைசெய்யப்பட்டிருந்தன. எனினும் இவரது படைப்புக்கள் 20க்கும் மேற்பட்ட மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. லண்டனிலிருந்து வெளிவரும் அல் மஜல்லாஹ் என்ற மாசிகையில் எழுதி வந்தார். 18.02.2009 அன்று லண்டனில் காலமான போது அவருக்கு வயது 80.

அரபு மொழியில் 1964ல் வெளியான 'The wedding day of Zain" என்ற சிறுகதைத் தொகுதியில் இருந்து பெறப்பட்ட இக் கதையை ஆங்கில மொழிக்குக் கொண்டு வந்தவர் Denys Johnson Davies.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள்

அப்போது நான் மிகவும் சிறிய பையனாக இருந்திருக்க வேண்டும்.

எனக்கு அப்போது என்ன வயதிருக்கும் என்பது ஞாபகம் இல்லையென்றாலும் எனது பாட்டனாருடன் என்னைக் காண்பவர்கள் எனது தலையைத் தடவுவதும் கன்னத்தில் கிள்ளுவதும் ஞாபகம் இருக்கிறது. எனது பாட்டனாருக்கு அவர்கள் அப்படிச் செய்ததில்லை.

முக்கியமான விசயம் என்னவென்றால் நான் ஒரு போதும் எனது தந்தையாருடன் வெளியே செல்வதில்லை. எனது பாட்டனார் எப்போதெல்லாம் வெளியில் செல்வாரோ அப்போதெல்லாம் என்னையும் கூட்டிக் கொண்டுதான் செல்வார். ஆனால் காலை நேரத்தைத் தவிர. ஏனென்றால்,காலையில் நான் குர்ஆன் ஓதுவதற்குப் பள்ளிவாசலுக்குச் சென்று விடுவேன்.

பள்ளிவாசல், ஆறு, வயல்கள் - இவைதாம் எமது வாழ்வின் அடையாளங்கள். என் வயதொத்த சிறுவர்கள் குர்ஆன் ஓதுவதற்குப் பள்ளிவாசலுக்குப் போவதை ஒரு சிரமமான காரியமாக உணர்ந்த போதும் நான் அதை மிகவும் விரும்பினேன். சந்தேகமேயின்றி, அதற்குக் காரணங்கள் இருந்தன. நான் விரைவாகக் குர்ஆனை மனனம் செய்பவனாக இருந்தேன். யாராவது ஒரு முக்கியஸ்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தால் ஷெய்க் என்னை எழுப்பி நிறுத்திக் குர்ஆன் வசனங்களை ஓதுமாறு சொல்வார். என்னைப் பாட்டனாருடன் காண்பவர்கள் செய்வது போல அவர்களும் எனது தலையைத் தடவுவார்கள். எனது கன்னத்தில் செல்லமாகக் கிள்ளுவார்கள்.

பள்ளிவாசல் என்பிரியத்துக்குரிய இடமாக இருந்தது. ஆற்றையும் நான் மிகவும் விரும்பினேன். காலையில் குர்ஆன் ஓதி முடிந்ததும் எனது ஓதற் பலகையைச் சட்டெனப் போட்டுவிட்டு ஒரு ஜின்னைப் போல் வேகமாகத் தாயாரிடம் சென்று விடுவேன். மளமள வென்று எனது காலையுணவைச் சாப்பிட்டு விட்டு நேராகச் சென்று ஆற்றில் பாய்ந்து விடுவேன். நீந்திக் களைத்ததும் ஆற்றங்கரையில் அமர்ந்து ஆற்றின் சிற்றலைகள் கிழக்குப் பக்கமாக நகர்வதையும் அவை தடித்த அடிப் பகுதிகளைக் கொண்ட அக்கேசியா மரங்களின் பின்னால் மறைவதையும் உற்றுப் பார்த்தபடி அமர்ந்திருப்பேன்.

இராட்சத அக்கேசியா மரங்களுக்கப்பால் அரக்கர்கள் கூட்டம் வாழ்வதாக நான் கற்பனை செய்வேன். அவர்கள் எனது பாட்டனாரைப் போல, மிக உயரமானவர்களாகவும் ஒல்லியானவர் களாகவும் வெள்ளைத் தாடியுடன் நீண்ட கூர்மையான மூக்கும் கொண்டவர்களாகவும் என் கற்பனையில் படமாக வருவார்கள்.

பாட்டனாரிடம் நான் எப்போது எந்தக் கேள்வியைக் கேட்டாலும் முதலில் சுட்டு விரலால் தனது மூக்கு நுனியையும் பிறகு வெண்ணிறமான தாடியையையும் தேய்த்துக் கொண்ட பின்னரே பதில் சொல்லுவார். பட்டுக் கம்பளி போல் தோன்றும் வெள்ளை வெளேரென்ற அந்த அழகிய தாடியைப் போல் வெண்மையான எதையும் நான் கண்டதில்லை. அவர் மிகவும் உயரமான ஒரு மனிதராக இருந்தார். எங்கள் கிராமத்தில் அவரைக் குனிந்து பார்த்துக் கதைத்த ஒருவரை நான் கண்டதில்லை. எந்த ஒரு வீட்டுக்குச் சென்றாலும் அவரால் வளைந்து குனியாமல் நுழைய முடிந்ததும் இல்லை. அவர் அப்படி வளைந்து குனியும் போது ஆற்றின் சிற்றலை கள் பெரிய அக்கேசியா மரங்களின் பின்னால் வளைந்து செல்வது என் கற்பனையில் தோன்றும். அவரை நான் மிகவும் விரும்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் பெரியவனாகி வளர்ந்தால் அவரைப் போல் உயரமான ஒருவனாக இருப்பேன் என்றும் அப்போது பாட்டனாரைப் போலவே பெரிய எட்டு வைத்து நடக்க முடியும் என்றும் கற்பனை பண்ணினேன்.

அவருடைய விருப்பத்துக்குரிய பேரப்பிள்ளையாக நான் இருந்தேன் என்று நினைக்கிறேன். எனது மச்சான்மார் பெரியப்பா பிள்ளைகள் எல்லோரும் முட்டாள் பசங்களாக இருந்தனர். அதனால் என்னைக் கெட்டிக்காரப் பையன் என்று அழைத்தார்கள். நான் எப்போது சிரிக்க வேண்டும் எப்போது மௌனமாக இருக்க வேண்டும் என்பதை எனது பாட்டனார் எப்போது விரும்புகிறார் என்பதை நான் நன்கு தெரிந்து வைத்திருந்தேன்.

அவர் தொழும் நேரங்களை நான் ஞாபகம் வைத்திருந்தேன். அவர் தொழ முன் உடற் சுத்திகரத்துக்காக அவர் சொல்லாமலேயே நான்தான் நீர் கொண்டு வந்து கொடுப்பேன். அவருக்கு வேறு எந்த வேலைகளும் இல்லையென்றால் அவருக்காக நான் குர்ஆன் அத்தியாயங்களை ராகமெடுத்து அழகாக ஓதிக்கொண்டிருப்பதை விரும்புவார். அந்த நேரம் அவர் அதை ரசித்து மகிழ்வதை அவரது முக பாவங்களிலிருந்து தெரிந்து கொள்வேன்.

ஒரு நாள் எமது அயலில் வசிக்கும் மஸூத் பற்றி அவரிடம் கேட்டேன்.

"எனக்கு விளங்கவில்லை... நீங்கள் எமது அயல்வீட்டுக்காரர் மஸூதை விரும்பவில்லையா...?"

பாட்டனார் தனது மூக்கு நுனியையும் தாடியையும் தேய்த்துக் கொண்டபடி,

"அவன் ஒரு சோம்பேறி. அப்படியானவர்களை எனக்குப் பிடிக்காது!" என்று பதில் சொன்னார்.

"சோம்பேறி என்றால் என்ன?" என்று கேட்டேன்.

பாட்டனார் ஒரு கணம் தனது தலையைப் பணித்துக் குனிந்தபடி அமர்ந்து இருந்து விட்டு நிமிர்ந்து கண்ணுக்கு முன்னால் நீண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கும் நிலப் பரப்பை ஊடுருவிப் பார்த்தார். பிறகு சொன்னார்:-

"பாலைவனத் தொங்கலிலிருந்து நைல் நதிக்கரை வரை விசாலித்துக் கிடக்கும் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலப் பரப்புத் தெரிகிறதா உனக்கு? அதில் நிற்கும் பேரீத்த மரங் களையும் மற்றும் சான்ற், அக்கேசியா, சாயல் மரங்களையும் உன்னால் பார்க்க முடிகிறதா? இதெல்லாமே மஸூதுக்குச் சொந்தமானவைதான். இவையெல்லாம் அவனுடைய தந்தை வழியாக அவனுக்குக் கிடைத்த சொத்து."

இடை விட்டுப் பேசும் பாட்டனாரின் அமைதியைப் பயன் படுத்தி அவர் குறிப்பிட்ட அந்தப் பெரும் பரப்பை உற்று நோக்கி னேன். 'இந்தப் பேரீச்ச மரங்களும் ஏனைய மரங்களும் கறுத்த, வெடிப்புற்ற நிலமும் யாருக்குச் சொந்தமாயிருந்தால் எனக்கென்ன? என்னைப் பொறுத்த வரை எனது கனவுகளினதும் நான் விளையாடித் திரிவதற்குமான இடம் இது,' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

பாட்டனார் தொடர்ந்தார்:-

"தெரியுமா பையனே... நாற்பது வருடங்களுக்கு முன்னர் இவையெல்லாம் மஸூதுக்குச் சொந்தமாக இருந்தவை. இந்த நிலப்பரப்பின் மூன்றில் இரண்டு பங்கு இப்போது எனக்குச் சொந்தம்..."

இதுதான் எனக்குச் செய்தியாக இருந்தது. ஆண்டவன் படைத்த நாளிலிருந்து இந்த நிலப்பரப்பு எனது பாட்டனாருக்குச் சொந்தமானது என்றுதான் இதுவரை நினைத்திருந்தேன்.

"நான் இந்தக் கிராமத்தில் காலடி எடுத்து வைத்த போது எனக்கு ஓர் அடி நிலம் கூடச் சொந்தமாக இருக்கவில்லை. எல்லாமே மஸூதுக்குரியனவாக இருந்தன. இப்போது நிலைமை மாறிவிட்டது. அல்லாஹ் என்னைத் தன்னிடம் அழைப்பதற்குள் மீதி மூன்றில் ஒரு பங்கு நிலத்தையும் நானே வாங்கிவிடுவேன் என்று நினைக்கிறேன்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பாட்டனாரின் வார்த்தைகள் எனக்குள் பயத்தையும் எமது அயலவரான மஸூதின் மீது இரக்கத்தையும் ஏன் ஏற்படுத்தின என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பாட்டனார் அவர் சொன்னவாறு செய்யக் கூடாது என்று நான் விரும்பினேன். மஸூதின் பாடல்களும் அவரது இனிமையான குரலும் சலசலக்கும் நீரோட்டத்தையொத்த அவரது சக்தி வாய்ந்த சிரிப்பும் எனக்கு ஞாபகத்துக்கு வந்தன. எனது பாட்டனார் ஒரு போதும் சிரித்ததில்லை!

மஸூத் ஏன் தனது நிலத்தை விற்றார் என்று பாட்டனாரிடம் கேட்டேன்.

“பெண்கள்” - இப்படித்தான் பதில் சொன்னார் அவர். அவர் அப்படிச் சொன்னதும் பெண்கள் அவ்வளவு மோசமானவர்களா என்று எனக்கு ஒரு எண்ணம் வந்தது.

> “இந்த மஸூத் பயல் இருக்கிறானே... அவனுக்குப் பல திருமணங்கள். ஒவ்வொரு முறை திருமணம் செய்யும் போதும் ஒரு துண்டு நிலத்தை எனக்கு விற்றுவிடுவான்...!”

நான் சும்மா ஒரு கணக்குப் போட்டுப் பார்த்ததில் மஸூத் 90 பெண்களையாவது திருமணம் செய்திருக்க வேண்டும். அவனது மூன்று மனைவியரும் எடுப்பற்ற அவனது தோற்றமும் அவனது நொண்டிக் கழுதையும் அதன் பழுதடைந்த சேணமும் அவனது கிழிந்த ஆடைகளும் எனது ஞாபகத்துக்கு வந்தன. எங்களை நோக்கி வந்து கொண்டிருந்த மனிதனைக் கண்டதும் என் சிந்தனையைக் குடைந்த எண்ணங்களிலிருந்து நான் உடனே விடுபட்டேன். நானும் பாட்டனாரும் ஆளை ஆள் பார்த்துக் கொண்டோம்.

> “இன்றைக்குப் பேரீச்சம் பழங்களைப் பறிக்கப் போகிறோம்... நீங்கள் அங்கு வருவதில்லையா?” என்று கேட்டான் மஸூத்.

பாட்டனார் அங்கு வருவதை ஒருவேளை மஸூத் விரும்பவில்லையோ என்று ஒரு கணம் நினைத்தேன். பாட்டனார் சட்டென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து நின்றார். அவரது கண்களில் திடீர் ஆர்வமும் மகிழ்ச்சியும் தென்பட்டது. பாட்டனார் என் கையைப் பற்றிக் கொண்டார். நாம் இருவரும் மஸூத் பேரீச்சம் பழம் பறிக்கும் இடத்துக்குச் சென்றோம்.

அங்கிருந்த யாரோ ஒருவர் பாட்டனாருக்கு ஒரு ஸ்டூலைக் கொண்டு வந்து கொடுத்தார். நான் அவருக்கருகில் நின்று கொண்டிருந்தேன். அங்கு ஏராளமானோர் குழுமியிருந்தார்கள். அவர்கள் அனைவரையும் எனக்குத் தெரியும் என்ற போதும் ஏதோ ஒரு காரணத்துக்காக நான் மஸூதையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவனுக்குச் சொந்தமான பேரீச்சம் பழங்களே பறிக்கப்படவிருந்த போதும் அதில் எந்தவித அக்கறையும் இல்லாதவன் போல் அங்கிருந்தோரிலிருந்து விலகித் தனியே அவன் நின்றிருந்தான். பெரிய பேரீச்சங் குலை உயரத்திலிருந்து கீழே விழும் சத்தத்தில் மட்டும் அவனது கவனம் ஈர்க்கப்பட்டது. மரத்திலிருந்து பேரீச்சங் குலைகளைத் தனது நீண்ட கூரிய கத்தியால் அறுக்கும் பையனை நோக்கி ஒரேயொரு முறை அவன் சத்தமிட்டுச் சொன்னான்:

"கவனம்... மரத்தின் இதயத்தை அறுத்து விடாதே!"

மஸூத் சொன்னதை யாரும் காதில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. மரத்தின் உச்சியில் இருந்த பையன் தனது கத்தியைப் பயன்படுத்திச் சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் இயங்கிக் கொண்டிருந்தான். பேரீச்சங் குலைகள் சுவர்க்கத்திலிருந்து இறங்குவது போல் ஒவ்வொன்றாகக் கீழே விழுந்து கொண்டிருந்தன.

'மரத்தின் இதயம்' என்று மஸூத் சொன்ன வார்த்தையைப் பற்றி நான் சிந்திக்கத் தொடங்கினேன். பேரீச்ச மரத்துக்கு உணர்வுகள் இருப்பது போலவும் அதற்குள் துடித்துக் கொண்டிருக்கும் ஓர் இதயம் உள்ளது போலவும் ஒரு படம் என் மனதில் வந்தது. ஒரு முறை ஒரு பேரீத்தங் கன்றுடன் நான் விளையாடிக் கொண்டிருக்கையில் என்னிடம் மஸூத் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன. 'தம்பி... மனிதர்களைப் போலவே பேரீச்ச மரங்களும் சந்தோசத்தையும் வருத்தத்தையும் உணரக் கூடியவையாக இருக்கின்றன.' நான் அதை நினைத்து உள்ளூற வெட்கப்பட்டேன். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உணர்வு பெற்று என் முன்னால் உள்ள நிலத்தைப் பார்த்த போது எனையொத்த சிறுவர்கள் பேரீச்ச மரத்தின் அடியைச் சுற்றி எறும்புக் கூட்டம் போல் மொய்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேரீச்சம் பழங்களைச் சேகரித்துக் கொண்டும் அவற்றி லிருந்து எடுத்துத் தாராளமாகச் சாப்பிட்டுக் கொண்டும் இருந்தார் கள். சேகரிக்கப்பட்ட பேரீச்சம் பழங்கள் குவிக்கப்பட்டு ஒரு மேடு போல் காட்சியளித்தது. ஆட்கள் அளக்கும் கூடைகள் மூலம் அவற்றை அள்ளி நிறுத்துச் சாக்குகளுக்குள் போட்டுக் கொண்டிருந் தார்கள். நான் எண்ணிப் பார்த்த போது பேரீச்சம் பழங்கள் கொண்ட முப்பது சாக்குகள் இருந்தன. வியாபாரி ஹுஸைன், எமது தோட்டத் துக்குக் கிழக்குப் பக்கமாக உள்ள நிலத்தின் சொந்தக்காரர் மூஸா, எனக்கு அறிமுகமில்லாத மற்றுமிருவர் தவிர அங்கு குழுமியிருந்த ஏனையோர் கலைந்து செல்லத் தொடங்கினார்கள்.

ஒரு சிறிய விசில் சத்தம் எனது காதுகளுக்குக் கேட்டது. பாட்டனாரைப் பார்த்தேன். அவர் ஒரு குட்டித் தூக்கத்தில் இருந்தார். மஸூதைப் பார்த்தேன். அவன் அதேயிடத்தில் அப்படியே நின்றிருந்தான். யாரோ ஒருவர் வாய்க்குள் திணித்த உணவை என்ன செய்வது என்று தெரியாமல் சப்புவது போல் வாயைச் சப்பிக் கொண் டிருந்தான்.

சட்டெனக் கண்விழித்த எனது பாட்டனார் துள்ளி எழுந்து பேரீச்சம் பழச் சாக்குகளுக்கருகில் சென்றார். வியாபாரி ஹுஸைனும் மூஸாவும் மற்றைய இருவரும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். பின்வாங்க நினைக்குமொருவன் முன்னே செல்வதற்குக் கட்டாயப் படுத்தப்படுவது போலத் தளர் நடை போட்டு மஸூத் முன்னால் வருவதைப் பார்த்தேன்.

அவர்கள் பேரீச்சம் பழச் சாக்குகளைச் சுற்றி வளைத்து நின்று பழங்களைச் சோதித்தார்கள். அவர்களில் ஓரிருவர் அவற்றி லிருந்து ஒன்றிரண்டு பழங்களைச் சாப்பிட்டுப் பார்த்தார்கள். பாட்டனார் ஒரு கை நிறையப் பழங்களை அள்ளி எனக்குத் தந்தார். நான் சாப்பிட ஆரம்பித்தேன். மஸூத் இரு கைகள் நிறையப் பழங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அள்ளித் தனது மூக்கருகே கொண்டு வந்து பிறகு மீண்டும் சாக்குக்குள் போடுவதைப் பார்த்தேன்.

பிறகு பழச் சாக்குகளை அவர்கள் பங்கு போட்டார்கள். வியாபாரி ஹுஸைன் பத்துச் சாக்குகளை எடுத்தார். எனக்கு அறிமுகமற்ற இருவரும் ஆளுக்கு ஐந்து சாக்குகளைத் தமக்கென எடுத்துக் கொண்டனர். மூஸாவும் எனது பாட்டனாரும் ஆளுக்கு ஐந்து சாக்குகளைத் தமக்கென ஒதுக்கிக் கொண்டனர்.

எதுவும் விளங்காமல் நான் மஸ்ஊதைப் பார்த்தேன். செல்லும் வழியைத் தவற விட்ட இரு எலிகளைப் போல் அவனது இரண்டு கண்களும் இடம் வலமாக மாறி மாறி முழிப்பதைக் கண்டேன்.

"நீ இன்னும் ஐம்பது றாத்தல் எனக்குக் கடன். அதைப்பற்றி நாம் பிறகு பேசுவோம்." என்று மஸ்ஊதைப் பார்த்துச் சொன்னார் பாட்டனார்.

ஹுஸைன் தனது உதவியாளர்களை அழைத்தார். அவர்கள் சில கழுதைகளைக் கொண்டு வந்தார்கள். எனக்கு அறிமுகமற்ற இருவரும் ஒட்டகங்களைக் கொண்டு வந்தார்கள். அவரவருக்குரிய பழச் சாக்குகள் அவற்றின் மீது ஏற்றப்பட்டன. அவற்றில் ஒரு கழுதை எழுப்பிய சத்தத்தில் ஒட்டகம் ஒன்று தனது வாயில் நுரை துப்பிச் சத்தம் எழுப்பியது.

என்னையறியாமலே எனது உணர்வுகள் மஸ்ஊதை நெருங் கின. எனது இரண்டு கைகளையும் நீட்டி மஸ்ஊதின் அருகில் சென்று அவனது ஆடையைத் தொடவேண்டும் போல் இருந்தது. அறுக்கப் படும் ஆட்டிடமிருந்து வரும் சத்தம் போல மஸ்ஊதிடமிருந்து ஒரு அபஸ்வரக் குரல் வெளியானதை நான் கேட்டேன். காரணம் அறியா மலேயே எனது நெஞ்சுக்குள் வலிப்பது போல் உணர்ந்தேன்.

நான் ஓடத் தொடங்கினேன். ப்பாட்டனாரின் குரல் காதில் விழுந்த போது சற்றுத் தயங்கி விட்டுத் தொடர்ந்து ஓடினேன்.

அந்த வேளை அவர் மேல் ஒரு விதமான வெறுப்பு ஏற் பட்டது எனக்கு. எனது வேகத்தை அதிகரித்தேன். எனக்குள் நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கும் ரகசியத்தை விட்டு நான் வெளியேற வேண்டும். ஆற்றங் கரையை நெருங்கி அக்கேசியா மரங்களின் பின்னாலுள்ள வளைவைச் சென்றடைந்தேன்.

ஏனோ தெரியவில்லை! எனது தொண்டைக்குள் விரலை விட்டு நான் சாப்பிட்ட பேரீச்சம் பழங்களை வாந்தியெடுத்தேன்.□

ஜின்கள் - மனிதர்களைப் போலவே உலகில் வாழப் படைக்கப்பட்ட ஓர் இனம். இவர்கள் மனிதர்களின் கண்களுக்குப் புலப்படமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸகரிய்யா தாமிர்

02.01.1931 ல் சிரியாவின் டமஸ்கஸில் பிறந்த ஸகரிய்யா தாமிர் அரபுச் சிறுகதையின் ஜாம்பவான். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி 1957ல் வெளியானது. பதினொரு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவரது கதைகள் பல்வேறு மொழி களில் பெயர்க்கப்பட்டுள்ளன. சிறுவர் இலக்கியத்தில் செல்வாக்குச் செலுத்தியவர். சுயாதீனப் பத்திரிகை யாளரும் கூட. 1989 முதல் 1994 வரை லண்டனிலி ருந்து வெளியான Al-Quds Al-Arabi பத்திரிகையில் தினமும் எழுதியவர். சவூதி அரேபியா மற்றும் சிரியத் தொலைக்காட்சிகளிலும் கடமை புரிந்துள்ள இவர் பல பரிசுகளையும் வென்றுள்ளார். ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட அவரது Tigers on the Tenth Day என்ற நூல் 1987லும் Breaking Knees என்ற நூல் 2008லும் வெளியானது.

2009ல் Blue Metroplis Montreal International Literary prize - விருதை வென்றவர். Alan Earnshaw ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த இக்கதை அவரது இணையத் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னச் சூரியன்

அபூ ஃபஹத் கொஞ்சம் தடுமாற்றத்துடன் கூடிய மெது வான நடையில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அந்த ஒடுக்கமான நடைப் பகுதியில் மஞ்சள் நிற மின் விளக்கின் அடர்த்தியற்ற ஒளி சிதறிக்கிடந்தது.

அந்தப் பாதையில் நிறைந்திருந்த கனத்த அமைதி தனக்கு அசௌகரியமாய் இருப்பது போல் உணர்ந்தான். எனவே அவன் சத்த மான குரலில் பாட ஆரம்பித்தான்.

"நான் ஓர் ஏழை... எதுவுமற்றவன்..."

அவனது கர்ண கடூரக் குரல் மிகவும் இனிமையானது என்று தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டான். அதே உரத்த குரலில் "நான் ஒரு பாடகன்" என்று உரத்துச் சொல்லிக் கொண்டான். மக்கள் வாய்திறந்தபடி மெய்ம்மறந்திருப்பது போலவும் அவனை நோக்கிக் கையசைப்பது போலவும் கரகோஷம் செய்வது போலவும் கற்பனை செய்து கொண்டான். எனவே சத்தமிட்டுச் சிரித்தான். தனது சிவப்பு நிறச் சால்வையை நுனியில் பிடித்துப் பின்புறமாக இழுத்து விட்டுக் கொண்டு பாட ஆரம்பித்தான்.

"நான் ஓர் ஏழை... எதுவுமற்றவன்..."

அவன் அணிந்திருந்த சாம்பல் நிறக் காற்சட்டையை மஞ்சள் நிறத்திலான பழைய இடுப்புப் பட்டியால் கட்டியிருந்தான். அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் அவன் நுழைந்த போது மின் விளக்கின் ஒளியை விட இருட்டு அதீதமாக இருந்தது. சுவரோரத்தில் ஒரு கறுப்பு நிற ஆட்டைக் கண்டதும் அவனுக்கு ஆச்சரியம் உண்டானது. திகைப்பில் அவன் தன்னையறியாமல் வாயைத் திறந்தபடி பார்த்தான்.

'நான் குடிக்கவில்லை. என்னால் சரியாகப் பார்க்க முடிகிறது. அட மனிதா... எதைப் பார்க்கிறாய்... இது ஓர் ஆடு. இதன் சொந்தக்காரன் எங்கே?' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். அந்த ஒடுக்க வழிப்பாதை வெறிச்சோடிப்போயிருந்தது. அந்த ஆட்டைப் பார்த்துக் கொண்டே 'நான் குடித்தா இருக்கிறேன்?' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

கொடுப்புக்குள்ளேயே சிரித்துக் கொண்டு தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். 'இறைவன் கருணையுள்ளவன். நான் அபூ ஃபஹறத் என்பது எனக்குத் தெரியும். அபூ ஃபஹறத் ஒரு வாரமாக இறைச்சி சாப்பிடவில்லை!'

அபூ ஃபஹறத் ஆட்டின் மீது பரவி அதை முன்புறமாக இழுத்தான். ஆனால் அது நகர மறுத்தது. அதன் கொம்புகளைப் பற்றி மீண்டும் இழுத்தான். ஆனால் சுவருடன் உறைந்து போனது போல் ஆடு அசைய மறுத்தது. அவன் ஆட்டை முறைத்துப் பார்த்தான். பின்பு சொன்னான்:-

"நான் உன்னை அழைத்துச் செல்கிறேன். உன்னுடைய தாய் தந்தையரிடம் அழைத்துச் செல்கிறேன்."

அபூஃபஹறத் ஆட்டை அலாக்காகத் தூக்கித் தோளில் வைத்தான். அதன் கால்களிரண்டையும் தனது கைகளால் இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டு மகிழ்ச்சியுடனும் உற்காகத்துடனும் பாடிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

சில கணங்களில் அவன் பாட்டை நிறுத்தினான். அந்த ஆட்டின் நீளமும் பாரமும் திடீரென அதிகரித்து விட்டது போல அவனுக்குத் தோன்றியது. அடுத்த கணத்தில் "என்னை விட்டு விடு!" என்று ஒரு குரல் அவனது காதில் விழுந்தது. நெற்றியைச் சுருக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி, "மது அருந்துவது இறைவனின் சாபக்கேட்டுக்குரியது!" என்று சொன்னான்.

இன்னும் சில கணங்களில் அந்தக் குரல் மீண்டும் ஒலித்தது.

"என்னை விட்டுவிடு. நான் ஓர் ஆடு அல்ல!"

ஆட்டைப் பிடித்தபடி அவனது நடையை நிறுத்தினான். அந்தக் குரல் மற்றொரு முறை ஒலித்தது.

"நான் ஜின் அரசனின் மகன். என்னை விட்டு விட்டால் நீ கேட்பதையெல்லாம் தருவேன்!"

அபூ ஃபஹத் இதை விரும்பவில்லை. பதற்றத்துடன் வேகமாக நடக்கத் தொடங்கினான். அந்தக் குரல், "ஏழு சாடிகள் நிறையத் தங்கம் தருவேன்!" என்றது. தங்கக் காசுகள் கீழே விழுந்து எழும் சப்தத்தையும் வீட்டுத் தரையெங்கும் தங்கக் காசுகள் பரவிக் கிடப்பதையும் அபூ ஃபஹத் கற்பனை பண்ணினான். ஆடு தப்பிச் சென்றது. கற்பனையிலிருந்து மீண்டு மகிழ்ச்சி நிறைந்த குரலில் "எனக்குக் கொடு!" என்று சத்தமிட்டான்.

ஆயினும் தான் மட்டும் தனியனாக அந்த ஒடுக்க வழிப் பாதையில் நின்று கொண்டிருப்பது சில நிமிடங்களில் அவனுக்கு உறைத்தது. ஆடு அவனது கண்ணில் படவில்லை. சில கணங்கள் அதே இடத்தில் அசையாமல் நின்று விட்டு வேகமாக நடக்கத் தொடங்கினான்.

வீட்டை அடைந்ததும் தனது மனைவி உம்மு ஃபஹதை நித்திரையிலிருந்து எழுப்பி நடந்ததைச் சொன்னான். கேட்டுக் கொண்டிருந்து விட்டு உம்மு ஃபஹத் சொன்னாள்:-

"நீ குடித்திருக்கிறாய்!"

"அப்படிக் குடிக்கவில்லை. மூன்று கிளாஸ் மட்டுமே."

"ஒரு கிளாஸ் குடித்தாலே உனக்குப் போதையாகிவிடும்."

தான் அவமானப்படுத்தப்படுவதாக அபூ ஃபஹத் நினைத்தான். சவால் விடும் குரலில் சொன்னான்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு பெறல் மதுவை அருந்தினாலும் எனக்குப் போதை வராது."

உம்மு ஃபஹறத் ஒரு வார்த்தைதானும் பதில் பேசவில்லை. அவள் பூத கணங்களின் விளையாட்டுக்கள் குறித்துச் சிறு வயதில் கேட்டிருந்த கதைகளைப் பற்றிய கற்பனையில் மூழ்கினாள்.

அபூ ஃபஹறத் உடையை மாற்றிக் கொண்டு மின் விளக்கை அணைத்து விட்டுக் கட்டிலில் மனைவியின் அருகில் சாய்ந்தான். திடீரென, "தனது தந்தையுடைய தங்கத்தைத் தருமளவும் நீ அதைத் தப்பிச் செல்ல விட்டிருக்கக் கூடாது!" என்று சொன்ன உம்மு ஃபஹறத் சற்றுத் தயக்கத்துடன் "நாளைக்கும் போய்த் தப்பிச் செல்ல விடாமல், பிடித்துக் கொள்!" என்றாள்.

அபூ ஃபஹறத் கொட்டாவி விட்டான். கவலையுடன் கேட்டான்: -

"எப்படி அதைக் கண்டு பிடிப்பது?".

"அதே வழியில் ஆட்டை உன்னால் காணமுடியும். பிடித்து வீட்டுக்குக் கொண்டு வா. தங்கம் தருமளவும் நாம் அதைப் போக விடாமல் வைத்துக் கொள்ளுவோம்."

"என்னால் அதைக் காணமுடியாது."

"ஜின்கள் பூமியின் கீழுள்ள ஆறுகளில் வசிக்கின்றன. இரவானதும் பூமியின் மேற்பரப்புக்கு வந்து விடியும் வரை விளையாடித் திரிகின்றன. தமக்குப் பிடித்தமான இடமாக இருந்தால் மீண்டும் வருகின்றன. நாளை அந்த ஒடுக்க வழிப் பாதையில் ஆட்டை உன்னால் பார்க்க முடியும்."

அபூ ஃபஹறத் தனது கையை மனைவியின் மார்பின் நடுவே வைத்தான். அதை அசைக்காமல் சொன்னான்: -

"நாம் பணக்காரர்களாகி விடுவோம். ஒரு பெரிய வீடு வாங்குவோம்."

"தோட்டத்துடன் சேர்ந்த வீடு!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாம் ஒரு வானொலி வாங்குவோம்."

"ஒரு பெரிய வானொலிப் பெட்டி!"

"ஆடை கழுவும் இயந்திரமொன்றும்."

"கோதுமையைச் சாப்பிடுவதைத் தவிர்ப்போம்!"

"பாண் சாப்பிடுவோம்!"

உம்மு ஃபஹத் குழந்தை போல் சிரித்தாள். பக்கத்தில் படுத்திருந்த அபூ ஃபஹத் சொன்னான்: -

"உனக்கு ஓர் அழகான சிவப்பு ஆடை வாங்கித் தருவேன்!"

செல்லக் கோபத்துடன் உம்மு ஃபஹத் கிசு கிசுக்கும் குரலில் கேட்டாள்: -

"ஒன்றே ஒன்றுதானா?"

"உனக்கு நூறு ஆடைகளை வாங்கித் தருகிறேன்!" என்றான்.

சில கணங்கள் அமைதியாக இருந்த அபூ ஃபஹத் அவளிடம் கேட்டான்: -

"எப்போது குழந்தை பெறுவாய்?"

"மூன்று மாதங்களுக்குப் பிறகு."

"அது ஓர் ஆண் குழந்தையாகத்தான் இருக்கும்."

"அவன் நம்மைப் போன்று கஷ்டப்படக் கூடாது."

"அவன் பசியில் இருக்கக் கூடாது."

"அவனுக்கு அணிவதற்குச் சுத்தமான, அழகான ஆடைகள் இருக்க வேண்டும்."

"அவன் எந்த வேலையும் செய்யக் கூடாது."

"அவன் நல்ல பாடசாலையில் கற்க வேண்டும்."

"வீட்டுக்காரன் வந்து வாடகை கேட்கும் நிலையில் அவன் இருக்கக் கூடாது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் வளர்ந்து ஒரு வைத்தியனாக வேண்டும்."

"அவன் ஒரு சட்டத்தரணியாக வேண்டும் என்பது எனது விருப்பம்."

"வைத்தியராக விரும்புகிறாயா சட்டத்தரணியாக விரும்புகிறாயா என்று அவனைக் கேட்டு நாம் முடிவு செய்வோம்!"

ஒரு பற்றுதலோடு அவனைப் பிடித்துக் குறும்புத் தனத்துடன் கேட்டாள்: -

"இரண்டாவது கல்யாணம் செய்ய மாட்டாயா?"

அவளுடைய காதை நிமிண்டி விட்டுச் சொன்னான்: -

"ஏன் செய்ய வேண்டும்? இந்தப் பூவுலகிலேயே அதிசிறந்த பெண் நீதான்!"

இருவருக்கும் நடுவே மகிழ்ச்சி ததும்பும் ஆழமான அமைதி நிலவியது. அபூ ஃபஹத் சட்டெனத் தன்னை மூடியிருந்த போர்வையை உதறினான். அவன் எழுந்து நின்ற போது உம்மு ஃபஹத் கேட்டாள்: -

"உனக்கு என்ன வேண்டும்?"

"நான் இப்போது போகிறேன்."

"எங்கு போக?"

"ஆட்டைப் பிடிக்க."

"நாளை வரை பொறுத்திரு. இப்போது உறங்கு."

ஒருவித அவசரத்துடன் மின் விளக்கை எரிய விட்டுத் தனது உடையை அணிய ஆரம்பித்தான்.

"இன்றைக்கு அதைக் காண முடியாமல் போகலாம்."

"அதை நான் தேடிப் பிடிப்பேன்."

அவனது மஞ்சள் நிற இடுப்புப் பட்டியை அணிவதற்கு உம்மு ஃபஹத் உதவிய வேளை அவளிடம் சொன்னான்: -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதை ஒரு போதும் விட மாட்டேன்."

தான் ஒரு துணிச்சலான கருமத்தை நிறைவேற்றப் போவதாக அவன் எண்ணிக் கொண்டான். தனது குத்துவாள் அவனுக்குத் தேவை. வளைந்த முனையுள்ள, மெலிதான, ஆனால் மிகக் கூர்மை யான குத்துவாள் அது!

வீட்டை விட்டு வெளியிறங்கி மிக வேகமாக ஒடுங்கிய வழிப் பாதைக்கு வந்து சேர்ந்தான். ஆனால் அங்கு ஆட்டைக் காண வில்லை. அவனுக்கு அது பெரும் ஏமாற்றமாக இருந்தது. அந்த வழிப் பாதை வெறிச்சோடியிருந்தது. ஒடுங்கிய வழிப்பாதையின் இரு மருங்கிலும் இருக்கும் வீடுகளின் யன்னல்களூடாக வெளிச்சம் கசியவில்லை. சகல விளக்குகளும் அணைக்கப்பட்டிருந்தன.

அபூ ஃபஹறத் தனது பின்புறமாகச் சுவரில் சாய்ந்து அசை யாமல் அப்படியே நின்றிருந்தான். சற்று நேரத்தில் ஒரு சிறிய சத்தம் அவனது காதில் விழுந்தது. அதைத் தொடர்ந்து ஒரு குடிகாரன் தள்ளாடியபடி சுவரில் முட்டிக் கொண்டு வந்து கொண்டிருந்தான். அவன் தனது கரகரப்பான குரலில் "ஏய்... நான் ஒரு மனிதன்..." என்று சத்தமிட்டபடி வந்தான்.

அபூ ஃபஹறதை அண்மித்ததும் தனது தள்ளாட்ட நடையை நிறுத்தினான். பெரிதாக மூச்சு விட்டபடி திகைப்புடன் அபூ ஃபஹற தைப் பார்த்தான். தடுமாற்றத்துடன் கேட்டான்: -

"நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"நடந்து கொண்டிருக்கிறேன்."

குடிகாரன் தனது நெற்றியைச் சுருக்கினான். முகத்தில் ஆர்வம் மின்னக் கேட்டான்: -

"நானும் பெண்களை விரும்புகிறேன். அவளுடன் படுப்ப தற்குக் கணவன் போகும் வரை காத்திருக்கிறாயா? அவன் போனதும் உனக்குக் கதவு திறப்பாள் அல்லவா?"

அபூ ஃபஹறதுக்கு அந்த வார்த்தைகள் வேதனையளித்தன. அவனுக்கு அருவருப்பாக இருந்தது. குடிகாரன் கேட்டான்: -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவள் அழகாக இருப்பாளா?"

அபூ ஃபஹத் கோபத்துடன் கேட்டான்: -

"எந்தப் பெண்?"

"நீ யாருக்காகக் காத்திருக்கிறாயோ அவள்."

"போய் விடு!"

"நானும் உனக்குப் பங்காளியாக இருக்கிறேன்."

அபூ ஃபஹதுக்குப் பொல்லாத கோபம் உண்டாயிற்று. இந்தக் குடிகாரன் வந்து கலாட்டாப் பண்ணுவதால் ஆடு வராமல் விட்டுவிடுமோ என்று பயந்தான். கடும் சீற்றத்துடன் அவனைப் பார்த்துச் சொன்னான்: -

"போய்விடு இங்கிருந்து... இல்லாவிட்டால் உன் மண்டையைப் பிளந்து விடுவேன்."

குடிகாரன் ஏப்பம் விட்டபடி கோபத்துடனும் வியப்புடனும் கேட்டான்: -

"நீ எனக்குச் சொல்கிறாயா? யார் நீ?"

சற்று அமைதியடைந்து பின்னர் மீண்டும் சொன்னான்: -

"வந்து எனது மண்டையை உடைத்துப் பார்...வா..."

அபூ ஃபஹத் சொன்னான்: -

"போய்விடு... உனது மண்டையை உடைக்கும் அவசியம் எனக்கு இல்லை."

குடிகாரன் கோபத்துடன் சொன்னான்: -

"இல்லை.. இல்லை.. வந்து என் மண்டையை உடை."

பின்னால் நகர்ந்து ஒரு வகை எக்காளக் களிப்புடன் மீண்டும் சொன்னான்: -

"நான் உன்னைச் சல்லடையாக்குவேன்."

சொல்லிக்கொண்டே தனது பைக்குள் கைவிட்டு நீளமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குத்துவாளை வெளியே எடுத்தான்.

அபூ ஃபஹறதின் கை மிக விரைவாக அவனது இடுப்புப் பட்டியை நோக்கி நகர்ந்தது. தனது குத்து வாளை வெளியே எடுத் தான். குடிகாரன் வேகத்துடனும் எச்சரிக்கையுடனும் அபூ ஃபஹறதின் அருகில் வரத் தனது குத்து வாளை உயர்த்தி அவனை நோக்கி வீசினான் அபூ ஃபஹறத்.

குத்துவாள் தன்னில் படாமல் மின்னல் வேகத்தில் குடிகாரன் விலகினான். தனது கையிலிருந்த குத்துவாளை அபூ ஃபஹறதின் நெஞ்சருகே வைத்து "வாங்கிக் கொள்!" என்றான்.

அபூ ஃபஹறத் களிமண் சுவருடன் ஒட்டிச் சாய்ந்திருந்தான். இரண்டாவது முறையாகக் குத்திய குடிகாரனின் குத்துவாளை எதிர்த்து இரண்டாவது முறையாகத் தனது குத்துவாளை உயர்த்தி னான். குடிகாரன் அபூ ஃபஹறதின் வலது தோளில் குத்த அவனது கை தொங்கிப் போய்க் கையிலிருந்த குத்துவாள் கீழே விழுந்தது. அவன் நிலைகுலைந்தான்.

குடிகாரன் சத்தமிட்டுக் கத்திக் கொண்டே குதித்துக் குதித்துத் தன் குத்து வாளால் அபூ ஃபஹறதைக் குத்தினான். சோர்ந்து போன அபூ ஃபஹறதுக்கு மூச்சுத் திணறியது. கைகள் கால்கள் யாவும் சட்டெனப் பலமிழந்தது போல் உணர்ந்தான்.

குடிகாரன் தொடர்ந்து குத்தினான்.

அவன் அபூ ஃபஹறதின் வயிற்றில் குத்தி இழுத்த போது குடல் கொத்தாக வெளியே வர, அதை அபூ ஃபஹறத் தனது கையை வைத்துத் தாங்கிப் பிடித்தான். இரத்தத்தில் நனைந்த குடற்றொகுதி சூடாக இருந்தது. நடுக்கத்துடன் பின்புறமாக நிலை தடுமாறிச் சாய்ந்தான்.

குடிகாரன் அபூ ஃபஹறத் அருகே சற்று நேரம் நின்றான். பின்னர் குத்து வாளை எறிந்து விட்டு ஓடத் தொடங்கினான்.

"ஏழு ஜாடிகள் நிறையத் தங்கம்" என்று ஆடு சொல்வது அபூ ஃபஹறதுக்குத் தூரத்தில் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டப்பட்ட தங்கக் காசுகள் ஒவ்வொன்றும் சின்னச் சூரியனைப் போல் பிரகாசித்தது. அபூ ஃபஹத் தேய்ந்த குரலில் ஆட்டை நோக்கி முணுமுணுத்தான்: -

"மெல்ல... மெல்ல...!" □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கஸ்ஸான் கனஃபானி

புரட்சிகர எழுத்தாளரும் அரசியற் செயற்பாட்டாளரும் பத்திரிகையாளருமான கஸ்ஸான் பாயிஸ் கனஃபானி பலஸ்தீனின் அக்ரே நகரில் 1936ல் சட்டத்தரணி ஒருவருக்கு மகனாகப் பிறந்தவர். தமது நகரத்தின் ஒரு பகுதி இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டதைத் தொடர்ந்து லெபனானிலும் சிரியாவிலும் அகதி முகாம்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்.

நாவல், சிறுகதை, ஆய்வுகள், இலக்கிய விமர்சனங்கள், கட்டுரைகள் என்று பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். பல பத்திரிகைகளில் கடமையாற்றியவர். 1963ல் வெளிவந்த அவரது Men in the Sun என்ற நாவல் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளதுடன் நாடகங்களாகவும் மாற்றம் பெற்றது. Lebanese Literature Prize மற்றும் Afro-Asian Writers' Conference Lotus Prize ஆகியவை அவருக்கு வழங்கப்பட்டன.

கனஃபானியை 1972ம் ஆண்டு ஜூலை 8ம் திகதி அவரது காரில் குண்டு பொருத்தி வெடிக்க வைத்துக் கொலை செய்தனர். இந்தக் கொலையைத் தாமே செய்ததாக இஸ்ரேலின் மொஸாட் பின்னர் உரிமை கோரியதாக அறியக் கிடைக்கிறது. newjerseysolidarity இணையத் தளத்திலிருந்து பெறப்பட்ட இக்கதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் விபரம் கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவிலிருந்து ஒரு கடிதம்

அன்புள்ள முஸ்தஃபா,

இப்போதுதான் உனது கடிதம் கிடைத்தது. ஸெக்ரமென்டோவில் உன்னுடன் நான் தங்கியிருப்பதற்கு அவசியமான எல்லா ஏற்பாடுகளையும் நீ செய்திருப்பதை உனது கடிதம் சொன்னது. கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் கற்பதற்கு எனக்கு அனுமதி கிடைத்திருக்கும் செய்தியும் எனக்குக் கிடைத்துள்ளது. எல்லாவற்றுக்கும் உனக்கு நான் நன்றி சொல்ல வேண்டும், அன்புள்ள நண்பனே.

ஆனால் நான் உனக்குச் சொல்லப் போகும் செய்தி உனக்கு விசித்திரமாகவும் அதிர்ச்சியளிக்கக் கூடியதாகவும் இருக்கும் என்று நினைக்கிறேன். எப்போதும் இல்லாத வகையில் இப்போது நான் இருக்கும் சரியான, தெளிவான நிலை குறித்துச் சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் கிடையாது. இல்லை, நண்பனே... நான் எனது மனதை மாற்றிக் கொண்டேன்.

நீ குறிப்பிட்டிருப்பதைப் போல 'பசுமையும் நீரும் அழகிய முகங்களும்' உள்ள இடத்துக்கு உன்னைத் தொடர்ந்து நான் வரப்போவதில்லை. இல்லை, நான் இங்கேயே இருக்கப் போகிறேன்; ஒரு போதும் இங்கிருந்து வெளியேறப் போவதில்லை!

ஒரே துறையில் நாம் வாழ்வைத் தொடரவில்லை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு உண்மையில் மிகவும் மனக் குறையாகவுள்ளது, முஸ்தஃபா. ஒன்றாகவே பயணிப்பது பற்றிய நமது உறுதி மொழியை நீ அடிக்கடி சொல்வது எனக்கு ஞாபகம் உள்ளது. அந்த வகையில் 'நாம் செல்வந் தர்களாவோம்' என்று அடிக்கடி நாம் சத்தமிட்டிருக்கிறோம். ஆனால் என்னால் செய்ய முடிந்தது எதுவுமில்லை, நண்பனே. ஆம்; உன்னு டைய கைகளை இறுகப் பற்றிக் கொண்டு கெய்ரோ விமான நிலை யத்தில் நின்றிருந்த அந்த நாள் எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. அன்று என் முன்னால் நின்றிருந்த உனது வட்டமான முகம் அமைதி யாகவிருந்தது. இலேசான சுருக்கங்களைத் தவிர, காஸாவின் ஸாஜியா வில் வளர்ந்தபோது இருந்தது போலவே உன் முகம் மாறாமல் இருக் கிறது. நாம் ஒன்றாகவே வளர்ந்தோம்; ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தோம். கடைசி வரை ஒன்றாக இருக்க வேண்டும் என்று உறுதிப்பாட்டுடன் இருந்தோம். ஆனால்...

> "விமானம் கிளம்புவதற்குக் கால் மணி நேரம் இருக்கிறது. இப்படி வானத்தைப் பார்த்துக் கொண்டிராதே. கேட்டுக் கொள்! அடுத்த வருடம் நீ குவைத்துக்குப் போவாய். கிடைக்கும் உனது சம்பளத்திலிருந்து ஒரு பகுதியைச் சேமித்து எடுத்துக் கொண்டு காஸாவிலிருந்து கிளம்பி கலிபோர்னியாவுக்குச் சென்று உன்னை நிலை நிறுத்திக் கொள். நாம் ஒன்றாகவே தொடங்கினோம். ஒன்றாகவே தொடருவோம்!"

அந்தக் கணத்தில் வேகமாக அசையும் உனது உதடுகளை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். காற் புள்ளியோ முற்றுப் புள் ளியோ இல்லாமல் பேசுவது உனது பாணி. ஆனால் அந்த விமானப் பயணத்தில் நீ முழுமையாகத் திருப்தியடையவில்லை என்று என்னால் உணர முடிந்தது. அதற்கான நியாயமான காரணங்க ளையும் நீ தெரிவிக்கவில்லை. அந்த வலி எனக்கும் இருந்தது. ஆனாலும் "ஏன் காஸாவைக் கைவிட்டு நாம் பறந்து விடக் கூடாது? ஏன் நாம் போகக் கூடாது?" என்ற தெளிவான சிந்தனையிருந்தது.

உனது நிலைமையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவைத்தின் கல்வியமைச்சு எனக்குத் தராத போதும் உனக்கு ஒரு தொழிலைத் தந்தது. அந்த அமைச்சினூடாக ஒரு சிறு தொகையை எனக்கு அனுப்பினாய். அவர்களிடம் நான் கடன் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நீ விரும்பினாய். ஏனெனில் நான் அசௌகரியப் பட்டு விடக் கூடும் என்று பயந்தாய். எனது குடும்பச் சூழல் பற்றி உள்ளும் புறமும் நீ அறிந்து வைத்திருந்தாய். எனக்குக் கிடைக்கும் சம்பளம் எனது தாயாரையும் எனது சகோதரரின் விதவையான மனைவியையும் நான்கு பிள்ளைகளையும் கவனிக்கப் போதுமான தாக இல்லை என்பதை நீ அறிந்திருந்தாய்.

> “கவனமாகக் கேட்டுக் கொள். ஒவ்வொரு நாளும் எழுது... ஒவ்வொரு மணித்தியாலம், ஒவ்வொரு நிமிடம் பற்றியும் எனக்கு எழுது. விமானம் புறப்படப் போகிறது... நான் கிளம்புகிறேன்... இல்லை, நாம் மீண்டும் சந்திக்கும் வரை...”

உனது உதடுகள் எனது கன்னத்தில் பதிந்தன. விமானத்தின் பக்கம் நீ முகத்தைத் திருப்பிக் கொண்டாய். மீண்டும் நீ திரும்பி என்னைப் பார்க்கையில் உனது கண்களில் நான் கண்ணீரைக் கண்டேன்.

சில காலத்துக்குப் பின் குவைத் கல்வியமைச்சு எனக்கும் ஒரு தொழில் வாய்ப்பை வழங்கியது. அங்கு எனது வாழ்க்கை எப்படிக் கழிந்தது என்கிற விபரத்தை உனக்கு நான் திரும்பச் சொல்லத் தேவை யில்லை. எப்போதும் எல்லாவற்றைப் பற்றியும் நான் உனக்கு எழுதியிருக்கிறேன்.நான் ஒரு சாதாரணனாக இருந்த போதும் பசை போட்டு ஒட்டி வைத்தாற் போன்று மாட்டிக் கொண்டதான ஒரு வெறுமையை உணர்ந்தேன். கொடுந் தனிமையை அனுபவித்தேன். அலுப்பூட்டும் ஒரே விதமான வேலைச் சூழலில் அழுகும் நிலையிலி ருந்தேன். எல்லாமே சூடானதாகவும் ஒட்டிக் கொண்டது போன்றது மான ஒரு விசித்திரமான உணர்வு. எனது முழு வாழ்விலும் அது ஒரு சறுக்கல். சகலதுமே மாசக் கடைசியில் தங்கியிருந்தன.

வருட மத்தியில் ச:பாவில் யூதர்கள் குண்டு வீசினார்கள். காஸாவைத் தாக்கினார்கள். நமது காஸா கொழுந்து விட்டெரிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வேலைச் சூழலில் அந்தச் சம்பவம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் நான் வெளியேற வேண்டும் என்பதைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தோன்றவில்லை. இத்தனை காலம் சிரமப்பட்டதற்காக எனக்குப் பின்னால் இருக்கின்ற காஸாவை விட்டுப் பசுமை மிகுந்த கலிஃபோர்னியாவுக்குச் சென்று எனக்காக நான் வாழ வேண்டும்; எனக்காக மட்டுமே வாழவேண்டும் என்று எண்ணினேன். காஸாவையும் அங்கு வாழ்வோரையும் வெறுத்தேன். நாலா புறமும் முற்றுகையிடப்பட்டுத் துண்டிக்கப்பட்ட நகரத்தின் சகல அம்சங்களுமே நோயுற்ற மனிதனொருவனால் சாம்பல் நிறத்தில் வரையப்பட்ட கோணல் மாணலான சித்திரங்களைப் போல் எனக்குக் காட்சியளித்தன.

ஆம்! எனது தாயாருக்கும் எனது சகோதரரின் விதவை மனைவிக்கும் நான்கு பிள்ளைகளுக்கும் அவர்கள் வாழ்வதற்காக ஒரு சிறு தொகைப் பணத்தை அனுப்பவேண்டியிருந்தது. இந்தக் கடைசி முடிச்சிலிருந்தும் கூட என்னை விடுவித்துக் கொள்ள எண்ணினேன். ஏழு வருடங்களாக எனது மூக்கை நிறைத்திருந்த தோல்வியின் துர் நாற்றத்திலிருந்து மிகத் தூரத்திலிருக்கின்ற அழகும் பசுமையும் நிறைந்த கலிஃபோர்னியாவை அடைய நினைத்தேன்.

என்னைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் எனது சகோதரரின் குழந்தைகள், அவர்களது விதவைத் தாய் ஆகியோர் மீதான அனுதாபமானது செங்குத்தாக என்னைத் தள்ளும் எனது சோகங்களை விடப் பெரியவை அல்ல. கடந்த காலங்களைப் போல் என்னை மீண்டும் கீழே தள்ளிச் செல்ல நான் அனுமதிக்க முடியாது. நான் இங்கிருந்து கிளம்ப வேண்டும்!

இந்த உணர்வுகளை நீ அறிவாய் முஸ்தஃபா. இவற்றில் உனக்கு உண்மையான அனுபவம் உண்டு. நாட்டை விட்டு ஓடிச் செல்லும் ஆர்வத்தை மழுங்கடித்த, காஸாவுடன் நாம் கொண்டிருந்த தெளிவாய் வரையறுக்கப்படாத அந்த உறவுதான் என்ன? இதில் ஒரு தெளிவை அடைந்து கொள்வது பற்றி நாம் ஏன் ஆராய்ந்து பார்க்கவில்லை? இந்தக் காயங்களுடன் கூடிய தோல்வியைக் கைவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு ஆழ்ந்த ஆறுதலையும் பிரகாசமான எதிர்காலத்தையும் நோக்கி நாம் ஏன் நகரவில்லை. ஏன்? சரியாக அதை நாம் அறிந்திருக்க வில்லை.

ஜூன் மாதம் விடுமுறையில் சென்ற போது எனது பொருட் களையெல்லாம் ஒழுங்குபடுத்தினேன். சந்தோஷகரமான ஒரு பயணத்தை எதிர்பார்த்திருந்தேன். பயணத்துக்கான சின்னச் சின்ன ஏற்பாடுகளே என் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் கிடைத்தது போல் இனிமையாக இருந்தன. அறுவைத் தொழுவத்துக்கு அருகில் உள்ள, அலைகளால் கொண்டுவரப்பட்ட, துருப்பிடித்த நத்தைக் கோதுக ளால் நிறைந்த இறுகிய மணல் மேடாக காஸா எனக்குத் தோற்ற மளித்தது. நோயுற்றிருக்கும் ஒருவனின் உறக்கத்தில் உள்ள மனக் கிலியை விட நோவினை தரக் கூடியதாக ஒடுக்கமான வீதிகளும் நீட்டிக் கொண்டிருக்கும் :பெல்கனிகளும் கொண்ட காஸா இருந்தது. இந்த காஸா... செம்மறியாட்டுச் சிறு மந்தையைத் தனது திசை நோக்கித் திருப்பும் ஊற்றுப் போல ஒரு மனிதனைத் தனது குடும்பம், வீடு மற்றும் நினைவுகளை நோக்கி நகர வைக்கும் மறைமுகமான காரணிகள் யாவை...? எனக்குத் தெரியவில்லை!

அன்று காலை எனது தாயாரின் வீட்டுக்குச் சென்றது ஞாபகம் இருக்கிறது. என்னைக் கண்டதும் இறந்த எனது சகோத ரரின் மனைவி கேவி அழுதாள். காயமுற்று காஸா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தனது மகள் நாதியாவை அன்று பிற்பகல் சென்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். உனக்கு நாதியாவைத் தெரியுமா? எனது சகோதரனின் பதின் மூன்று வயதான அழகிய மகளை உனக்குத் தெரியுமா?

அன்று பிற்பகல் அப்பிள் பழங்களை வாங்கிக் கொண்டு நாதியாவைப் பார்க்கப் படியிறங்கினேன். எனது தாயாரும் மதினியும் என் கண்ணில் படாமல் மறைந்திருந்தது ஏதோ ஒன்று நடந்திருப் பதை எனக்கு உணர்த்தியது. அவர்களால் என்னிடம் சொல்ல முடியாத ஒன்று, நான் தலையிட முடியாத ஏதோ ஒன்று இருக்கிறது என்று யூகித்தேன். நாதியாவின் மீது நான் வைத்திருந்த அன்பு என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுடன் இணைந்த ஒன்று. இந்த உணர்வு இவ்வயதினர் எல்லோ ரிலும் நான் அன்பு வைக்கக் காரணமாக இருந்தது. அதுவே தோல்வி யையும் இடப்பெயர்வையும் கொண்டு வந்து ஒரு வகைச் சமூக விலகலெனச் சொல்லத் தகுந்த சந்தோசமான வாழ்வு பற்றிய சிந்தனையை ஏற்படுத்தியது.

அந்த நிமிடத்தில் என்ன நடந்தது? எனக்குத் தெரியவில்லை. அந்த அறைக்குள் நான் நுழைந்த போது அது மிக அமைதியாக இருந்தது. எவ்வளவு நோவுள்ள காயத்துடனும் கொடுமையான வருத்தங்களுடனும் இருந்த போதிலும் பிள்ளைகளிடமும் ஒரு வித தெய்வீகத் தன்மை இருக்கிறது.

நாதியா கட்டிலில் படுத்திருந்தாள். அவள் படுத்திருந்த தலையணையில் அவளது அடர்ந்த கூந்தல் கற்றை அலையலையாக யாக விரிந்து கிடந்தது. அவளது கண்களில் ஆழமான அமைதி தென்பட்டது. எனினும் மின்னும் அவளது பெரு விழிகளுக்குள் எப்போதும் கண்ணீர் ஊறிச் சுரந்து கொண்டிருந்தது. அவளது முகம் சாந்தமாயிருந்த போதும் இன்னும் பேசுவதற்குச் சக்தியுள்ள ஆனால் சித்திரவதைக்குள்ளான ஒரு தீர்க்கதரிசியின் முகம் போலும் இருந் தது. நாதியா சிறு பிள்ளை. ஆனால் பார்ப்பதற்கு பிள்ளைப் பருவத் தைத் தாண்டியவளைப் போலத் தெரிந்தாள். ஒரு சிறுமியை விட வயது கூடியவளாக, அதை விடவும் வயதானவளாகத் தெரிந்தாள்.

"நாதியா!"

நான் தான் அழைத்தேனா அல்லது எனக்குப் பின்னால் வேறு யாராவது அழைத்தார்களா என்று எனக்கே சரியாக நிச்சய மில்லை. நாதியா கண்ணை உயர்த்தி என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வையிலேயே கொதிக்கும் தேனீர்க் கோப்பைக்குள் விழுந்த சீனிக் கட்டியைப் போல நான் கரைந்து போனேன்.

ஒரு சின்னப் புன்னகையுடன் வெளிவந்த அவளது மெல்லிய குரல் என் காதில் விழுந்தது.

"அங்கள்... இப்போதுதான் குவைத்திலிருந்து வந்தீர்களா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குரல் அவளது தொண்டைக்குள்ளேயே உடைந்து வெளிவந்தது. தனது கைகளால் ஊன்றி நிமிர்ந்து கட்டிலில் சாய்ந்த வாக்கில் அமர்ந்தாள். நான் அவளது முதுகைத் தடவி அவளது அருகில் அமர்ந்தேன்.

"நாதியா, குவைத்திலிருந்து உனக்குப் பரிசுப் பொருட்கள் கொண்டு வந்திருக்கிறேன். நிறையப் பொருட்கள். நீ முற்று முழுதாகக் குணமடைந்து எனது வீட்டுக்கு வா. அவை எல்லாவற்றையும் உனக்குத் தருகிறேன். சிவப்பு நிறக் காற்சட்டை வேண்டும் என்று எனக்கு எழுதிக் கேட்டிருந் தாய் அல்லவா... நான் கொண்டு வந்திருக்கிறேன்."

அந்த இறுக்கமான சூழலில் வெளிப்பட்ட பொய் அது. நான் என்னை மறந்து உளறியதை, நான் முதன் முதலாக உண்மை பேசுகிறேன் என்பது போல் நினைத்துக் கொண்டேன். நாதியா மின் சாரம் தாக்கியதைப் போல் திடுக்கிட்டு இறுக்கமான மௌனத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள். நாதியாவின் கண்ணீர்த் துளிகள் எனது புறங்கையை நனைப்பதை உணர்ந்தேன்.

"பேசு... நாதியா... உனக்கு சிவப்பு நிறக் காற்சட்டை வேண்டாமா...?"

நாதியா என் மீது பார்வையை உயர்த்தினாள். அவள் பேச ஆரம்பிப்பது போலத் தோன்றியது. ஆனால் நிறுத்திக் கொண்டாள். பின்னர் பற்களை உரசுவது போல் தெரிந்தது. மிகத் தொலைவி லிருந்து கேட்பது போல் ஒலித்த அவளது குரலை நான் கேட்டேன்.

"அங்கள்!"

அவள் கையை உயர்த்தி, வெள்ளைத் துணியால் சுற்றப்பட் டிருந்த விரல்களால் அடித் தொடைப் பகுதியிலிருந்து துண்டிக்கப் பட்ட தனது கால் பிரதேசத்தைச் சுட்டிக் காட்டினாள்.

அன்பு நண்பா... அடித் தொடைப் பகுதியிலிருந்து துண்டிக் கப்பட்ட நாதியாவின் காலை என்றைக்கும் என்னால் மறக்க முடியாது. ஆழ்ந்த துயரத்தில் வார்க்கப்பட்டு அதுவே காலாதிகாலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கும் நிரந்தரமாகி விட்டிருக்கும் அவளது முகத்தை மறந்து விட முடியுமா? நாதியாவுக்குக் கொடுப்பதற்கென நான் கொண்டு வந்திருந்த இரண்டு றாத்தல் பாரமுள்ள பொருட்கள் மௌனமாய் என்னைப் பார்த்துப் பரிகசிக்க, அவற்றை இறுக்கமாகப் பற்றிப் பிடித்தபடி அன்று காஸா வைத்தியசாலையிலிருந்து வெளியேறி னேன். சுட்டெரிக்கும் சூரியன் இரத்த நிறத்தில் காஸாத் தெருவெங் கும் நிறைந்திருந்தது. காஸா புதியதாகத் தெரிந்தது, முஸ்தஃபா! நீயோ நானோ அதை இப்படி இதற்கு முன்னர் பார்த்ததில்லை.

நாம் வாழ்ந்த ஸாஜியா சதுக்கத்தின் நுழைவாயில் பகுதியில் குவிந்து கிடந்த கற்களுக்கு ஓர் அர்த்தம் இருந்தது போல் எனக்குத் தோன்றியது. அந்த அர்த்தத்தை வெளிப்படுத்துவது அவற்றின் நோக்கமே தவிர வேறு எந்தக் காரணங்களையும் அதற்குக் கற்பிக்க முடியவில்லை. நல்ல மனிதர்களுடன் நாம் வாழ்ந்த, ஏழுவருடத் தோல்வியைச் சுமந்த இந்த காஸா, ஏதோ ஒரு வகையில் புதியதாகத் தோற்றமளிக்கிறது எனக்கு. இது ஒரு புதிய ஆரம்பமாகவே எனக்குத் தோன்றுகிறது.

நான் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பிரதான வீதி யைக் கற்பனை செய்து பார்க்கிறேன். அது சபாத்தை நோக்கிய நீண்ட மிக நீண்ட தூரத்தின் ஆரம்பமாகும். காஸாவில் எல்லாமே அழுகையைக் கட்டுப்படுத்த முடியாத துயரத்தில் மூழ்கியிருக்கின் றன. இது ஒரு சவால். அதாவது துண்டிக்கப்பட்ட காலை மீளப் பொருத்துவது போன்ற சவாலை விடவும் முக்கியமான விடயம் ஒன்று என்றுதான் சொல்ல வேண்டும்.

காஸாவின் தெருக்களில் நான் நடந்து சென்றேன். அத் தெருக்கள் எங்கும் கண்கள் கூசும் வெளிச்சம். வீட்டுக்குள் விழுந்து வெடித்த குண்டிலிருந்தும் அதன் தீ நாக்குகளிலிருந்தும் தனது தங்கைகளையும் தம்பிகளையும் பாதுகாத்த காரணத்தால் நாதியா தனது காலை இழந்தாள் என்று எனக்குச் சொன்னார்கள். நாதியா தன்னைப் பாதுகாத்துக் கொண்டிருக்கலாம்... அவள் அங்கிருந்து ஓடித் தப்பித் தனது காலைப் பாதுகாத்திருக்கலாம்.... ஆனால் அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிச் செய்யவில்லை.

ஏன்?

இல்லை நண்பனே... நான் ஸெக்ரமென்டோ வர மாட்டேன்... அது பற்றி எனக்கு எந்தவித வருத்தமும் கிடையாது. சிறு பராயத்தில் நாம் துவங்கியதை முடிப்பதற்கில்லை என்றுணர்கிறேன். காஸாவை விட்டுச் செல்லும் போது மறைந்து கிடந்த உணர்வு... அந்தச் சிறு உணர்வு ஆழமாகவும் பிரமாண்டமாகவும் வளர வேண்டும். இழிவு நிறைந்த இந்தத் தோல்விகளுக்கு நடுவே உன்னை நீ தேடிக் கண்டடைய உனக்குள் அது விசாலமாகப் பரவ வேண்டும்.

நான் உன்னிடம் வரப்போவதில்லை. ஆனால் நீ எம்மிடம் திரும்பி வா. தொடையிலிருந்து துண்டிக்கப்பட்ட நாதியாவின் காலில் இருந்து புதியதொரு பாடத்தைக் கற்றுக் கொள்வதற்காகவும் வாழ்வதற்கான போராட்டத்தின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்வதற்காகவும் திரும்பி வா!

திரும்பி வா, நண்பனே... நாங்கள் எல்லோரும் உனக்காகக் □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாஸர் அப்தல் பாக்கி

ஏடனில் 1972ல் பிறந்தவர் யாஸர் அப்தல் பாக்கி. நாவலாசிரியர். சிறுகதையாளர். திரைக்கதையாசிரியர். 'கனவுகள்', 'இரவுப் பெண்கள்' ஆகியன இவரது சிறு கதைத் தொகுதிகள். 2008ல் வெளியான இவரது *Zahavar* என்ற நாவல் சர்ச்சைகளுக்குள்ளானது. *Waheedah* என்பது அவரது முதலாவது திரைக்கதை. இவரது ஆக்கங்கள் ஆங்கிலம். இத்தாலி ஆகிய மொழி களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

எமன் எழுத்தாளர் யூனியனின் அல் மனாரா சஞ்சிகை யின் ஆசிரியப் பணிப்பாளரான அப்தல் பாக்கியின் இரண்டாவது தொகுதியிலிருந்து பெறப்பட்ட இக்கதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் Ali Azeriah.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புப் பூனை

வெளிறிய முகமுடைய அந்த மனிதன் தனக்குப் பிடித்தமான அந்தச் சிற்றுண்டிச் சாலைக்குள் நுழைந்து ஜன்னலருகே உள்ள கதிரையில் அமர்ந்தான். ஜன்னலூடாகப் பார்த்தால் இரண்டு பக்கங்களும் மரங்கள் நிற்கும் விசாலமான வீதி தெரியும்.

அவன் சிற்றுண்டிச்சாலைக்குள் தள்ளாடியபடி நடந்து வந்த காலடியோசையில் அங்கு அமர்ந்திருப்போரின் கவனம் ஒரு கணம் திரும்பியது. குறிப்பாக அமர்வதற்கு முன் அவன் கதிரையைச் சுழற்றிய விதத்தில் அவர்கள் சில வினாடிகள் திரும்பிப் பார்த்து விட்டுத் தத்தமது கருமங்களில் மூழ்கினார்கள். நடுங்கும் அவனது கரங்களை அவன் அமர்ந்திருந்த மேசைக்குக் கீழோ தனது கால்களுக்கிடையிலோ மறைக்க முயற்சித்தான். ஜன்னலுக்கு வெளியே அவன் பார்த்துக் கொண்டிருந்தான். தூரத்தில் விசால வீதியின் அடுத்த பக்கத்தில் இருந்த ஒரு பழைய கட்டடத்தின் அருகில் கிடந்த குப்பைக் குவியலில் அவனது கண்கள் பதிந்திருந்தன. சிற்றுண்டிச் சாலையின் வெயிட்டர் ஒரு பால் தேநீர்க் கோப்பையைத் தனது வாடிக்கையாளரின் முன்னால் வைத்து விட்டு எதுவும் பேசாமல் நகர்ந்தான்.

வெளிறிய முகமுடைய அந்த மனிதன் தேநீர்க் கோப்பையைச் சிறிது நேரம் தனது கரங்களில் பிடித்தபடி இருந்தான். அவனது கண்கள் இன்னும் வீதியில் கிடந்த குப்பைக் குவியலில் நிலை குத்தியிருந்தன. அந்தக் குப்பைக் குவியலுக்குள் ஏதோ ஒன்று அசைவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்தான். அவனது கையிலிருந்த தேநீர்க் கோப்பை ஆட்டங் கண்டது. அசையும் குப்பையைத் தனது கண்களை விரித்து உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் குப்பைக் குவியலுக்குள்ளிருந்து ஒரு வெள்ளைப் பூனை வெளியானதைக் கண்டதும் அவன் ஆசுவாச மடைந்தான்.

"ஹலோ!"

அவனுக்கு முன்னாலுள்ள கதிரையில் அமரத் தயாரான நிலையில் நின்றிருந்த மனிதர் அவனை அழைத்தார்.

அவனது கையிலிருந்த தேநீர்க் கோப்பை கீழே விழுந்து உடைந்து சிதறியது. ஏனைய மேசைகளில் அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தோர் அவர்கள் இருவரையும் திரும்பிப் பார்த்தார்கள். விரைந்து வந்த வெயிட்டர் கொட்டிய தேநீரையும் உடைந்த கோப்பைத் துண்டுகளையும் துடைத்து அள்ளினான்.

சிற்றுண்டிச்சாலைக்காரரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட அந்த மனிதர் வெளிறிய முகமுடைய அந்த மனிதனைப் பார்த்துச் சொன்னார்: -

"உன்னைப் பயமுறுத்துவதற்காக நான் அழைக்கவில்லை!"

அவரை நிமிர்ந்து பார்த்தபடி அவன் அவசரமாகத் தனது கரங்களை மேசைக்கடியில் ஒளித்தான். பின்னர் தெருவில் தனது பார்வையைச் செலுத்தினான்.

அந்த மனிதர் சொன்னார்: -

"நான் உனக்கு வேறு ஒரு தேநீருக்குச் சொல்லியிருக்கிறேன்."

வெயிட்டர் மற்றொரு தேநீர்க் கோப்பையைக் கொண்டு வந்து வைத்தான்.

"ஜன்னலூடாக எதை உற்றுப் பார்க்கிறாய்?"

பதில் வரவில்லை!

"உன்னை இங்கே பலமுறை கண்டிருக்கிறேன். கொஞ்சம் குழப்பமான பார்வையுடன் வந்து பின்னர் தெருவை வெறித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாய்....!"

பதிலில்லை!

அம்மனிதர் சிரித்து விட்டுச் சொன்னார்: -

"நீ மூளைக் கோளாறு உள்ள ஒருவனாக இருக்க முடியாது. அப்படியானவர்களால் கார் ஓட்ட முடியாது."

தொடர்ந்து அவனைப் பார்த்துக் கேட்டார்: -

"எதிலிருந்தாவது தப்பி ஓடிக் கொண்டிருக்கிறாயா?"

ஒரு மின்னல் வெட்டுக் கடைக் கண் பார்வையை அவர் மீது செலுத்திய அவன் மீண்டும் தெருவை நோக்கினான். அவனிடம் பேச்சைத் தொடர்வதற்கு அந்தப் பார்வை போதுமானது என்று நினைத்த அவர், அவனிடம் கேட்டார்: -

"நீ எதற்காவது பயப்படுகிறாயா?"

"நான் எதற்கும் பயப்படவில்லை!"

ஓர் அலறல் குரலில் பதில் சொன்ன அவன் எழுந்து நின்று தனது கை முஷ்டியால் மேசையில் பலமாக ஓங்கிக் குத்தினான். தேநீர்க் கோப்பைகள் குலுங்கி அடங்கின. ஏனைய மேசைகளில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தோர் மீண்டும் அவர்கள் இருவரையும் ஒரு முறை திரும்பிப் பார்த்தார்கள்.

அம்மனிதர் மிருதுவாகப் புன்னகைத்தார். அவர் அவனை உட்காருமாறு கேட்டுக் கொண்டார்.

"அமைதியாயிருங்கள் நண்பரே... ஏன் இவ்வளவு கோபப் படுகிறீர்கள்?"

அவனுக்கு இருமல் ஏற்பட்டது. இருமலைத் தனது கைகளுக்குள் அடக்க முயற்சித்தான். தெருவைத் திரும்பிப் பார்த்து விட்டுக் கதிரையைச் சற்றுத் திருப்பிப் போட்டு உட்கார்ந்தான்.

அவர் சொன்னார்: -

"அது நல்லது. நாம் கொஞ்சம் பேசுவோம்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எதைப் பற்றி?... அது சரி... நீ யார்?"

அவனது குரலில் நடுக்கம் இருந்தது.

"ஒரு நண்பன்!"

அவன் பதிலேதும் சொல்லாமல் சில நொடிகள் தெருவைப் பார்த்தான். அவர் அவனைப் பார்த்துக் கேட்டார்: -

"நீ ஏன் அந்தப் பழைய கட்டடத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்?"

"அது உனக்குத் தேவையில்லாத விசயம்!"

"என்னை ஒரு நண்பன் என்று நினைத்துக் கொள்ளு. உன்னைப் பயமுறுத்துவது எது? இயல்புக்கு மாறாக இருக்கத் தூண்டுவது எது?"

குழப்பத்திலும் பயத்திலும் தடுமாறும் அவன் தன்னைப் பற்றி அந்த மனிதர் கொண்டுள்ள வித்தியாசமான பிம்பத்தை அழித்து விட வேண்டும் என்று முயற்சித்தான். ஒரு பரிகாசமான பார்வையுடனும் அரை குறைப் புன்னகையுடனும் சொன்னான்: -

"எனக்கா...? பயமா...? நீ என்ன கனவு காண்கிறாயா...?"

அவனது கேள்விக்குரிய பதிலை தலையை அசைத்து மறுத்து விட்டுச் சொன்னார்: -

"இல்லை... நான் கனவு காணவில்லை. பயம் என்பது நம்மில் ஒரு பகுதி. உதாரணத்துக்கு நான்... தெருவைக் கடக்கும் போது பயப்படுகிறேன். வேகமாக வரும் ஒரு கார் என்னை முட்டி விடக் கூடும் என்ற பயம்."

கடைசி வசனத்தைச் சற்று ஊன்றியும் தெளிவாகவும் அவர் சொன்னார்.

அதைக் கேட்ட அவன் முதன் முதலாகச் சிரித்தான். பின்னர் சொன்னான்: -

"உண்மையாகவா... நீ வீதியைக் கடக்காவிட்டால் உனது வாழ்க்கை என்னாகி விடும்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அமைதியாகச் சிரித்து விட்டுச் சொன்னார்: -

"இங்கே பார் நண்பனே... நான் உன்னைப் போல் பயங் கொண்டவன் அல்ல!"

"நான் உனக்குச் சொன்னேன்... நான் பயந்தவன் இல்லை!"

அவர் தனது கரங்களைத் தனது நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டார். அவனிடம் கேட்டார்: -

"சரி... உனக்குப் பயமில்லை என்று வைத்துக் கொள்ளு வோம். ஆனால் உனக்குக் கொஞ்சம் கவலை உண்டு என்று நினைப்போம். உன்னைக் கவலைப்படுத்துவது எது? என்னை நம்பு. நான் உனக்கு உதவி செய்வேன்...!"

அவன் தனது உதடுகளைத் தனது நாக்கினால் நக்கினான். அந்தப் பழைய கட்டடத்தையும் குப்பைக் குவியலையும் பார்த்தான். பின்னர் அவரிடம் கேட்டான்: -

"அங்கே கிடக்கும் குப்பைக் குவியலைப் பார்த்தாயா... அந்தப் பழைய கட்டடத்துக்கு அருகில்...?"

"ஆமா.. பார்த்தேன்... நான் அடிக்கடி அதைத்தாண்டி நடந்து போவேன்!"

"நீ என்னை நம்ப மாட்டாய்...!"

"சரி, பார்க்கலாம் சொல்லு!"

"அது என்னைப் பின் தொடர்கிறது... ஒரு மாத காலமாக என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறது!"

"யார்?"

"ஒரு பூனை!"

"ஒரு பூனை...!!?"

- அவர் கிண்டல் தொனியில் கேட்டார்.

அவன் அவரைக் கோபமாகப் பார்த்துச் சொன்னான்: -

"நரன் சொன்னேன்தானே... நீ என்னை நம்ப மாட்டாய்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் உன்னை நம்புகிறேன். நான் அந்தக் கறுப்புப் பூனை யைக் காணவே இல்லையே... எங்கே அது?"

"இப்போது கறுப்பு என்றுதானே சொன்னாய்... அது கறுப்பு என்று நான் ஒருபோதும் சொல்லவில்லையே. அது கறுப்பு என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"அது உண்மையில் கறுப்புத்தானா...? சும்மா ஒரு ஊகம் தான்... நீ மேலே சொல்லு!"

"நான் சொன்னேன். அது என்னைக் கொஞ்ச நாளாகப் பார்த் துக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு அதைக் காண வில்லை... ஆச்சரியமாக இருக்கிறது...!"

அவர் தனது தேநீரை ஒரே மிடறில் விழுங்கினார். எழுந்து, திரும்பி நடக்கத் தொடங்கினார். அவன் அவரைப் பின்னாலிருந்து அழைத்தான்.

"ஹலோ... நான் சொன்னேன்... நீ என்னை நம்பமாட்டா யென்று!"

"உன்னை நம்பினால் எனக்குப் பைத்தியம் பிடிக்கும். ஒரு பூனை உன்னையே பார்க்குமா? உனக்கு நிச்சயம் நோய் தான்!"

"நான் பொய் சொல்லவில்லை!".

என்று சொன்னவன் சில கணங்கள் அமைதியானான். பின்னர் மிரண்ட, பலவீனமான குரலில் சொன்னான்: -

"எனக்குப் பயமாக இருக்கிறது!"

அவர் அதைக் கேட்டுத் தலையசைத்துக் கொண்டே நடந்து போனார். அவன் அவருக்குப் பின்னால் சென்று சத்தமாகக் கேட்டான்: -

"நீ எங்கே போகிறாய்?"

"கழிவறை போகிறேன்.... திரும்பவும் வருவேன்!"

அவனது கண்கள் மீண்டும் பழைய கட்டடத்தின் அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிந்தன. குப்பைக் குவியலுக்கிடையில் ஒரு கறுப்பு வால் தெரிந்தது. அவனுக்கு மரண பயம் வந்தது. கதிரையில் அமர்ந்திருந்து நெளிய ஆரம்பித்த அவன் அந்த மனிதரைத் தேடி எல்லாப் புறங்களிலும் பார்வையால் துழாவினான்.

குப்பைக் குவியலுக்குள்ளிருந்து ஒரு கறுப்புப் பூனை சட்டென வெளியாகியது. அப்படியே அது ஒரு வட்டமடித்துச் சிற்றுண்டிச் சாலையை உற்று நோக்கியது. அவன் உடனே அந்த மனிதரைத் தேடிக் கழிவறை நோக்கி ஓடினான். ஆனால் அவர் அங்கிருக்கவில்லை. அவரைத்தேடிச் சிற்றுண்டிச்சாலையிலிருந்து வெளியேறிய போது அம்மனிதர் வெளியிலிருந்து வந்து கொண்டிருந்தார்.

"நீ எங்கே போயிருந்தாய்?"

"ஒரு தொலைபேசி அழைப்பு எடுப்பதற்காக வெளியே போயிருந்தேன். ஏன் என்ன நடந்தது... ஏன் இப்படிப் பயப்படுகிறாய்?"

அவன் அவரது கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்று அவர்கள் ஏற்கெனவே இருந்த இடத்தில் அமர்த்தி விட்டுக் குப்பைக் குவியலைச் சுட்டிக்காட்டிச் சத்தமாய்ச் சொன்னான்: -

"பார்!......... அது அந்தா இருக்கு!"

அவன் சுட்டிக் காட்டிய திசையில் பார்த்த அவர் கிண்டல் தொனிக்கச் சொன்னார்: -

"எங்கே....? ஒரு கறுப்புப் பை மட்டும்தான் எனக்குத் தெரியுது...!"

அவன் உற்சாகமிழந்து சொன்னான்: -

"ச்சே... அது போய்விட்டது. அது அங்கே இருந்திச்சு... நீ என்னை நம்பல்லியா?"

"நான் நம்புறேன். ஆனா அமைதியா இரு. அந்தக் கறுப்புப் பூனை எதுக்காக உன்னையே பார்க்கணும்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குத் தெரியாது...! எனக்குத் தெரியாது....!!"

"கொஞ்சம் யோசிச்சுப் பார்... எதுக்காக அது உன்னைப் பார்க்குது?"

"அதுக்கு......."

"என்ன..... சொல்லு!"

"இதெல்லாம் நீண்ட காலத்துக்கு முன்னர் நடந்தது... இல்லை... இல்லை... அப்படி ஒரு உறவு அவைகளுக் கிடையில்...."

அவன் இடை நிறுத்தினான்.

"சொல்லி முடி.... என்ன நடந்திச்சு?"

"அந்த நாட்களில் நான் கொஞ்சம் விளையாட்டுத் தனமான இளைஞன். அதனால்தான் அப்படி நடந்துச்சி... அதுக்கு மேல நான் காரை ஏற்றினேன். நான் வேண்டுமென்றே அதுக்கு மேல் காரை ஏற்ற வேண்டுமென்று பல முறை நினைத்தேன். கடைசியில் ஒரு நாள் அதைச் செய்தேன். ஆனால் ஒரு பத்து வருசத்துக்கு முன்னால இது நடந்துச்சு.!"

"ஆனால் அந்தப் பூனைக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"எனக்குத் தெரியாது. நான் அந்தப் பூனையைக் கொன்ற தற்காக இது பழிவாங்க வந்திருக்கலாம்!"

"நீ தமாஷ் பண்றியா"?

"இல்லை... நான் கறுப்புப் பூனைக்கு மேல் காரை ஏற்ற வில்லை!"

'கறுப்பு' என்ற சொல்லை அவன் சற்று அழுத்திச் சொன்னான்.

"நீ என்ன சொல்கிறாய்..?"

"அது ஒரு தீய சக்தி!"

இதைக்கேட்ட அவர் நம்ப முடியாத ஒன்றை எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது போல் தனது கால்களைத் தரையில் அடித்துச் சத்தமாகக் கேட்டார்: -

"என்னை வைத்து நீ விளையாட்டுக் காட்டுகிறாயா?"

அங்கு தேநீர் அருந்திக் கொண்டிருந்த அனைவருக்குமிடையில் ஒரு கணம் அமைதி நிலவிற்று. அவன் அவரை முன்னோக்கி நகர்ந்து மெதுவான குரலில் சொன்னான்: -

"நீதான் இப்போது என்னை வைத்து விளையாடுகிறாய்!"

"கொஞ்சம் சிந்தித்துப் பார் நண்பனே... ஒரு கறுப்புப் பூனை உன்னை ஒரு வாரமாக உற்றுப் பார்க்கிறது....!"

அவன் அவரை இடைமறித்துக் கேட்டான்: -

"ஒரு வாரமாக என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"நீதான் சொன்னாய்!"

"நான் சொல்லவில்லை!"

"சரி அது ஒரு ஊகம்! அல்லது ஒரு வாரமாகத்தான் நான் இந்தப் பகுதியில் உன்னைக் காண்கிறேன்."

அவன் தெருவைப் பார்த்தவாறே கேட்டான்: -

"சரி.. நீ என்ன சொல்ல வந்தாய்?"

"பிசாசுகள் கறுப்பு நாய்களாகவும் கறுப்புப் பூனைகளாகவும் உருவமெடுக்கக் கூடியவை என்பது தெரிந்த விடயம்."

"இனி?"

அவர் அவனது முகத்துக்கு நெருக்கமாகத் தனது முகத்தைக் கொண்டு வந்து மெதுவாகச் சொன்னார்: -

"அது உன்னைப் பழிவாங்கத்தான் வந்திருக்கிறது...!"

அவன் தன் புன்னகையை அடக்கிக் கொண்டு சொன்னான்: -

"உனது பேச்சில் அர்த்தமே இல்லை!"

"உனது கெட்ட நேரம்தான்... இந்த சாத்தான் பூனையின் தந்தையைத்தான் நீ கார் ஏற்றிக் கொன்றிருக்கிறாய்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது அப்பூனையின் தந்தைதான் என்று உனக்கு எப்படித் தெரியும்? ஏன் அது சகோதரனாகவோ சகோதரியாகவோ இருக்க முடியாது?"

அவர் சற்றுப் பின்னுக்கு நகர்ந்து அவனைப் பார்த்துச் சொன்னார்: -

"எல்லாம் ஒரு ஊகம்தான்!"

"ஊகமா....? நீ என்னைப் பயங்காட்டுகிறாய் இல்லையா...?:

"அன்பு நண்பா... ஒரு பேய் தனது உருவத்தை எப்படியும் மாற்றி வாழக் கூடியது... மனித உருவிலும் கூட!"

"சும்மா போ...!"

"அமைதியாய் இரு!... நான் போகிறேன்... ஆனால் கொஞ்சம் சிந்தித்துப் பார்!"

"எதைப் பற்றி?"

அவர் தெருவைச் சுட்டிக் காட்டி அவனிடம் கேட்டார்: -

"அந்தப் பூனை இப்போது எங்கே..?"

அவன் தெருவைப் பார்த்தான். தோளைக் குலுக்கிக் கொண்டு சொன்னான்: -

"எனக்குத் தெரியாது."

"அது இங்கே இருக்கிறது!"

"அது இங்கேயா...?"

அவன் தான் அமர்ந்திருந்த கதிரையிலிருந்து சற்று நகர்ந்து சிற்றுண்டிச் சாலைக்குள் தன் பார்வையைச் சுழல விட்டான்.

"ஆம். ஒரு பேய் தனது உருவத்தை மனித உருவத்துக்கு மாற்றிக் கொண்டும் வரும் என்று உனக்குச் சொன்னேன் தானே... அது அவனாக ஏன் இருக்கக் கூடாது...?"

- அவர் வெயிட்டரைச் சுட்டிக் காட்டினார்.

அவன் உடனே பதில் சொன்னான்: -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவனை எனக்கு பல வருடங்களாகத் தெரியும்"

"அப்படியென்றால் அதோ அந்தா அமர்ந்திருக்கும் மனித னாக இருக்கலாம். அவனும் கறுப்பு. பூனையும் கறுப்பு!"

அவன் அப்படி இருக்காது என்று தலையசைத்து விட்டுச் சொன்னான்: -

"இல்லை! அந்தப் பூனை பழைய கட்டடம் அருகில் இருக்கும் போதே இந்த மனிதன் அதே இடத்தில் அமர்ந் திருந்தான். இங்கே வழமையாக வரும் அனைவரையும் எனக்குத் தெரியும். புதியவர்களும் அதிகம் பேர் இங்கே வருகிறார்கள்தான்!"

"என்னைப் போல!"

அவன் அவரைப் பார்த்தான்.

"ஆம்!"

அவனது முகத்தருகே உடலை வளைத்து நெருங்கி அவர் கேட்டார்: -

"அந்தப் பூனை ஏன் நானாக இருக்கக் கூடாது?"

"நீ சும்மா கிண்டல் பண்ணுகிறாய்...!"

ஆனால் அவனது முகத்தில் ஒரு தயக்க ரேகை ஓடிற்று.

"தனது தந்தை கார் ஏற்றிக் கொல்லப்பட்டுத் துண்டு துண்டாகச் சிதறுவதை ஒரு சின்னக் கறுப்புப் பூனைக்குட்டி பார்த்துக் கொண்டிருந்தது. அது பெரிதாக வளர்ந்து இப்போது பழி வாங்க வந்திருக்கிறது!"

"அப்படியானால் பத்து வருடங்களாக நீ எங்கிருந்தாய்?"

"நான் உன்னைத் தேடிக் கொண்டிருந்தேன்!"

"நீ சும்மா என்னைப் பயங்காட்டுகிறாய்!"

அவர் தனது கண்ணாடியைக் கழற்றியபடி எழுந்து நின்று அவனிடம் கேட்டார்: -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனது கண்களைப் பார்! அவை அந்தக் கறுப்புப் பூனையின் கண்கள் போல் இல்லையா...?"

அவரது கண்கள் பச்சை நிறமானவையாக இருந்தன. அவன் சற்றுப் பின் சாய்ந்து சொன்னான்: -

"என் உம்மும்மாவுக்கும் பச்சை நிறக் கண்கள்தாம் உள்ளன. அதற்காக அவரைப் பூனை என்று சொல்ல முடியுமா?"

அவர் தனது கண்ணாடியை மீண்டும் அணிந்து கொண்டு எழுந்து நின்று அவனிடம் சொன்னார்: -

"நான் திரும்பி வருவேன்!"

"எங்கே போகிறாய்?"

"கழிவறைக்கு!"

அவர் கழிவறை நோக்கி நடப்பதை அவன் பார்த்தான். ஒரு சிகரட்டைப் பற்ற வைத்தான். வெயிட்டரைப் பார்த்து அருந்துவ தற்கு ஏதாவது கொண்டு வருமாறு கேட்டான். உடலைத் திருப்பி ஜன்னலூடே தனது பார்வையைச் செலுத்தினான். பழைய கட்டடத் துக்கு அருகிலிருந்து அந்தக் கறுப்புப் பூனை அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. அவனுக்குப் பயம் எடுத்த போதும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் சமாளித்துக் கொண்டான். கழிவறைக் கதவு திறந்து அவர் வெளி வருவதை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந் தான். பிறகு பூனையைப் பார்த்தான். கழிவறைக் கதவையும் பூனை யையும் மாறி மாறிப் பார்த்தான். அவனது கண்கள் பிரகாசிக்கத் தனக்குள்ளேயே கதைத்துக் கொண்டான்: -

"ஏதோ ஒரு அர்த்தம் தெரிவது போல் இருக்கிறதே!"

தேநீர்க் கோப்பையை அவன் முன்னால் வைத்த வெயிட்டர் கேட்டான்: -

"என்னிடமா நீங்கள் பேசினீர்கள்?"

பதிலேதும் கிடைக்காத காரணத்தால் அந்த வெயிட்டர் அங்கிருந்து அகன்று மற்ற வெயிட்டரிடம் அவனைச் சுட்டிக்காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அவனுக்குப் பைத்தியம்' என்று சொன்னான்.

'இவனே அந்தப் பூனையாக இருக்கக் கூடும். இந்த மனிதன் மறைகின்ற போதெல்லாம் பூனை ஏன் வெளியில் வரவேண்டும்?' என்று கழிவறைக்குள் சென்ற மனிதனைப் பற்றித் தனக்குள்ளேயே கதைத்துக் கொண்டான்.

ஒரு எலியைப் போல் கள்ளத்தனமாகப் பூனையை மீண்டும் பார்த்தான். பயத்துடன் தனக்குத்தானே கதைக்க ஆரம்பித்தான்.

'என்னிடம் கார் இருப்பது இந்த மனிதனுக்கு எப்படித் தெரியும்? அந்தப் பூனை கறுப்பு என்பதும் அப்பூனைக்கு நான் ஒரு வாரமாகப் பயப்படுகிறேன் என்பதும் இவனுக்கு எப்படித் தெரியும்? அவனுக்கு நன்றாக என்னைத் தெரியும் போல் இருக்கிறது. நான் கார் ஏற்றிக் கொன்ற பூனை இந்தப் பூனையின் தந்தை என்பது அவனது பேச்சில் உறுதியாகத் தெரிகிறதே....!'

அந்தப் பூனை இன்னும் அதே இடத்தில் நின்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. கழிவறைக் கதவைப் பார்த்துக் கொண்டே மீண்டும் தனக்குள் பேசினான்.

'இவன் அரை மணித்தியாலத்துக்குள் இரண்டு முறை கழி வறைக்குப் போனான். அதிலொன்றுமில்லை. ஆனால் முதலாவது தரம் கழிவறைக்குள் சென்றவன் வீதியிலிருந்தல்லவா உள்ளே வந்தான்?'

அவன் சற்று அமைதி காத்தான். அவனது கண்களில் திடீர்ப் பிரகாசம் வந்தது.

'அந்தப் பூனை இவனாக இருக்குமோ? அவனது கண்கள் கூடப் பச்சை நிறமானவை!'

தனக்கு முன்னால் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவரின் கண்கள் அவன் கற்பனையில் வந்தன. அவர் அவன் முன்னாலிருக்கும் நினைப்பில் அந்தக் கற்பனை விரிவடைந்து அவனை உந்தித் தள்ளக் கதிரையிலிருந்த அவன் சட்டென எழுந்து உச்சச் சத்தத்தில் கத்தினான்: -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் உன்னைக் கொல்லுவேன்!"

தேநீர் அருந்திக் கொண்டிருந்த ஏனையோர் அவனது சத்தத்தில் திகைத்துப் போயினர். அவன் தனது காற்சட்டைப் பையிலிருந்து ஒரு கத்தியை எடுத்தான். அம்மனிதரின் கண்களைக் கற்பனை செய்தபடி ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு மீண்டும் சத்தமிட்டான்.

"அவனை நான் கொல்லுவேன்...! நான் உன்னையும் கொல்லுவேன்...!!"

சிற்றுண்டிச்சாலையிலிருந்து வெளியேறிய அவன் கத்தியைக் கையில் ஓங்கியவாறு பித்துப் பிடித்தவன் போல் தெருவில் இறங்கி ஓடினான். வேகமாக வந்த லொறியொன்று அவனை மோதிற்று. அவன் அந்தப் பழைய கட்டடத்தின் அருகில் தூக்கி வீசப்பட்டான்.

பெரிய கிறீச் ஒலி ஒன்று எழுந்து அடங்கியது. அவனை நோக்கி ஓடிய ஜனங்கள் விழுந்து கிடந்தவனைச் சுற்றி வட்டமாக நின்றிருந்தார்கள். அவர்களுக்குள்ளிருந்து ஒரு குரல் சன்னமாய் ஒலித்தது.

"இவனை எனக்குத் தெரியும்! கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இருவரும் ஒன்றாகத்தான் இருந்தோம்!"

அவன் இறந்து விட்டான்.

அவனது வெளிறிய முகத்தை ஒரு பழைய கந்தல் துணி கொண்டு யாரோ மூடினார்கள். கட்டடத்துக்கு அருகில் கிடந்த குப்பைக் குவியலை அவனது பார்வை வெறித்தபடியிருந்தது.

ஒரு கறுப்புப் பூனை தானாகவே திரும்பி 'மியாவ்' என்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரா:பியா ரைஹான்

ரா:பியா ரைஹான் மொரோக்கோவைச் சேர்ந்தவர். அரபு மொழி மற்றும் அரபு இலக்கியம் கற்பித்த ஓர் ஆசிரியையான இவர் தற்போது தேசிய கல்வி அமைச்சில் பணியாற்றுகிறார். இதுவரை மூன்று சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். அபூதாபியில் ஆக்க இலக்கியத் துறையில் அரபுப் பெண்களுக்கான முதற்பரிசு பெற்றவர். இவரது சில சிறுகதைகள் பிரெஞ்ச், ஆங்கிலம், ஜேர்மன், ஸ்பானிஷ், டெனிஷ் ஆகிய மொழிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

Sadines and Oranges என்ற தொகுப்பில் இடம் பெற்றிருந்த இந்தக் கதையை ஆங்கிலத்துக்கு மொழி பெயர்த்தவர் Ali Azeriah.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்புப் புள்ளி

பிற்பகலில் சிறுமிகளுடன் சேர்ந்து விளையாடுவது என்னைப் பொறுத்த வரை ஒரு சிலிர்ப்புடனும் பேராவலுடனும் இங்கும் அங்குமாகப் பறந்து திரிய விரும்பும் ஒரு சுதந்திரப் பறவை யாக என்னை மாற்றிக் கொள்வதைப் போன்றது. அல்லது ஒரு காட்டு முயலைப் போல் ஒளிந்து கொள்வதற்கும் களைப்பேயில்லாத மான் குட்டியொன்று விசாலமான, பரந்த வெளியில் சுதந்திரமாக மகிழ்ந் தலைவதற்கும் ஒப்பானது.

எனக்கு ஏறக்குறையப் பதினான்கு வயதானது. நாணம் துளிர் விடும் பருவம். ஒரு பெண் பிள்ளை தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிய ஆரம்பிக்கும் காலம் அது. நான் இன்னமும் சிறுமியாகவே இருந்த போதும் என் தாயார் எனக்குத் திருமணம் செய்து வைப்ப தென்று முடிவு செய்தார்.

எமது தூரத்து உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் வீட்டுக்கு வந்ததுதான் அதற்குக் காரணம். குனிந்த தலை நிமிராமல் எனது பாதங்களைப் பார்த்துக் கொண்டு நான் நிற்பதையும் தாயார் சொல்வதையெல்லாம் கேட்டு அதற்கேற்ப நான் இயங்கிக் கொண்டி ருப்பதையும் அந்தப் பெண்மணி வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தார். அக்கணத்தில் அவருக்குத் தோன்றிய எண் ணத்தை - அது ஒரு போதும் தவறில்லைதான் - அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளிப்படுத்தினார். தனது மகனுக்கு நல்லதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியைப் பார்த்து விட்டதாக அவர் எனது தாயாரிடம் சொன்னார்.

எனது சகோதரி இச்செய்தியை என்னிடம் தெரிவித்ததும் நான் ஒரு பெரிய பெண்ணாக வளர்ந்து விட்டேனோ என்ற எண்ண மும் அதனால் ஒரு மனக்குழப்பமும் உண்டானது. எனது தாயாரின் முகத்தில் சந்தோஷம் பீறிட்டது. எனது மாமியின் புதல்விகளுக்குப் போலல்லாமல் எனக்கு ஒரு கணவர் கிடைக்கப் போகிறார். இந்த விடயம் எனது தந்தையாருக்குச் சொல்லப்பட்ட போது நான் வெட்கமும் சங்கோஜமும் அடைந்தேன்.

எவ்வாறிருந்த போதும் மாலையில் இந்த விடயத்தை நான் முற்றாக மறந்து போய் விட்டேன். ஹலீமா, வீட்டுக் கதவுக்குள்ளால் எட்டிப் பார்த்தாள். எங்கள் வீட்டுக் கதவு எப்போதுமே திறந்தபடி யிருக்கும். அவள் "விளையாட வா!" என்று என்னை அழைத்ததும் நான் அவளுடன் இணைந்து கொண்டேன். ஆனால் இரண்டே இரண்டு சதுரங்கள் பாய்ந்து விட்டு நான் ஒதுங்கிக் கொண்டேன். அவள் பல முறை எனது பெயரை விளித்துக் கூப்பிட்டுக் கொண்டே யிருந்தாள். நான் அவளுக்குப் பதில் சொல்லவில்லை. கோபத்தில் "ஆண்டவன் உன்னைத் தண்டிக்கட்டும்! துப்புக் கெட்டவள்!!" என்று திட்டியபடிபோய் விட்டாள்.

எனக்கு என்ன நடந்தது? பொலிஸ்காரரின் மகளும் அவளின் திமிர் பிடித்த தாயாரும் எனது நினைவுக்கு வந்தார்கள். அதே வேளை பயமுறுத்தும் பெண்களும் ஞாபகத்தில் வந்தார்கள். அவர்களில் சிலர் பொறாமையும் காழ்ப்புணர்வும் காரணமாக மற்றவரின் துன்பத்தில் சந்தோஷத்தை அனுபவிப்பவர்கள். பொலிஸ்காரரின் வீட்டில் நடந்தவிடயம் பயங்கரமானதுதான்! நல்ல வாட்டசாட்டமான மணமகன் அவரது அழகான மகளை விட்டுவிட்டுப் போய்விட் டான். இருட்டில் ஜன்னலைத் திறந்து அதனூடாகப் பாய்ந்து ஓடியிருக்கிறான். சின்ன வயது முதல் பெரிய வயது வரையான இளம் பெண்கள் அனைவரையும் ஒன்று கூட்டி எச்சரிப்பதற்கு இது எல்லாத் தாய்மாருக்கும் ஒரு வாய்ப்பாகப் போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பொம்புளப் பிள்ளைகளால எங்களுக்கு வெட்கமும் அவமானமும்தான் ஏற்படுகுது!”

பொலிஸ்காரரின் மகள் ஒரு ‘கன்னி’ அல்ல. மாப்பிள்ளை இதை அறிந்ததும் அதிர்ச்சியடைந்து விட்டான். அது ஒரு துரோகம் எனக் கருதிய அவன் அவளைவிட்டுப் போய் விட்டான். அவளது தாயார் ஒரு மூலைக்குள் அமர்ந்து தனது கன்னத்தில் தானே அறைந்து கொண்டாள். தந்தையார் தனது மோட்டார் சைக்கிளில் வெளி யேறிப் போனார். அவளைத் தேற்றவோ ஆறுதல் சொல்லவோ யாரும் இல்லை. மணமகள் எந்த விதமான துணையுமின்றிக் கறைப் பட்டவளாக உட்கார்ந்திருந்தாள்.

மற்றையோருக்கு அவளது பெற்றோர் இழைத்த தீங்குகளின் பலனாகவே இவ்வாறு நடந்தது என்று வாயாடிப் பெண்கள் தர்க்கம் பேசினார்கள். பொலிஸ்காரரான அவளது தந்தை இரக்கமற்ற முரட்டு சுபாவமுள்ள கல் நெஞ்சுக்காரர். அவரது பெல்ட்டுக்கும் தடிக்கும் யாரும் தப்பியது கிடையாது. அவரது மனைவியோ அவரது அனைத்துப் பாவங்களுக்கும் துஷ்டச் செயல்களுக்கும் ஊக்கமளிப்பவள்.

பொலிஸ்காரரின் துன்பத்தில் இன்பங் கண்ட பெண்கள் பேசிக் கொண்டார்கள்: -

“மற்றவர்களின் விடயங்களைக் கவனிப்பதில் அவர் கண் ணும் கருத்துமாக இருப்பார். மகளின் கன்னித் தன்மையைப் பாதுகாப்பதிலும் அவர் கவனமாக இருந்திருக்க வேண்டும்!”

இளம் பெண்களான நாங்கள் பயத்துடனும் கவலையுடனும் வளர்ந்தோம். நாங்கள் சந்தித்துப் பேசிக் கொள்வோம். எங்கிருந்து இந்த நுட்பங்களெல்லாம் தெரிய வந்தது என்பது எங்களுக்கே வியப்பாக இருந்தது. உயரமாகப் பாயாமல் இருப்பது, கூர்மையான விளிம்புள்ள இடங்களில் உட்காருவதைத் தவிர்ப்பது போன்றவற்றை எமது கற்பைப் பாதுகாத்துக் கொள்ளும் கேடயங்களாகக் கண்டு பிடித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று மூத்த இளம் பெண்கள் அவர்களை விட இளையவர்களான எமது வாயைக் கிளறித் தகவல் பெற முயல்வதை நினைத்துப் பயத்தில் நான் மனமுடைந்திருந்தேன். எங்கள் மீது வஞ்சம் தீர்ப்பது போல் அவர்கள் பேச்சு அமைந்திருக்கும். அவர்கள், "நீ கன்னித் தன்மையுள்ளவள்... அப்படித்தானே!", "நீயும் கன்னித் தன்மையுள்ளவள்தானே.... இல்லையா?" என்று எம்முடன் நைச்சியமாகப் பேசுவதன் மூலம் எங்கள் வாய்மூலமாகவே தகவல் பெறுவதற்கான பரீட்சை அது. யார் கன்னிமையுள்ளவள், யார் கன்னிமையற்றவள் என்றெல்லாம் பேசும் அருவருக்கத்தக்க, பைத்தியக்காரத்தனமான செயலைத் தாங்கிக் கொள்ளும் அவலத்தை நினைத்துப் பாருங்கள்!

உடலுறவில் எங்களுக்கு எவ்விதமான அனுபவமும் இல்லாத போதும் அது ஒரு முக்கியமான விடயம் என்பதைத் தெரிந்திருந்தோம். உடலுறவு பற்றி எமது தாய்மார் தொடர்ந்து எச்சரிக்கை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களது எச்சரிக்கையானது ஓய்வே இல்லாத மணியோசை போல எங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. அத்துடன் எங்களது ஒட்டு மொத்த ஆர்வத்தையும் அதிலேயே ஊறச் செய்து விட்டது.

கட்டி முடிக்கப்படாத ஒரு கட்டடத்துக்குப் பின்னால்தான் மரியம் தன் கன்னிமையை இழந்தாள்.

நான் அவளது நண்பி அல்ல. அவள் என்னை விடச் சற்றுக் கூடிய வயதுடையவள். அவளையும் அவளது உடன் பிறப்புக்களையும் கவனிப்பதில் அவள் மும்முரமாக இருந்தாள். அதற்குக் காரணம் குடும்பத்தில் அவள் மூத்தவளாக இருந்ததுதான். பிள்ளைகளைக் கவனிக்கும் பாரத்தை அவளது தாயார் தனது தோளிலிருந்து இறக்கித் தனது புதல்வியின் தோளுக்குப் பொறுப்பளித்திருந்தாள்.

மரியமின் சகோதரர்கள் ஒன்றும் பெரும் கெட்டிக்காரர்கள் அல்லர். தமது உடல் வலிமையினாலோ பொலிஸ்காரரான தமது தந்தையிடமிருந்து தங்களுக்கான பலத்தையும் பாதுகாப்பையும் பெற்றுக் கொள்ளும் நிலையிலோ அவர்கள் இல்லை. ஒருவர் புரியும் நல்லதையும் கெட்டதையும் பற்றிப் பலரும் கதைப்பது போல் ஊர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுக்கத் தங்களைத் திட்டுவதையும் பழி சொல்வதையும் அவர்கள் தெரிந்தேயிருந்தார்கள்.

அவர்கள் தம்மை இழிவுபடுத்தியமைக்காகப் பழிவாங்காமல் விட மாட்டார்கள் என்பது ஊர்ப் பெண்களுக்குத் தெரியும். மரியமின் தந்தையுடைய கைத்துப்பாக்கியும் சகோதரர்களின் பெரிய கத்திகளும் அவர்களின் நினைவுக்கு வராமலில்லை. ஆனாலும் கூட இந்த விடயம் வெறுமனே காற்றோடு போயிற்று. ஏதோ நன்மை கருதி வயதில் மூத்த பெண்களின் அனுபவப் பேச்சுக்களில் அவர்கள் கவனம் செலுத்தினார்கள்.

> "யார் யாருக்கு எது வேண்டும் என்று நினைத்தாலும் அவரவருக்கு வேண்டியது எது என்று தீர்மானிப்பவன் இறைவன்தான். வாழ்வும் தாழ்வும் அவரவர் விதியைப் பொறுத்தது"

என்று சொல்லப்பட்டதன்படி அவர்கள் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டார்கள்.

பொலிஸ்காரரின் மகளின் விடயம் சுவாரசியமற்றுப் போகும் வரையில் ஊரார் வம்பு பேசிக் களித்தனர். மரியம் வீட்டை விட்டு வெளியே வராமல் பணிவுள்ள பெண்ணாக மொத்தமாக அடங்கிக் கிடந்தாள். ஒரு கீழ்ப்படிவுள்ள அடிமையாக அவள் வீட்டுக்குள் இருந்தாள்.

தாயார் எனது திருமணப் பேச்சைத் தொடங்கினால் அவரது முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் படரத் தொடங்கும். ஆனால் எனக்குப் பேச்சுத் திக்கித் திணறக் கண்களில் திடீரெனக் கண்ணீர் பீறிட ஆரம்பிக்கும். மரியமுடைய அழகிய முகம் எனது மனத்தில் படமாக விரியும். தனித்த, மண்டியிட்ட, கழுவித் துடைக்கின்ற, கஷ்டப்படுகின்ற, எல்லோராலும் மூர்க்கத் தனமான அவதூறுக்குள்ளான பெண்ணாக, அவை எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டவளாக மரியம் என் கற்பனையில் வருவாள்.

நான் எனது தாயாரிடம் கெஞ்சி மன்றாடினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குத் திருமணம் செய்து கொள்ளும் தேவை இல்லை. நிச்சயமாகக் கிடையாது!"

"ஆனால் எனக்குத் தேவை!"

"அப்படியானால் நீங்கள் அவனைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்!"

ஒரு குழப்பத்தை உண்டாக்கும் மனோ நிலையில் நான் எதிர்த்துப் பேசினேன். கொஞ்ச நேரம் அமைதியாகத் தலை குனிந் திருந்தேன். பிறகு நிமிர்ந்து அவரைப் பார்த்த போது அவரது முகத் தின் மகிழ்ச்சி வடிந்து போயிருந்தது. ஆனால் உடனடியாக அவர் தன்னைச் சாந்தப் படுத்திக் கொண்டு சொன்னார்: -

"அவன் நல்லவன்... வசதியுள்ளவன்..!!"

எனது முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு கவலை யுடன் பயமுறுத்தும் தொனியில் சொன்னேன்: -

"நீங்கள் என்னைத் திருமணம் செய்யக் கட்டாயப் படுத்தி னால்... நான் ஓடிப் போய் விடுவேன்!"

அவர் எதிர்பாராத எனது இந்தப் பதில் அவரை அதிர்ச்சிக் குள்ளாக்கியிருக்க வேண்டும். அவர் ஆழ்ந்த சிந்தனையுடன் அமர்ந்திருந்தார்.

"நீ ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?"

- தாயாரின் கவலை தோய்ந்த குரல் காதில் விழுந்தது.

தரையில் பதிக்கப்பட்டிருந்த மாபிளில் உள்ள சிவப்புப் புள்ளியை வெறித்துப் பார்த்தவாறு மிகவும் மன வேதனையுடன் சொன்னேன்.

"ஏனென்றால் நான் யாருடைய அடிமையாகவும் இருக்க விரும்பவில்லை!" □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜுக்ஹா அல் ஹார்த்தி

ஜுக்ஹா அல் ஹார்த்தி ஓமான் தேசத்தவர். அறபு இலக் கியத்தில் முதுகலைமாணியான இவர் Classical Arabic Literature பற்றி ஆய்வு செய்து பிரிட்டனில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். இவரது நாவல்கள் - Manamat (Dreams) 2004, Sayidat al-Qamar (Ladies of the Moon) 2010. சிறுகதைத் தொகுதிகள் – Maqati Min Sirat Lubna Ith Aana al-Rahil 2001, Sabi Ala al-Sath (A Boy On The Roof) 2007. சிறுவர் இலக்கியம் - ush lil-asafir (Nest for Birds) 2010. கட்டுரைத் தொகுதி - Fi Madih al-Hubb (Impressing Love) 2008.

Dirasat Fi Adab Oman Wa al-Khalij (Studies in Oman and Gulf Literature) என்ற நூலின் ஆசிரியர்களுள் ஒருவர். இவை தவிரப் பல்வேறு இலக்கியப் பங்களிப்பு களை அரபுலகப் பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு வழங்கி வருபவர். இவரது எழுத்துக்கள் ஆங்கிலம், ஜேர்மன் ஆகிய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன.

A Boy On The Roof என்ற தொகுதியில் இடம் பெற்றுள்ள இந்தக் கதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் Ibtihaj al-Harthi.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணம்

அந்தத் திருமண மண்டபம் மிகப் பிரமாண்டமானதாக இருந்தது.

மணப்பெண் ஆசனம் பல நூறு மலர்களைக் கொண்டும் வெள்ளை மற்றும் கபில நிறத் திரைகளாலும் அழகுற அலங்கரிக்கப் பட்டிருந்தது. வட்ட மேசைகளைச் சுற்றிப் பெண்கள் பெருமையுடன் அமர்ந்திருந்தார்கள்.

ஸலாமா நேராக அமர்ந்திருந்தாள். அவளது தலை நேரா கவோ சாய்வாகவோ இல்லாத ஒரு மத்திய நிலையில் இருந்தது. தங்கம், வெள்ளி, அழகுச் சிறு மணிகள் ஆகியவற்றாலான ஏராள நகைகளை அணிந்திருந்தமையால் பாரமான தனது கரங்களை மடி யில் வைத்திருந்தாள். காலுறை அணிந்திருந்த அவளது பாதங்கள் தரையில் பதிந்திருந்தன. அவளது உதட்டில் மகிழ்வும் திருப்தியும் தொனிக்கும் புன்னகை குடிகொண்டிருந்தது. அவ்வப்போது இமைத் துக் கொண்ட அவளது பார்வை நேராக மணமகளை நோக்கி யிருந்தது.

இரண்டு மணி நேரமாக நீடித்துச் செல்லும் அந்தத் திருமண வைபவத்தில் ஸலாமா தனது ஆசனத்திலிருந்து ஒரு முறையாவது எழுந்து செல்லவில்லை. தனது அங்கங்களைக் கூட அசைக்காமல் திருப்தி வெளிப்படும் அதே புன்னகையுடன் உறுதியான தோரணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் அமர்ந்திருந்தாள். அந்தக் கதிரையிலே அமர்ந்திருக்கவே பிறந்தவள் போலவும் அத்திருமண மண்டபத்திலேயே காலாதி காலமாக வாழ்பவள் போலவும் அவளது தோற்றம் இருந்தது.

ஸலாமா பத்து முறை திருமணம் செய்தவள். அவற்றில் ஒரு திருமணமாவது இதோ... இப்போது நடைபெற்றுக் கொண்டிருக் கும் திருமணத்தைப் போல் நடந்ததில்லை. அழகாகச் சோடிக்கப் பட்ட திரைகள் கொண்ட ஒரு மணமேடையில் அவள் அமர்ந்ததே கிடையாது. அவளருகில் எந்த மணமகனாவது அமர்ந்து திருமணத் துக்கு வருகை தந்தோர் மத்தியில் அவளது கரத்தைப் பற்றியதுகூடக் கிடையாது. அவளது ஒவ்வொரு திருமணத்தின் போதும் தலை முதல் பாதம் வரை கெட்டியான திரைச் சீலையினால் அவள் மூடப் பட்டிருந்தாள். அந்தத் திரைச் சீலை மணமகனின் அந்தஸ்துக்கேற்ப ஒன்றில் தங்க ஜரிகைகள் கொண்டதாகவோ அல்லது இளம் பச்சை நிற சாதாரண தரத்தினதாகவோ அமைந்திருந்தது. திருமணத்துக்கு வருகை தந்து பாடிக் கொண்டும் சத்தமெழுப்பிக் கொண்டும் திரியும் பெண்களால் உண்டாகும் நெருக்கத்தில் அவளது உடல் நசுங்குண்ட படியிருக்கும்.

மணமகனின் வீட்டுக்கு நேரடியாக அழைத்தச் செல்லப் படும் அவள் அங்கு வீட்டின் ஒரு மூலையில் அமர்த்தப்படுவாள். அவளை மூடியிருக்கும் பாரமான திரைச் சீலையின் கனத்தின் காரண மாக மூச்செடுக்கச் சிரமப்பட்ட நிலையில் சிறிய, தடித்த ஜமுக் காளத்தில் அவள் அமர்ந்திருப்பாள். அவளைச் சுற்றிப் பெண்கள் அமர்ந்திருக்க, அவர்களுக்கு முன்னால் இனிப்பு ஹல்வாவும்[1] கூஜாவில் கசப்பான கோப்பியும் வைக்கப்பட்டிருக்கும்.

ஆண்களின் பிரசன்னம் ஆரம்பமானதும் பெண்கள் மண மகளையும் மணமகனையும் தனியே விட்டுத் தத்தமது வீடுகளுக்குச் செல்லத் தொடங்குவார்கள். மணமகள் உள்ளே நுழைந்ததும் அவனது பார்வை எதிர் பார்ப்புக் கொண்ட அவளது கண்களை எதிர் கொள்ளும். அதைத் தொடர்ந்து கைகளிலும் கழுத்திலும் ஸலாமா அணிந்திருக்கும் தங்கம், வெள்ளி மற்றும் பல்வேறு நிறங்களிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளாஸ்டிக் அணிகலன்களின் மீதும் படியும்.

இந்த இரவில் அவளுக்கென்றே வைக்கப்பட்டது போன்ற அந்தக் கதிரையில் ஸலாமா பிரகாசமாகத் தெரிந்தாள். அவளது கண்களின் பார்வை இயல்பாகவும் ஆழமாகவும் மணமகள் மீது பதிந்திருந்தன. அழகு வேலைப்பாடுகள் செய்யப்பட்ட தலைத் திரைக் கூடாக இக்ஃபா[2] முறையில் சிகையலங்காரம் செய்யப்பட்ட மணமகளின் தலைமுடிப் பின்னல் தெரிந்தது. ஒரு சிறிய பூவைப் போல் வடிவமைக்கப்பட்ட தங்க மூக்குத்தியொன்றையும் அவள் அணிந்திருந்தாள். அவளது தோற்றத்தில் என்னவொரு தன்னம்பிக்கை!

ஸலாமா வளர்க்கும் ஒன்பது கோழிகளும் இப்போது உறக்கத்தில் இருக்கும். முட்டைகளை எடுத்த பின்னர் காலையில் கோழிக் கூட்டைச் சுத்தம் செய்திருந்தாள். திருமணத்தில் கலந்து கொள்ளப் புறப்படு முன்னர் தனது மதிய உணவின் மீதியைக் கோழி களுக்கு வைத்தாள். அதன் பிறகுதான் மஸ்கட்டிலுள்ள ஓமானியப் பெண்கள் அமைப்பின் திருமண மண்டபத்துக்கு வருவதற்கான விருந்தினர் பஸ்ஸில் அவள் ஏறியமர்ந்தாள்.

அவளது வாயைச் சுற்றிச் சில சுருக்கக் கோடுகள் இருந்த போதும் அவளது முகத்தில் மெல்லிய புன்னகை இன்னும் மாறா திருந்தது. அந்தப் புன்னகையில் ஏளனம் இல்லை. மகிழ்ச்சியும் மனத் திருப்தியுமே தெரிந்தது. முட்டைகளை விற்பதனால் பல ரியால்களை அவள் பெற்றுக் கொள்கிறாள்.

இப்போது அவள் அணிந்திருக்கும் 'திஷ்தாஷா' ஆடையைப் பெருநாளன்று அவளைப் பார்க்க வந்திருந்த மகள் அன்பளிப்புச் செய்திருந்தாள். ஸலாமாவின் நான்காவது கணவருக்குப் பிறந்தவள் அந்த மகள். ஸலாமாவின் நான்காவது கணவனாக வந்தவன் அவள் திருமணத்துக்குச் சம்மதிக்கும் வரை அவளது நடையழகில் மயங்கிப் புறநகர்ப் பகுதி, ஒடுக்கத் தெரு, ஃபலாஜ்[3] பகுதி என்று எல்லா இடங்களிலும் அவளைப் பின்தொடர்ந்த வண்ணமிருந்தான். பிறகு தன் மனைவியையும் சொந்த ஊரையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறந்து விட்டு சலாமாவுடன் வாழ்ந்து வந்தான்.

உணவு பரிமாறப்பட்டது. முள்ளுக் கரண்டிகள், பீங்கான் கள், கத்திகள் ஆகியன மேசைகளில் வைக்கப்பட்டன. கிறில் செய்யப்பட்ட இறைச்சி, கேக் வகைகள், பேஸ்ட்றிகள் மேசைகளில் பரத்தப்பட்டன. ஆனால் ஸலாமா அவற்றைக் கவனிக்காமல் மணப் பெண்ணின் கையிலிருந்த ரோசாப் பூங்கொத்தைப் பார்த்தபடி தன் பாட்டில் அமர்ந்திருந்தாள்.

சாப்பாட்டுக்கான அழைப்பு விடுக்கப்பட்ட பின்னரே அவள் உண்பதற்கு ஆரம்பித்தாள். வாழ்நாள் முழுக்கவும் முள்ளுக் கரண்டியால் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவள் போல் அவள் சாப்பிட் டுக் கொண்டிருந்தாள். வைக்கப்பட்டிருந்த மென்பானங் களில் அவள் 'ஷானி'யைத் தேர்ந்து அருந்தினாள். அந்த மென்பானத்தின் சிவப்பு நிறம் அவளது உதடுகளில் படிந்திருந்தது. அவள் அணிந்திருந்த 'திஷ்தாஷா' ஆடைக்குள் மறைந்திருக்கும் கரம் மேலும் கீழும் அசையும் போது அவள் அணிந்திருந்த வளையல்களும் வெள்ளி 'அடிட்'[4] களும் ஒன்றில் ஒன்று மோதிச் சத்தம் எழுப்பின. ஆண்களின் மனதைக் கட்டிப்போடும் நீண்ட சரித்திரத்தை உடையதாக அந்த ஒலி வெளிப்பட்டது.

நாங்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கண்களைச் சிமிட்டிக் கொண்டு சிரித்தபடி கேட்போம்:-

"ஸலாமா, உனது மகளின் தந்தையின் செய்தி என்ன? அவருங்கூட உன்னை ஏன் கைவிட்டுப் போனார்?"

எங்கள் பக்கம் திரும்பி இடுப்பில் கைகளை வைத்த படி கண் இமைகள் படபடக்க அவள் பதில் சொல்வதற்கு முன் நாங்கள் எல்லோரும் சேர்ந்து கத்துவோம்...

"சூனியம்!"

முழு மனதுடன் புன்னகைக்கும் ஸலாமா கைகளால் தனது தொடைகளைத் தட்டியபடி நாம் சொன்னதை உறுதிபடுத்துவது போல் சொல்வாள்:-

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மைதான். அது நிச்சயமாக சூனியம்தான்! தலைமுடி, எலும்புகள், கறுப்பு நூல் ஆகியவை எரிக்கப்பட்டு எனது வீட்டுக்கு முன்னால் போடப்பட்டிருப்பதை நான் தினமும் பார்க்கிறேன். எதற்காக என்னுடன் பொறாமைப்படுகிறார் கள் என்று தெரியவில்லையே... நான் ஒரு நோயாளி... தனித்த பெண்!"

நாங்கள் உடனே சொல்லுவோம்: -

"சேச்சே... நீ எவ்வளவு திடகாத்திரமாய் இருக்கிறாய்! அறுபது வயது தாண்டிய போதும் உனது மயக்கும் நடை பார்ப்போரைக் கவர்ந்திழுக்கக் கூடியதாக அல்லவா இருக்கிறது...!"

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அவற்றை திருப்தியுடன் ஏற்றுக் கொள்வது போல் அவளது முகத்தில் ஒரு மகிழ்ச்சிப் பிரகாசம் தோன்றும். தன்னைத் திருமணம் செய்ய விருப்பம் தெரிவித்து இன்னும் சிலர் தூது அனுப்பி வருதாக அவள் சொல்வாள். அவர்கள் வயதான ஆண்கள் என்றும் அவர்களைக் கட்டிக் கொண்டால் குறை சொல்லிக் கொண்டேயிருப்பார்களேயொழிய வேறெந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை என்றும் சொல்லுவாள்.

ஸலாமா தனது கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். அவளைச் சூழ இருந்த பெண்கள் தங்களை அழகு படுத்திக் கொள்ள ஆரம்பித்தார்கள். தங்களது கைப்பைகளிலிருந்து சிறிய கண்ணாடிகளை எடுத்துத் தமது முகங்களைப் பார்த்தபடி புருவங்களை நீவி விட்டார்கள். உதடுகளுக்குச் சாயம் பூசினார்கள். முகங்களில் பௌடர் இட்டுக் கொண்டார்கள். தலைப் பின்னல் களைச் சரி செய்து மீண்டும் பின்னால் போட்டுக் கொண்டார்கள்.

நெற்றியில் குங்குமப் பூச்சுக் கொண்ட ஸலாமா தனக்கு அவசியம் இல்லையென்பதால் ஒரு போதும் கைப் பை வைத்திருப்ப தில்லை. கைப் பையுடன் தன்னைச் சுற்றியிருந்த எந்தப் பெண் மீதும் அவள் கவனம் செலுத்தவுமில்லை. அவளது பார்வை கமராக்களுக்கு முன்னால் அமர்ந்திருந்த மணப்பெண் மீது பதிந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் வட்டமாக நின்று ஆட ஆரம்பித்தனர். பாட்டின் சொற்களுக்கேற்பப் பெண்கள் வட்டம் விசாலமாவதும் சுருங்குவது மாக இருந்தது. அந்தப் பாடல் சுவாஹிலி மொழிச் சொற்களையும் கொண்டிருந்தது. ஸலாமாவின் கணவர்களில் ஒருவன் சுவாஹிலி மொழியைச் சரளமாகப் பேசக் கூடியவனாக இருந்த போதும் அவளால் அந்த மொழியைப் புரிந்து கொள்ள முடிந்ததில்லை. அந்தக் கணவனுடனான வாழ்க்கை சில மாதங்களுக்கு மேல் நீடித் திருக்கவில்லை.

பின்னேரப் பொழுதுகளில் சுற்றுச் சூழலில் உள்ள பெண் களை அவள் சந்திக்கும் தருணங்களில் அந்தக் கணவனைப் போல் நடித்துக் காட்டி மகிழ்வதுண்டு. முதுகுப் புறத்தைச் சாய்த்து கால் களைக் குறுக்காக வைத்து அவனைப் போன்று கரகரத்த குரலில் சத்தமாகச் சொல்லுவாள்:-

"ஓ... ஆண்டவனே... உன்னுடன் இருந்ததைப் போல் நான் வேறு எந்தப் பெண்ணுடனும் சந்தோசமாக இருந்ததில்லை ஸலாமா... நீ பெரும் இன்பம்... நீ ஒரு நன்கொடை.... எடுத்துக் கொள்... எனது மண்டூஸ்[5]களை எடுத்துக் கொள்.... கழுதையை எடுத்துக் கொள்... பேரீச்ச மரங்களையும் எடுத்துக் கொள்... இவ்வளவு காலமும் நீ எங்கிருந்தாய் பெண்ணே..!"

இவ்வாறு சொல்லிவிட்டு அமர்ந்து சிரிக்க ஆரம்பிப்பாள். பிறகு சொல்வாள்:-

"மகன் பிறந்ததும் அவர் என்னை விட்டுப் போய் விட்டார். அவரது மண்டூஸ்களையும் கழுதையையும் பேரீச்ச மரங்க ளையும் அவரே எடுத்துக் கொண்டார். அதற்குக் காரணம் சூனியம்! அவர் வீட்டுக்கு வரும் போதெல்லாம் நான் வீட்டில் இருக்க மாட்டேன். 'அவள் தனது காதலர்களைப் பார்க்கப் போயிருப்பாள்' என்று பேய்க் கிழவிகள் அவருக் குச் சொல்வார்கள். பின்னர் அந்தப் பொய் எதிரொலித்துக் கொண்டிருக்கும். அவர்களுக்கு என் மேல் பொறாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனென்று எனக்குத் தெரியவில்லை. நான் ஒரு நோயாளி... தனித்த பெண்!"

சொல்லிக் கொண்டே கண்களைச் சிமிட்டிக் கொண்டு புன்னகைப்பாள்!

எந்தத் தயக்கமுமில்லாமல் நாங்கள் ஒரே குரலில் சொல்வோம்: -

"நீ இன்னும் நல்ல தேகாரோக்கியத்துடன்தான் இருக்கிறாய். நீ தனியாள் அல்ல. உனது மகன் சிறையிலிருந்து விடுதலையாகி விட்டான். அவன் திருமணம் செய்து பிள்ளைகள் பெறுவான். அவர்களையெல்லாம் பார்க்கும் வரை நீ உயிர் வாழத்தான் செய்வாய்!"

இந்தச் சுழலும் ஒளி வெள்ளத்திலும் பாட்டுச் சத்தத்திலும் எதிர்காலத்தில் பிறக்கப் போகும் அவளது பேரப் பிள்ளைகளின் உருவங்கள் அவளது மனத்திரையில் அசைகின்றனவா? அவர்கள் எப்படியிருப்பார்கள்? வாட்டசாட்டமான அவளது மகனைப் போலா? அல்லது அநேகமாகத் திருமணச் செலவுகளைக் குறைக்கும் விதத்தில் மணமகளாகத் தெரிவு செய்யப்படப் போகும் அவர்களது இந்தியத்[6] தாய் போலா?

இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தத் திருமணத்தைப் போல் அவளது மகனுக்கு ஒரு திருமணத்தைச் செய்து வைக்க அவளால் ஒரு போதும் முடியாது. அவ்வளவு ஏன்? ஒரு பாரம்பரியத் திருமணத்தை நடத்துவதற்குக் கூட அவளால் முடியாது. ஆர்ப்பாட்டம் இல்லாத ஒரு திருமணத்தை அவன் செய்வான். அவனது பிள்ளைகளை அவள் காண்பாள்.

அவளது மற்றொரு மகனை நீண்ட காலமாக ஸலாமா கண்டதில்லை. அவனை இறைவன் பாதுகாக்க வேண்டும். பஞ்சம் நிலவிய காலத்தில் அவளைத் திருமணம் செய்த ஏழாவது கணவனுக்குப் பிறந்தவன் அவன். அக்கணவன் அவளை விட்டுச் சென்ற அன்றைய தினமே அந்த மகனும் அவளை விட்டுச் சென்றிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிக் கொண்டிருந்த பெண்கள் கதிரைகளை இழுத்துத் தம்மை இருத்திக் கொண்டார்கள். மணமகள் அமைதியிழந்து கதவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பாடல் சத்தம் மெது மெது வாகக் குறையத் தொடங்கியது. திருமணத்துக்கு வந்திருந்த சில விருந் தினர்கள் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஸலாமா தனது மாறாத புன்னகையுடன் தனது கதிரையில் வசதியாக உட்கார்ந்திருந்தாள்.

பஸ் புறப்படப் போவதாக ஸலாமாவின் காதுக்குள் அவளது அயல் வீட்டுப் பெண் மெதுவாகச் சொன்னாள். ஒரு போதும் இடுப்பு வலியால் பாதிக்கப்படாதவள் போல் ஸலாமா சட்டெனக் கதிரையை விட்டெழுந்தாள். நேரே மணமேடைக்குச் சென்று மணமகளின் தலையின் மேல் கையை வைத்தாள். மிகுந்த பணச் செலவில் செய்யப் பட்ட சிகையலங்காரம் சிதைந்து விடுமோ என்று மணமகள் கவலைப்பட, ஸலாமா மெல்லிய குரலில் ஃபாத்திஹா[7] ஓத ஆரம்பித் தாள். ஓதி முடிந்ததும் பத்து முறை மணமகளாகப் பயின்ற அதே நடையுடன் விருந்தினர்களுடன் கலந்து பஸ் நிறுத்தியிருந்த இடம் நோக்கிச் சென்றாள். □

1. ஹல்வா - ஓமானிய இனிப்பு வகை - சீனி. பாதாம். ஏலம் ஆகியன கலந்து செய்யப்படுவது.

2. இக்ஃபா - நல்லெண்ணெய். கஸ்தூரி. கற்பூரம். மலர்கள். மூலிகைகள் மற்றும் பல்வேறு வாசனைத் திரவியங்கள் கலந்து செய்யப்பட்ட எண்ணெய் இடப் பட்டுத் தலை மயிர்கள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுச் செய்யப்படும் பாரம்பரிய ஓமானிய சிகையலங்காரம்.

3. ஃபலாஜ் - ஓமானிய நீர்க் கால்வாய்த் திட்டப்பகுதி.

4. அடிட - மேற்கையில் அணியப்படும் ஓமானியப் பாரம்பரிய நகை.

5. மண்டூஸ - ஏறக்குறைய அலுமாரி போன்ற பாரம்பரிய ஓமானிய வகைப் பெட்டி.

6. இந்தியன் - ஓமானிய மணப் பெண்களை விட இந்தியப் பாரம்பரிய மணப் பெண்ணுக்கு மணமகன் திருமணத்தின் போது கொடுக்கும் பணம் குறைவானது.

7. ஃபாத்திஹா - அல்குர்ஆனின் முதலாம் அத்தியாயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓமர் எல் கித்தி

கவிஞரும் சிறுகதையாளருமான ஓமர் அல் கித்தி லிபியாவில் 1959ல் பிறந்தவர். உயிரியல் மற்றும் இரசாயனம் கற்பித்து வந்த இவர் பத்திரிகைத் துறையில் கவனத்தைத் திருப்பினார். அல் ஜமாஹிரியா பத்திரிகை யின் இலக்கியப் பகுதியை ஆரம்பித்து அப்பகுதியின் பொறுப்பாசிரியராக இயங்கிய இவர் 1992ல் அப்பத்தி ரிகையின் பிரதம ஆசிரியரானார். பின்னர் 'அல் ஃபுஸூல் அல் அர்பஉ' என்ற இலக்கியச் சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியராகச் செயற்பட்டார்.

இவரது கவிதைத் தொகுதி லிபிய அரசினால் தடை செய்யப்பட்டது. 1999ம் ஆண்டு லிபியாவை விட்டுச் சென்ற இவர் தற்போது நெதர்லாந்தில் வசித்து வருகிறார். இவரது சில படைப்புக்கள் டச். பல்கேரிய மற்றும் ஆங்கில மொழிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. Sabi ala al Saith என்ற அவரது தொகுதியிலிருந்து பெறப்பட்ட இக்கதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் Ghenwa Hayek.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுநாள் சிறைவாசி

இடை நிலைக் கல்விப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய பின், சாலிஹ் அல் ஷயா:பி இராணுவத்தில் சேர்வது என்று தீர்மானித்தான்.

அவனது கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களும் அயல் கிராமத்து ஆண்களும் இராணுவத்தில் இணைந்த பின்னர் புதிய ஆடைகளோடும், பை நிறையப் பணத்தோடும் கைகளில் அழகிய, புதிய கடிகாரங்களோடும் ஊருக்குத் திரும்புவதையும் சிகரட் பெட்டிகளிலிருந்து சிகரட்டுகளை உருவித் தங்க நிற லைற்றர்களால் பற்ற வைத்துக் கொள்வதையும் அவன் கண்டிருக்கிறான்.

அவர்களைப் போலவே தானும் இராணுவத்தில் சேர விரும்பினான். தன்னையும் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளக் கோரி விண்ணப்பித்திருந்தான். அடிப்படைப் பயிற்சியின் பின்னர் அவன் தருஜா இராணுவ முகாமுக்கு அனுப்பப்பட்டான். இரண்டு வருடங்களின் பின்னர் ஏற்கெனவே ஒருவர் பயன்படுத்திய, பச்சை நிற 'டெட்ஸன் - 120' கார் ஒன்றை அவனால் வாங்க முடிந்தது. திரிப் போலி நகரத் தெருக்களில் அந்தக் காரை வைத்துக் கொண்டு குமரி களுக்கும் பெண்களுக்கும் தொல்லை கொடுக்க ஆரம்பித்தான்.

1972ம் ஆண்டில் ஒரு நாள் அந்தலூஸியா தெருவில் உடல் முழுக்க மறைக்கும் ஃபிர்சியா என்ற வெண்ணிற ஆடையில் அவன் ஓர் அழகிய பெண்ணைக் கண்டான். காருக்குள் இருந்த அவனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மை தீட்டப்பட்ட அவளது ஒரு கண்ணையும் மிக நேர்த்தியாகச் சிரைக்கப்பட்ட புருவத்தையும் பக்கவாட்டில் காண முடிந்தது. காரை மெதுவாகச் செலுத்தியபடி அவளருகில் சென்று தலையை காருக்கு வெளியே நீட்டி "ஹலோ.... இங்கே கொஞ்சம் பார்க்க முடியாதா... ஹேய்..." என்று கேட்டான். அவளோ அவனைப் பார்க்கவுமில்லை, ஒரு பொருட்டாக மதிக்கவுமில்லை.

தெருவில் அழகிய பெண்களைக் கண்டால் அவன் இப்படித் தான் ஒரு வகையான மனத் தடுமாற்றத்துக்குள்ளாகி விடுவான். பிறகு சரசமாடவும் வழியவும் ஆரம்பிப்பான். இவ்வாறு அவன் காரைச் செலுத்திக் கொண்டு பிரதான புரட்சிப்படையின் தலைவரும் உள்துறை மற்றும் நீதியமைச்சரும் புரட்சிக் கவுன்சிலின் அங்கத்த வருமான ஜெனரலின் வீட்டைத் தாண்டிக் கொண்டிருப்பதை அறியவில்லை. அமைச்சரின் நான்கு மெய்ப்பாதுகாவலர்கள் அவனை வாகனத்தை நிறுத்தப் பணித்தார்கள். அவர்கள் அப்பெண் ணின் உறவினர்கள் என்றுதான் அவன் நினைத்தான். காருக்குள் இருந்த தனது துப்பாக்கியை எடுத்துக் கொண்டு அவர்களை நெருங்கினான். இதற்கிடையில் அந்தப் பெண் அவ்விடத்துக்கு வந்து விட்டாள். அந்த இடத்தில்தான் அவளது மயக்கும் அழகை அவன் பார்த்தான். கோபமான முகத்துடன் கைகளை விசுக்கி, விசுக்கி அவளுடைய சங்குக் கழுத்தை அசைத்தபடி அவள் பேசினாள்.

> "இவன் அரை மணித்தியாலத்துக்கும் மேலாக என்னைத் தொந்தரவு படுத்திக் கொண்டு வருகிறான். வெட்கங் கெட்டவன்!"

அவள் தலையசைத்துப் பேசிக் கொண்டிருக்கையில் அவள் காதில் அணிந்திருந்த ஒரு காதணி கீழே விழுந்ததை சாலிஹ் பார்த் தான். மெய்ப்பாதுகாவலர்கள் அவனைத் தள்ளித் தரையில் வீழ்த்திப் பின்புறமாக அவனது கரங்களில் கைவிலங்கிட்டனர். அதற்குள் அவளது காதணியை அவன் கையில் எடுத்துக் கொண்டான்.

வீட்டுக்கு முன்னால் ஏதோ குழப்பம் நடப்பதை அறிந்த அமைச்சர் வெளியே வந்து அவருடைய மாளிகையின் மேற்படியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று அவதானித்தார். அவர் வெண்ணிற அராபிய மேலாடையும் வெண்ணிறப் பருத்தித் தலைப்பாகையும் கறுப்பு நிறத் தோற் செருப்பும் அணிந்திருந்தார். அவனைச் சிறைக்கு அனுப்புமாறு தனது மெய்ப் பாதுகாவலர்களுக்கு உத்தரவிட்டார்.

காலனித்துவ ஆட்சியாளர்களால் 'போர்ட்டா : பெனிட் டோ' என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்ட சிறைச்சாலை இப்போது 'கறுப்புக் குதிரைச் சிறை' என அழைக்கப்படுகிறது. அங்குதான் அவன் கொண்டு செல்லப்பட்டான். இலகுவில் திருப்திய டையாத ஒரு பொலிஸ் அதிகாரி, சிறைக் கூடத்தில் சாலிஹிடம் இருந்த பொருட்களைச் சரிபார்த்துப் பொறுப்பெடுத்தார். அவனிட மிருந்த பணத்தை எண்ணி 8.36 பவுண்கள் என்று எழுதிக் கொண்டு பணத்தை நீண்ட மஞ்சள் நிற உறைக்குள் போட்டுக் கொண்டார். அவனது அடையாள அட்டை, இராணுவ அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், இடுப்புப் பட்டி, சப்பாத்துக் கட்டும் நூல்கள் ஆகியவற்றையும் அவ்வுறைக்குள் இட்டார்.

அவனிடமிருந்த காதணியை உறைக்குள் போடுவதற்கு முன் அதைக் கைகளில் வைத்துப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். புருவத் தைச் சுருக்கித் தலையைச் சாய்த்து ஒரு கேள்விப் பார்வையை அவன் மீது செலுத்தினார். "இது என் தாயார் அணிந்திருந்தது... அவரு டையது," என்று சொன்னான் சாலிஹ். பொலிஸ்காரர் உதட்டைக் குவித்துச் சுருக்கியபடி அதையும் உறையுள் இட்டு உறையை நாக்கால் நக்கி ஒட்டி அதில் சீல் வைத்தார். அதன் மீது சிறைவாசியின் பெயர், திகதி, நேரம் ஆகியவற்றை எழுதினார்.

சிறையில் உள்ள பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர் களுடன் சாலிஹ்'ம் ஒருவனாக இணைந்தான். வாகன விபத்துக்களை ஏற்படுத்திச் சிலரைக் கொன்றும் பலரைப் பெரியாஸ்பத்திரியின் அவசரச் சிகிச்சைப் பிரிவில் சேர்க்கவும் காரணமான நால்வர் அங்கிருந்தனர். மதுவருந்தி விட்டுப் பொதுவிடத்தில் கலாட்டா பண்ணிய ஒரு கறுப்பினத்தவனும் அங்கிருந்தான். நாளை மக்கள் முன்னிலையில் அவனது பின்புறத்தில் 40 சவுக்கடிகள் வழங்கப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அவன் விடுதலை செய்யப்படவிருந்தான். அதை நினைத்துப் 'பரவாயில்லை... பரவாயில்லை... இது முதல் தரமில்லையே!' என்று அவன் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தான்.

மனைவி, பிள்ளைகள் சகிதம் அடிபிடியில் ஈடுபட்ட அயல் வீட்டுக்காரர்களான குடும்பத் தலைவர்கள் இருவரும் கூட அங்கிருந் தனர். ஏனைய கைதிகள் தலையிட்டு அவர்களுக்கிடையில் ஒற்று மையை ஏற்படுத்தியிருந்தனர். நடைபெற்ற குடும்பச் சண்டைக்காக அவர்களிருவரும் தமக்கிடையே வருத்தத்தைப் பகிர்ந்து கொண் டதை சாலிஹ் அங்கு வந்த போது பார்த்தான். அவர்களில் ஒருவன் சொன்னான்:-

"இறையுதவியால் நாம் இருபது வருடங்களுக்கும் மேலாக சகோதரர்களாக வாழ்ந்தோமே... இது நிச்சயமாகக் கெட்ட ஆவிகளின் செயல்தான்... இனிமேலும் இப்படித் தீங்குகள் ஏற்படாமல் இறைவன்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்"

அதைக் கேட்ட மற்றவன் சொன்னான்:-

"பெண்களின் சொல்லைக் கேட்டால் இப்படித்தான் நடக் கும். கடைசியில் அது நம்மைச் சிறையில்தான் கொண்டு வந்து விட்டுள்ளது!"

இவர்களது உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த குடிகாரன் சொன்னான்:-

"அது பிசாசு இல்லை... தேள்! உங்க இரண்டு பேருக்குமிடை யில் பிடித்திருப்பது தேள்!"

அந்த இருவரில் கொஞ்சம் முரட்டுத் தனமான ஆசாமி கோபத்தில் பக்கத்தில் கிடந்த இரும்புக் கம்பியை எடுத்து குடி காரனின் தலையில் அடித்தான். அவனுடைய மண்டை வெடித்து இரத்தம் வழிந்தது.... முரட்டு ஆசாமி கோபம் அடங்காமல் உறுமினான்:-

"சத்தியமாக உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்!"

நாட்டு எல்லையில் பதுங்கியிருந்து அகப்பட்ட ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியுனீசிய நாட்டவனை ஓர் ஒடுக்கமான சிறைக்குள் அடைத்து வைத்திருந்தார்கள்.

"நீ எதற்காக இங்கு கொண்டு வரப்பட்டாய்?"

அச்சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்கள் சாலிஹிடம் கேட்டார்கள். ஒரு பெண்ணைத் தொந்தரவு செய்தமைக்காக என்று சொல்வதற்கு அவன் வெட்கப்பட்டான். எனவே வேறு எந்த விபரங்களும் இல்லாமல் "ஒரு சண்டை!" என்று பதில் சொல்லி முடித்துக் கொண்டான்.

அடுத்த நாள் சாலிஹ் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி முன் கொண்டு வரப்பட்டான். அந்த அதிகாரி மிகவும் பருமனாய் இருந்தார். முகத்தில் சின்னதாய் ஒரு மீசை. கன்னக் கதுப்புகள் உப்பிப் போய்த் தாடைக்குக் கீழே தொங்கிக் கொண்டிருந்தன. அவன் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை அவர் சாலிஹிடம் கேட்டார். அவருக்கு எதையும் மறைக்காமல் முழுக் கதையையும் அவன் சொன்னான். அவர் சொன்னார்: -

"இது சிறு குற்றம்தான். பத்து நாட்களுக்குப் பின் நீ விடுதலை செய்யப்படுவாய்!"

பத்து நாட்கள் கழிந்தன. பிறகு மற்றொரு பத்து நாட்கள். பிறகு இரண்டு மாதங்கள். சிறைக் கைதிகள் வெளியே சென்றார்கள், உள்ளே வந்தார்கள். சாலிஹ் அங்கேயே இருந்தான். வசந்தம் கழிந்து கோடை பிறந்தது. அவனது விடயம் பற்றிச் சிறைச்சாலைப் பொறுப் பதிகாரி பல கடிதங்களை அமைச்சுக்கு எழுதினார். ஆனால் அவற் றுக்கு எந்தப் பதிலையும் அவர் பெற்றுக் கொள்ளவில்லை. அமைச்சு அலுவலகத்துக்குப் பல முறை அவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். கடைசியாக அவர் தொடர்பு கொண்ட போது, அமைச்சரின் செயலாளர் கேட்டார்: -

"நீர் என்ன... அவனைத் தோளிலா சுமந்து கொண்டி ருக்கிறீர்?"

சாலிஹ் ஒன்றில் விடுதலை செய்யப்பட வேண்டும். இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்றால் அவன் மனோநிலைப் பாதிப்புக்குள்ளாக நேரும் என்று சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி உணர்ந்தார். அவனுக்காக அவர் இரக்கப்பட்டார். எனவே இந்தத் தற்காலிகத் தடுப்புச் சிறையிலிருந்து நீண்ட காலச் சிறைவாசிகள் இருக்கும் சிறைக்கு அவன் செல்வது நல்லது என்று எண்ணி அவனுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

புதிய சிறைச்சாலை முற்றத்தில் அவனது அயற் கிராமத்தைச் சேர்ந்த அவனது ஆரம்பப் பள்ளித் தோழர்கள் சிலரைக் கண்டான். அவர்களில் ஒருவன் இஸ்லாமிய விடுதலைக் கட்சியில் சேர்ந்த பின்னர் கிராமத்திலிருந்து காணாமல் போயிருந்தவன். சாலிஹின் கதையைக் கேட்ட அவன், சிறையில் தமது கட்சிக்காரர்களுக்கென ஒதுக்கப்பட்ட பிரிவுக்குள் வந்து விடுமாறு கேட்டுக் கொண்டான். இஸ்லாமிய விடுதலைக் கட்சிக்காரர்களைப் பற்றி அவ்வப்போது அரசாங்கத்துக்குத் தகவல் கொடுக்கும் ஓர் ஒற்றனாக சாலிஹ் இருக்கக் கூடும் என்று கருதிய போதும் சிறைக்குள்ளிருந்த கட்சியின் தலைவர் அவனைத் தமது பிரிவுக்குள் இருக்க அனுமதித்தார்.

சாலிஹ் அவ்விடத்திலிருந்து அகன்றதும் தன்னைச் சூழ இருந்தவர்களிடம் தனது நீண்ட தாடியை வருடியபடி தலைவர் சொன்னார்: -

> "அவன் அப்படிப் பட்டவனாக இருந்தாலும் நல்லதுதான். அப்போதுதான் நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள முடியும். அறியாமல் இருப்பது தான் நமக்கு ஆபத்தானது!"

இஸ்லாமிய விடுதலைக் கட்சியினருக்கு ஒதுக்கப்பட்டிருந்த பகுதி மிகவும் துப்புரவாக இருந்தது. அவர்கள் யாவரும் மிகவும் நல்ல பண்புடையோராக இருந்தனர். தூய வெள்ளை மேலாடையும் தலையில் வெள்ளைச் சால்வைகளும் அணிந்திருந்தார்கள். நேர்த்தியாக மழிக்கப்பட்ட குறுந்தாடி வைத்திருந்தார்கள். அடிக்கடி உடற் சுத்தம் செய்யும் வழக்கம் கொண்ட அவர்களது உடலிலும் ஆடைகளிலும் கஸ்தூரி மணந்தது. ஒருவரோடொருவர் மெதுவாகவும் பணிவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் உரையாடினார்கள். இந்தச் சிறைப் பிரிவையும் பழைய துர் நாற்றம் வீசும் சிறையையும் சாலிஹ் ஒப்பிட்டுப் பார்த்த வேளை, இப்போது பிரவேசித்திருக்கும் சூழல் அவனைக் கவர்ந்திருந்தது.

அவனது முழுக் கதையையும் தெரிந்து கொண்ட பிறகு தலைவர் சொன்னார்: -

"நீ உனது இடைநிலைப் பாடசாலை டிப்ளோமாவை இவ்வருடம் எங்களோடு இணைந்து படித்து முடிக்க வேண்டும்."

அன்றிலிருந்து சாலிஹ் இஸ்லாமிய விடுதலைக் கட்சி அங்கத்தவர்களுடன் இணைந்து படிக்க ஆரம்பித்தான். ரமளான் காலத்தில் அவர்களுடன் இணைந்து அனைத்து வணக்க வழிபாடு களிலும் ஈடுபட்டான். லைலத்துல் கத்ர் இரவு வணக்கம், இரவில் குர்ஆன் ஓதி முடிந்ததும் கியாமுல் லைல் தொழுகை ஆகியவற்றிலும் ஈடுபட்டான். தலைவரைச் சுற்றி ஏனைய அங்கத்தவர்கள் அமரும் போது சாலிஹ் தலைவருக்கு முன்னால் அமர்ந்தான். மொத்தத்தில் அரசினால் தடைசெய்யப்பட்ட இஸ்லாமிய விடுதலைக் கட்சியின் ஒரு புதிய அங்கத்தவனாக அவன் இயங்கினான்.

□□□

பெருநாளைக்குச் சில நாட்களுக்கு முன் சாலிஹ் எங்கிருக் கிறான் என்பதை அவனது குடும்பம் கண்டறிந்தது. பெருநாள் கழிந்து மூன்றாவது நாள் சாலிஹின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அவனது பெற்றோரை அமைச்சரின் வீட்டுக்கு வாகனம் ஒன்றில் அழைத்துச் சென்றார். வீட்டுக்கு முன்னாலுள்ள வெளியில் அவர்களை அமைச்சர் சந்தித்தார். சாலிஹின் விடயத்தை அவனது பெற்றோர்கள் அமைச்ச ருக்குச் சொன்னதும் அவர் தனது ஒருகையிலும் நெற்றியிலும் மற்றக் கையால் அடித்துக் கொண்டார்.

சில மாதங்களுக்கு முன்னர் ஓர் இளைஞனைச் சிறையிடச் சொல்லிக் கட்டளையிட்டது அவருக்கு ஞாபகம் வந்தது. சாலிஹை விரைவில் விடுதலை செய்வதாக அவனது பெற்றோரிடம் அமைச்சர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குக் கொடுத்தார். அவர்கள் அமைச்சரின் நற்சுகத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் பிரார்த்தித்தபடி விடை பெற்றுச் சென்றார்கள்.

அமைச்சர் பெருநாளைக்குப் பின்னர் ஒரு நாள் சாலிஹின் விபரக் கோப்பைக் கொண்டு வரச் செய்து பார்வையிட்டார். தடை செய்யப்பட்ட இஸ்லாமிய விடுதலைக் கட்சியில் அவன் இணைந் திருப்பதை அறிந்து கோபத்துடன் அந்தக் கோப்பைத் தூக்கி வீசிவிட்டுச் சொன்னார்:-

"அவனை விடுதலை செய்யவே வேண்டாம்!"

சாலிஹ் இடைநிலைப் பாடசாலை டிப்ளோமாவை முடித் தான். இதற்கிடையில் சாலிஹ் விடுதலை செய்யப்படாமல் இருப்ப தற்கான காரணத்தைச் சிறைப் பொறுப்பதிகாரி கண்டு பிடித்தார். சாலிஹைத் தனது காரியாலய அறைக்கு அழைத்து நிலைமையை விளக்கினார். அங்கிருந்து தனது பிரிவுக்குச் சென்ற சாலிஹ் தனது பொருட்களை எடுத்துக் கொண்டு நேரே அமாஸிகளுக்கு ஒதுக்கப் பட்டிருந்த பிரிவுக்குச் சென்று சேர்ந்தான். அந்தப் பிரிவில் அவனது கிராமத்தையும் அயற் கிராமங்களையும் சேர்ந்த அமாஸிகள் இருந் தார்கள். அப்பிரிவிலிருந்த அல் சிஃபாவோவுக்கும் உரை:பிக்குமிடை யில் தனக்கான ஒரு படுக்கையை ஏற்படுத்திக் கொண்டான்.

அல் சிஃபாவோ குட்டையானவன். கட்டுமஸ்தான உடல மைப்பும் பெரிய தலையும் கொண்டவன். அவனுடைய முகத்தின் காற்பகுதியை அவனது பெரிய மீசை மறைத்திருந்தது. அவனது புருவ ரோமக் கற்றையின் நிழல் அவன் கண்களில் விழுந்தது. உடல் முழுவதும் ரோமங்கள் நிறைந்திருந்தன. அவன் தனது கரத்தில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தில் நேரம் பார்ப்பதென்றால் கூட கையிலுள்ள ரோமங்களை வாயால் ஊதி விலக்கி விட்டுத்தான் பார்ப்பான். உரை:பி, அல் சிஃபாவோவுக்கு நேர் எதிர்மாறான தோற்றம் கொண்டவன். இருவரும் ஒரே வயதினராக இருந்த போதும் உரை:பி மொட்டைத் தலையுடன் கூடிய மெலிந்த தோற்ற முடையவன்.

அமாஸிகளுடன் சேர்ந்திருந்த அவன் அவர்களது தமாஸிட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியையும் கற்க ஆரம்பித்தான். அமாஸிகள் மெது மெதுவாக தமது மொழியை அவனுக்குக் கற்பித்தனர். அம்மொழியைக் கற்ப தில் அவனுக்கிருந்த ஆர்வத்தைப் பார்த்த அவர்கள், சாலிஹ் அராபிய அமாஸிகளின் வழித்தோன்றல் என்றும் அவன் பாரம்பரியத்துக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள்.

அல் சிஃபாவோவையும் உரை:பியையும் கேலி பண்ணுவ தில் சாலிஹு"க்கு மிகவும் விருப்பம். இந்த உலகம் பாரபட்சங்களால் நிறைந்தது என்பதற்கான வாழும் ஆதாரங்களாக அல் சிஃபாவோவும் உரை:பியும் இருப்பதாகச் சொல்வான். சிஃபாவோ பிறந்த போது அங்கிருந்தவர்கள் ஒரு முள்ளம் பன்றி பிறந்திருக்கிறது என்று நினைத் தார்களாம் என்று சொல்வான். சிஃபாவோ தும்மினான் என்றால் ஒரு கும்பல் ரோமங்கள் கொட்டுவதாகவும் அவன் குசு விட்டானெனில் அது ஒரு யுத்த டாங்கியை வெளியில் விடுவதற்குச் சமம் என்றும் சொல்வான். சிஃபாவோ உட்பட அனைவரும் அவன் கேலி பண்ணு வதைக் கேட்டுச் சிரி சிரியென்று சிரிப்பார்கள்.

சிஃபாவோ மட்டும் தனது தமாஸிட் மொழியில் "சாலிஹ் மாமா... உங்களுக்கு இறைவனின் அருள் கிடைக்கட்டும்!" என்று சொல்லுவான்.

சாலிஹு"க்குப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை மேற் கொள்ளும் வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனால் கம்யூனிஸ்ட்டுகளை அவன் சந்தித்தபோது அவர்கள் பிற மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருப்பதையும் ஒருவருக்கொருவர் அம்மொழிகளைக் கற்றுக் கொள்ள உதவுவதையும் அவதானித்தான். அவர்களிடம் தனக்கு ஆங்கிலம் கற்பிக்குமாறு கேட்டுக்கொண்ட போது அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். இப்படித்தான் கம்யூனிஸ்ட்டுகளின் உலகுக்குள் அவன் நுழைந்தான். தானாகவே கம்யூனிஸ்ட் கைதிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த சிறைப் பகுதிக்குள் அவன் நுழைந்தான். சாலிஹ் மீது அனுதாபமுள்ள சிறைப் பொறுப்பதிகாரி, அவன் கம்யூ னிஸ்ட்டுகளுடன் இருப்பதைக் கண்ணுற்றதும் சிரித்துக் கொண்டே சொன்னார்: -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்போ சாலிஹ்... நீயும் வேற்று மதத்தான் ஆகிவிட்டா யாக்கும்!"

அவன் ஆங்கிலம் மட்டுமன்றி, பிரெஞ்ச், இத்தாலி ஆகிய மொழிகளையும் கற்றுக் கொண்டான். இந்த மொழிகளில்தான் அவன் மற்றவர்களுடன் பேசினான். அமாஸிகளுடன் மட்டும் தமாஸிட் மொழியில் பேசினான்.

கம்யூனிஸ்ட்டுகளின் கனதி மிக்க கவிஞர்கள், எழுத்தாளர் கள், நாடகாசிரியர்கள், நாவலாசிரியர்களால் அவன் கவரப்பட்டான். உள்நாட்டு அரசியல், சர்வதேச அரபு விவகாரங்கள் ஆகியவற்றைக் கவரத்தக்க முறையில் விரிவாக ஆராய்ந்து விடிய விடிய அவர்கள் பேசினார்கள். இவற்றை உள்வாங்கிய சாலிஹின் பயன்படுத்தப் படாத மூளையின் பாகங்கள் செயற்பட ஆரம்பித்தன. சிந்திப்பது எப்படி என்று அவன் கற்றுக் கொண்டான். புதிய நூல்கள் மீது அவர் கள் அவதானம் செலுத்தினார்கள். அவற்றைத் தர்க்க ரீதியாக அலசி ஆராய்ந்தார்கள். அவ்வப்போது திடீரெனப் பாடி ஆடத் தொடங்கு வார்கள். லெபனான் பாடகர் பைரூஸின் அனைத்துப் பாடல்களும் அவர்களுக்குத் தெரிந்திருந்தன. கூத்தும் கும்மாளமுமாக நாட்டுப் பாடல்களையும் பாடினார்கள்.

சாலிஹின் கவனம் சாதூன் மீதும் பதிந்தது. சாதூன் இத்தாலியில் பொறியியல் துறையில் கற்கும் போது லத்தீன் அமெரிக்க ட்ரொஸ்கிகளுடனும் பலஸ்தீன விடுதலைக்கான முன்னணி அமைப்பின் தலைவரான ஜோர்ஜ் ஹ:பாஷ்"டனும் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டவர். லிபியப் புரட்சிக்கு வாழ்த் துத் தெரிவிக்க வந்தபோது சாதூன் கைது செய்யப்பட்டார்.

சிறையில் இருந்த அவருக்கு மன அழுத்தம் அதிகரித்து அவ்வப்போது மூளைக் கோளாறு ஏற்பட்டது. இரண்டு மாதங்க ளுக்கு ஒரு முறை இந்நோய் அதிகரிப்பது வழமையாக இருந்தது. அவ்வேளைகளில் கறுப்பு நூல் வேலைப்பாடுகள் கொண்ட சிவப்பு மேலங்கியை அணிந்து கொண்டு அவர் நிறுத்தாமல் பேசிக்கொண்டி ருப்பார். ஏறு நெற்றியைத் தேய்த்துக் கொண்டு அவர் பேசத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினாரென்றால் கடைவாயில் நுரை தள்ளும். பல வருடங்களுக்கு முன்னர் அரபியில் அல்லது இத்தாலியில் அல்லது ஸ்பானிய மொழியில் அவர் படித்த நூல்களைப் பற்றிப் பேசுவார். ஜோர்ஜ் ஹ:பாஷ்' டன் பேசிக் கொண்டிருந்ததையும் அவருடன் மேற்கொண்ட நீண்ட கலந்துரையாடல்கள் பற்றியும் சிவப்புப் படையில் இணைந்த பல்கலைக்கழக மாணவர்கள் பற்றியும் சாதூன் தனது உரையில் சொல்லிக் கொண்டிருப்பார்.

எண்பதுகளின் ஆரம்பப் பகுதியில் புரட்சியாளர்களால் கட்டப்பட்ட :பஸ்லிம் சிறைக்கு அனைவரும் மாற்றப்பட்டார்கள். அரசியல் கைதிகளை மரியாதையுடன் நடத்திய வழமையான பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் அந்தப் புதிய சிறையிலிருந்து அகற்றப்பட்டுப் புரட்சித் தலைவருக்கு விசுவாசமான கோத்திரங்களைச் சேர்ந்த இராணுவப் பொலிஸார் கடமையில் அமர்த்தப்பட்டனர். அவர்கள் சிறைவாசிகளிடம் கோபத்தோடு நடந்து கொண்டார்கள். குறிப்பாக 'வேற்று மதத்தினர்' என்று கருதப்பட்ட கம்யூனிஸ்ட்டுகளிடம் கடும் சினம் காட்டினார்கள். முகத்தில் அறைவதன் மூலமும் தடிகள் மற்றும் பிளாஸ்டிக் தடிகள் கொண்டு தாக்குவதன் மூலமும் அவர்களைத் துன்புறுத்தினார்கள்.

திரிப்போலியின் பழைய நகர்ப்புறத்தைச் சேர்ந்த ஒரு கவிஞர் அங்கிருந்தார். அவர் எந்தக் கோத்திரத்தையும் சாராதவர் என்பதால் அவரை அதிகம் துன்புறுத்தினார்கள். 'இங்கு நாய்களுக்குக் கூடக் கோத்திரம் உண்டு. நீ கோத்திரம் இல்லாத நாய்' என்று அவரைப் பார்த்துச் சொன்னார்கள். சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டிருந்த தொலைக் காட்சி, வானொலிப் பெட்டி ஆகியன திடீரெனக் காணாமல் போயின. புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் யாவும் சிறை வாசிகளுக்குத் தடை செய்யப்பட்டன. குறிப்பாக கம்யூனிஸ்ட்டுகளின் சிறைப் பிரிவுக்குள்ளேயே இத்தடை அமுல்படுத்தப்பட்டது.

அதை விட மோசமான சட்டம் ஒன்று அமுல் படுத்தப்பட்டது. அதுதான் வெளியார், சொந்தக்காரர்களுக்குச் சிறைவாசிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைச் சந்திக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டதாகும். சாலிஹ் அல் ஷயா:பி அவனது பெற்றோர்களை அதன் பிறகு சந்திக்கவே இல்லை. அவர்கள் மரணித்துப் பல மாதங்கள் கடந்த பின்னர்தான் பத்திரிகை கள் மூலம் செய்தி தெரிய வந்தது.

புதிய சிறையில் ஜன்னல்கள் ஒடுக்கமானவையாக இருந்தது டன் உயரத்திலும் அமைக்கப்பட்டிருந்தன. அச்சிறைக்குள் கோடை காலம் என்பது நரக வேதனைதான். அக்காலத்தில் ஜன்னலூடாக வரும் கொஞ்சம் காற்றுக்காக அதற்குப் பக்கத்தில் ஆள்மாறி ஆள் நிற்பது வழக்கமாகி விட்டிருந்தது. கடும் வெப்பம் நிலவிய ஓர் இரவில் சாலிஹ் சொன்னான்: -

"செப்டம்பர் புரட்சியாளர்களை விடவும் 'கறுப்புக் குதிரை'ச் சிறையைக் கட்டிய இத்தாலியப் பாஸிஸ்டுகள் கருணையுள்ளவர்கள்."

இதைக் காதில் வாங்கிய சாதூன் இயல்பாகச் சிரித்து விட்டுச் சொன்னார்: -

"பயல்கள் இப்போதுதான் எல்லாவற்றையும் பழக்கப்படுத் திக் கொள்கிறார்கள்!"

உண்மையில் சாலிஹ் விடயத்தில் அது மிகச் சரியாக இருந்தது. அவன் இவ்வாறு சிறிது காலம் கம்யூனிஸ்ட்டுகளுடன் இருந்து விட்டுத் தான் தனித்து விட வேண்டும் என்று விரும்பினான். அதற்குக் காரணம் அவனது படுக்கைக்கு அடுத்த படுக்கைக்குரிய வனாக இருந்த அவனது ஆலோசகன். பெங்காஸி பல்கலைக்கழகத் தில் தத்துவ ஞானம் படித்துக் கொண்டிருந்த வேளை அவன் கைது செய்யப்பட்டான். பன்னிரண்டு வருடங்களுக்கும் மேலாக மிகச் சிறந்த நாடகங்களை மேடையேற்றி வந்தவன் அவன். மிகவும் நுட்பத் திறனுடைய இந்த நாடகங்களுக்காகவே அவன் சிறைக்கு வர நேர்ந்தது.

இந்தக் கைதிகள் எவரும் உண்மையான கம்யூனிஸ்ட்டுகள் அல்லர் என்று அவன் சாலிஹுக்குச் சொல்வான். கம்யூனிஸ்ட்டாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பது ஒரு நாகரிகத்தனம் என்று நினைத்துப் பலர் இதில் சேர்ந்திருக்கிறார்கள். ஆர்ப்பாட்டங்களில் பங்கு கொண்டு கைதானவர்களும் கூடத் தம்மைக் கம்யூனிஸ்ட்டுகள் என்று அழைத்துக் கொண்டார்கள். புத்திஜீவிகளுடன் சேர்ந்திருந்த சில எதிரிகளையும் அரசு தேடிக் கொண்டிருந்தமையால் வேறு வழியில்லாமல் அவர்களெல்லாம் கூடக் கம்யூனிஸ்ட்டுகளாகவே அடையாளப்படுத்தப்பட்டு விட்டார்கள் என்று அவன் சொல்வான்.

முடிவுறாத துர்க்கனவுகளால் அல்லலபடும் அவனை ஒவ்வொரு இரவும் சாலிஹ் தட்டி எழுப்பி விடுவது வழக்கமாக இருந்தது. எலும்பும் தோலுமான தோற்றத்தைக் கொண்ட அவன் இரண்டாக மடிந்து உறங்குவான். அவனது இரத்தவோட்டம் தடைப்படும் போது மரத்துப் போன தனது கைகளை நீட்டி நெட்டுயிர்க்க முயல்வான். இந்த வேளைகளில் சாலிஹ் எழுந்து அவனது கரங்களைச் சரிப்படுத்தி விடுவான். அப்போது அவன் கண் விழித்துப் புரிந்து கொள்ள முடியாத வார்த்தைகளில் சாலிஹுக்கு நன்றி சொல்லிவிட்டு மறுபடியும் உறங்கிப் போவான். இவ்வாறு பல முறை செய்து வந்த சாலிஹுக்கு ஒரு சிறு நாடகம் எழுதும் எண்ணம் தோன்றிற்று.

இது பற்றி அவன் யாருக்கும் மூச்சு விடவில்லை. எந்த வித ஒளிவு மறைவுமின்றி அந்த நாடகத்தை அவன் இரகசியமாக எழுதத் தொடங்கினான். அந்த நாடகம், அரூபமான ஒன்று எதிரியைத் தாக்குகின்ற துர்க்கனவுகள் பற்றிய பிரபல்யமான புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டது. இதனால்தான் துர்க் கனவுகள் உடலைத் தாக்குகின்றன என்று பொதுவான ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் அந்தத் தாக்குதலின் போது தாக்கப்படுபவர் தனது கரங்களைச் சரியான வேகத்தில் நீட்டுவாராக இருந்தால் துர்க்கனவுகள் பற்றிப் பேசும் புராணக் கதையின் அரூபம் அணிந்திருக்கும் மேலங்கியைக் களவாடிக் கொள்ள முடியும். அதனை அணிபவர்கள் அரூபி ஆகி விடுவார்கள்.

நாடகத்தின் பிரதான பாத்திரமான சிறைக் கைதி அரூபியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலங்கியைக் கைப்பற்றி அணிந்து கொண்டு அரூபியாக மாறிச் சிறையிலிருந்து தப்பி விடுகிறான். சிறைக் கைதிகள் மிக நீண்ட காலமாகத் தெரிந்திராத பல வெளியுலகச் செய்திகளுடனும் கண்டிராத பல பொருட்களுடனும் அவன் திரும்பி வருகிறான் என்பதே சாலிஹின் நாடகக் கதை.

ஒரு நாள் இரவு புதிய கதைகள் வாசிக்கப்பட்டுப் புதிய கவிதைகள் படிக்கப்பட்ட பின்னர் எல்லோரும் ஆச்சரியப்படும் வண்ணம் சாலிஹ் எழுந்து நின்றான். அவனது நாடகக் கதையைக் கூடியிருந்தோருக்கு நடித்துக் காட்ட ஆரம்பித்தான். தொடங்கும் போது பரிகாசமும் குத்தலும் நிறைந்த வார்த்தைகளை அவன் பயன்படுத்தினான். அவற்றை அவசரமாக முடித்துக் கொண்டு அவன் தொடர்ந்த போது அனைவரும் ஆடாமல் அசையாமல் அவனில் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். கடைசி வார்த்தையை அவன் முடித்ததும் பலமான கரகோஷம் எழுந்தது. அவர்களது அனுபவங் களை எதிரொலிப்பதாகவும் சிறையிலிருந்து தப்பிச் செல்லும் சிறைவாசிகளின் ஆசையை வெளிப்படுத்துவதாகவும் அது அமைந் திருந்தமையால் அவனருகே சூழ்ந்து நின்று புகழ்ந்து தள்ளினார்கள். இவ்வளவும் கண்ணுக்குத் தெரியாத ஓர் அங்கியின் கீழ்தான் (இரகசியமாகத்தான்) நடந்தேறின.

□□□

நாடகங்களில் ஆர்வமுள்ள ஒரு நவீன கவிஞர் சாலிஹின் நாடகத்தை மேடையேற்ற விரும்பினார். தனது பிரிவிலுள்ள சிறைக் கைதிகளிலிருந்து பொருத்தமானோரைத் தேர்வு செய்தார். அந் நாடகத்தில் ஒருவர் பெண் வேடத்திலும் நடிக்க வேண்டியிருந்தது. நாடகக் குழுவைப் பயிற்றுவிப்பதிலும் மேடையமைப்புக்கான சுத்திகரிப்பு வேலைகளிலும் அவர் மிகக் கடுமையாக உழைத்தார். சக கைதிகளில் தொழில் நுட்ப அறிவு கொண்டவர்கள் தாமாக முன் வந்து அவருக்கு உதவி செய்தனர். ஏழ்மையும் நெருக்கடியும் நிறைந்த அவர்களது சிறையுலகில் உள்ளவற்றைத் தேவைக்குரிய முறையில் மாற்றியமைத்துக் கொடுத்தார்கள். இதனால் மின் வசதி பெறுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு இலகுவாக இருந்தது. தமது கட்டில்களின் சட்டகங் களைக் கொண்டு மேடையை அமைத்தனர். மாரிக் காலத்தில் ஒரு மழை இரவில் அந்த நாடகம் அரங்கேறிற்று. அன்று சாலிஹ் ஒரு நாடகாசிரியன் என்ற நிலையை எய்தி விட்டான்.

இதற்கு முன்னர் 'நௌபிர்' பத்திரிகையாசிரியர் இந்த நாடகத்தைத் தனது பத்திரிகையில் வெளியிட விரும்பினார். வெள்ளிக் கோடிடப்பட்ட சிகரட் பெட்டிகளிலிருந்து உரித்தெடுக் கப்பட்ட தாளில் வெளிவரும் கையெழுத்துப் பத்திரிகை இது. ஒவ்வொருவரும் தாம் பயன்படுத்தும் சிகரட்டுகளின் வெற்றுப் பெட்டியை ஒரு விசேடமான இடத்தில் வைக்க வேண்டும். அவற்றில் உள்ள ஈயத்தாளின் மறுபக்கமுள்ள வெள்ளைத் தாளைக் கண்ணாடி யணிந்த பருத்தவரான பத்திரிகையாசிரியர் மிக உன்னிப்பான கவனத்துடன் பிரித்தெடுப்பார். சமையலறையிலிருந்து வீசப்படும் கார்ட்போர்ட் பெட்டிகளிலிருந்து கிழிக்கப்பட்ட அட்டைகளில் அவர் உரித்தெடுத்த தாளை ஒட்டியெடுப்பார்.

பிறகு செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், சித்திரக்காரர்களை ஒன்றிணைத்துக் கொள்ளுவார். அவர்களில் ஒருவர் திறமை வாய்ந்த கேலிச் சித்திரக்காரராகவும் மற்றொருவர் எழுத்துச் சித்திரக்காரராக வும் இருந்தனர். 'நௌபிர்' பத்திரிகையின் ஓர் இதழ் பல கார்ட் போர்ட்டுகளில் வெளிவரும். சிறைக் கைதிகள் அவற்றை ஒவ் வொருவராக வாசிப்பார்கள். எல்லோரும் வாசிக்கும் வரை பத்திரிகையானது கட்டில் மெத்தைகளுக்குக் கீழே ஒளித்து வைக்கப் பட்டிருக்கும்.

பழைய இதழில் ஒரு விடயத்தைப் படிக்க வேண்டிய தேவை யாருக்காவது ஏற்பட்டால் அவர் கதவின் இடது புறத்திலிருந்து துவங்கும் முதலாவது கட்டிலின் மெத்தையின் கீழிருந்து துவங்கிக் கடைசியில் உள்ள கட்டில் மெத்தை வரை தேடவேண்டியிருக்கும்.

சகல கம்யூனிஸ்ட் கைதிகளுக்கும் நீதி மன்றம் மரண தண்டனை விதித்திருந்த போதும் பின்னர் அது ஆயுள் தண்டனை யாகக் குறைக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கைதிகளும் கூட அவரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களுக்கேற்பக் குழுக் குழுவாகப் பிரிந்தேயிருந்தனர். நீண்ட காலம் சிறையில் இருந்த அவ்வாறான ஒரு குழு ஆறு பேரைக் கொண்டது. அவர்களில் மூவர் சகோதரர்கள். மற்றைய மூவர் அவர் களது மருமகன்மார். அவர்களில் பலர் இரண்டாம் நிலைப் பாடசாலைக் கல்வி நிலையிலும் இளையவர் நடுத்தரப் பாடசாலைக் கல்வி நிலையிலும் உள்ளவர். இவர்கள் அறுவரும் மார்க்ஸிஸ்ட் கட்சியை ஆரம்பிக்க முடிவெடுத்தனர். அநேகமாக அதுவே நாட்டின் முதலாவதும் கடைசியானதுமான கம்யூனிஸக் கட்சியாக இருந்தது.

ஆரம்பத்தில் இவர்கள் ஒரு சிறிய குடும்பத்துக்குச் சொந்த மான தோட்டத்துக்குள் இருந்த தகரக் கொட்டகைக்குள் சந்தித்துக் கொண்டனர். இந்தத் தகரக் கொட்டகை இரண்டு பசு மாடுகள் அடைத்து வைக்கப் பயன்பட்ட இடம். உள்ளூர் நூலகத்தில் பெற்றுக் கொண்டு வந்து தங்களுக்குள் இரகசியமாகப் பகிர்ந்து கொள்ளப்பட்ட நூல்கள் மூலம் மார்க்ஸ், லெனின் ஆகியோர் இந்த இளைஞர்களைக் கவர்வதற்கு முன்னர் அந்த இரண்டு பசுக்களும் விற்கப்பட்டிருந்தன.

இவர்கள் அனைவரும் இணைந்து ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கினார்கள். ஒரு றோணியோ இயந்திரத்தைத் திருடிக் கொண்டு வந்து அவர்களது முதலாவது கொள்கை விளக்கத்துடன் அரசின் பிற்போக்குத்தனங்களையும் விமர்சித்துப் பிரசுர மொன்றை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

றோணியோ இயந்திரத்துடனும் எஞ்சிய துண்டுப் பிரசுரங்க ளுடனும் திரிப்போலியிலிருந்து 45 மைல்கள் தூரத்திலிருந்த இவர்களைப் பிடிப்பது ஒன்றும் பொலிஸாருக்குச் சிரமமாக இருக்கவில்லை. மீண்டும் இவ்வாறான காரியங்களில் ஈடுபட மாட்டோம் என்ற உறுதி மொழியை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட பின்னர் அடுத்த தினமே பொலிஸார் அவர்களை விடுவித்திருந்த போதும் இந்தக் குற்றச் செயல் பொலிஸ் பதிவிலி ருந்து நீக்கி விடப்படாமல் அப்படியே இருந்தது. சில வருடங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஏற்பட்ட இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டார்கள். சாலிஹ் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்துக்குப் பின்னர் இந்தக் கைது நடந்தது. எவ்வாறு அவர்கள் தனி நபர்களாக இருந்தார்களோ அவ்வாறே மார்க்ஸிஸ்டு கள் பல்வேறு அணிகளாகத் தமக்குள் பிரிந்து கிடந்தார்கள். இவர்களால் செம்மையாக அடிவாங்கிய காரணத்தால் எந்த அணி யில் இணைவது என்று தெரியாமல் ஒருவன் இருந்தான். அவன் அல்பேனியத் தலைவர் அன்வர் ஹொக்ஸாவைப் பின்பற்றுவது என்று முடிவு செய்தான். சிறைக்குள் இவர்கள் தமக்கெனத் தனித் தனிக் கொள்கைகளோடு இருந்த போதும் எல்லா விடயங்களிலும் ஆளுக்கு ஆள் உதவி செய்பவர்களாக இருந்தார்கள்.

1976ம் ஆண்டு பல மாணவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். துர்க் கனவுகளால் அவதி யுறும் நாடகக்காரனும் அவர்களில் ஒருவன். திரிப்போலி மற்றும் பெங்காஸி பல்கலைக்கழகங்களில் இவர்கள் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தார்கள். ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்டிருந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைக் கலைத் தமைக்காகவும் ஏற்கெனவே நடைமுறையில் இருந்த அரசியல் யாப்பை ஒதுக்கி விட்டுப் புதிய இராணுவ அரசுக் கொள்கையை அமுல் செய்தமையைக் கண்டித்தும் பழைய அரசியல் யாப்பை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரக் கோரியும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தார்கள்.

இந்த ஆர்ப்பாட்டங்களின் போது மாணவர்களுக்கும் கலகமடக்கும் பொலீஸாருக்குமிடையில் வன்முறை வெடித்தது. ஆர்ப்பாட்டக்காரர்களுக்குள் மாணவர்களைப் போல் மாறுவேடத் தில் இருந்த இராணுவத்தினராலும் பாலைவனப் பிரதேசங்களி லிருந்து அழைத்து வரப்பட்ட அரசுக்கு ஆதரவான இனக் குழுவின ராலும் பல்கலைக்கழக வளாகங்களுக்குள் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை வகித்த மாணவத் தலைவர்களைத் தூக்கிலிட்டதுடன் ஆர்ப்பாட்டங்கள் முடிவுக்கு வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிப்போலிப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் கல்லூரிக்கு வெளிப்புறமாக ஒருவருக்கும் பெங்காஸியில் ஆர்ப்பாட்டத்தின் போது மாணவர்களால் தீயிட்டு எரிக்கப்பட்ட அரபு சோஷலிஸக் கட்டட முன்றலில் மற்றொருவருக்கும் தூக்குமேடைகள் அமைக்கப் பட்டுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஏனையோர் அரசுக்கெதிராகச் சதியில் ஈடுபடும் கம்யூனிஸ்ட்டுகள் எனக் கருதப் பட்டுக் கைது செய்யப்பட்டனர்.

புத்திஜீவிகள் மற்றும் எழுத்தாளர்களது எழுத்தாக்கங்கள் பிரசுரிக்கப்பட்ட 'உஸ்:பு தௌஃபீக்கி' சஞ்சிகை 1978ம் ஆண்டு வெளியாயிற்று. ஏனைய அனைத்துக் கொள்கைகளையும் விடத் தம்மைக் கவர்ந்த சமூக யதார்த்தவாதக் கருத்துக்களை அவர்கள் அச்சஞ்சிகையில் எழுதியிருந்த காரணத்தால் அவர்களைக் கம்யூனிஸ்ட்டுகள் என அடையாளப்படுத்துவது இலகுவாக இருந்தது. நவீன கவிதைகளின் முன்னோடிக் கவிஞரது மறைவின் 12வது வருடாந்த ஞாபகார்த்த நிகழ்வை நடத்திக் கொண்டிருக்கும் போது புரட்சிக் குழுவின் அங்கத்தவர்களால் அவர்கள் பிடிக்கப்பட்டார்கள்.

இவர்களைக் கைது செய்த புரட்சிப் படையின் அதிகாரி எதிர்பாராத விதமாகப் புரட்சி அரசின் தலைவருடைய மைத்துனரானவர். அத்துடன் பல உயர் மட்டப் பதவிகளையும் அவர் ஏற்கவிருந்தார். நீதி மன்றத்தில் இவரிடம் நீதிபதி கேட்டார்:-

"தற்போதைய இராணுவப் புரட்சி அரசினை வீழ்த்த முனைவதற்கான ஆயுதங்களோ ஆவணங்களோ இந்த அமைப்பு வைத்திருந்ததற்கான ஆதாரங்கள் ஏதும் உள்ளனவா?"

தாடியுடன் கூடிய முகம் கொண்ட அந்த அதிகாரி பதில் சொன்னார்:-

"இவை அவர்களிடம் இருந்திருந்தால் உங்கள் முன் அவர்கள் இப்போது உயிருடன் நின்றிருக்க முடியாது"

நீதிபதி அவர்களுக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளித்தார். இத்தண்டனை பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக் கப்பட்டது.

இவர்களது நடவடிக்கைகளைக் கண்காணிக்கவென ஒரு ரகசியப் பொலிஸ்காரரும் கைதிகளோடு ஒரு கைதியாக இந்தக் குழுவுக்குள் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த வழக்கோடு சம்பந்தப்பட்ட வர்கள் எவரும் ஓர் அமைப்பைச் சார்ந்தவர்கள் அல்லர் என்றும் அவர்கள் எல்லோரும் புத்திஜீவிகள் என்றும் அவர்களிடம் இருப்ப தெல்லாம் பேனைகள் மாத்திரமே என்றும் அவர் நீதிமன்றில் சாட்சிய மளித்தார்.

இப்படிச் சொன்னதற்காக அவருக்கும் ஒரு தண்டனை கிடைத்தது. ஆயினும் அந்தத் தண்டனை குறித்து அந்தப் பொலிஸ் காரர் எந்தக் கவலையும் அடையவில்லை. இயல்பாகவே கலகலப் பாகவும் மகிழ்ச்சியாகவும் பழகக் கூடிய அந்தப் பொலிஸ்காரருடன் சாலிஹ் விரைவாகவும் பற்றுடனும் தனது நட்பை உண்டாக்கிக் கொண்டான். சிறைக்குள் இருந்த பல்வேறு மார்க்ஸிஸ அணிகளுள் அந்தப் பொலிஸ்காரர் மாவோ அணியைத் தேர்ந்தெடுத்ததுடன் ஏனைய அணிகள் மீது கடும் விமர்சனங்களையும் மேற்கொண்டு வந்தார்.

ஒரு நாள் சாலிஹ¨டன் பல்வேறு நகைச்சுவைகளைப் பகிர்ந்து கொண்டிருந்த போது பேச்சோடு பேச்சாகத் தனது விதவைத் தாயை சாலிஹ் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற தனது விருப்பத்தை அந்தப் பொலிஸ்காரர் சொன்னார். தான் வைத்திருந்த தனது தாயாரின் புகைப்படத்தையும் சாலிஹ¨க்குக் காட்டினார். அந்தப் பெண்மணி 40 வயது தாண்டியவராகத் தோன்றினாலும் அழகாக இருந்தார். புன்னகைத்த நிலையில் அவளது கன்னங்களில் குழி விழுந்திருந்தது. தனது நகைச்சுவை யுணர்வைத் தாய்ப்பால் மூலமே அவள் தனது மகனுக்கு ஊட்டி யிருக்கிறாள் என்பதை அவளது கண்கள் புலப்படுத்தின. அன்றி லிருந்து அந்தப் பொலிஸ்கார நண்பனைத் தனது வளர்ப்பு மகனாக நினைத்துப் பழக ஆரம்பித்தான் சாலிஹ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைக்குள் வாழ்ந்த சாலிஹ் தனக்குள் மறைந்து கிடந்த திறமைகளைக் கண்டறிந்து அவற்றை வளர்த்துக் கொள்ள ஆரம்பித் தான். சிறைக் கைதிகளுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் அவன் தனது திறமையைப் பயன்படுத்தினான். முதலில் கம்யூனிஸ்டு களுக்கும் இஸ்லாமியவாதிகளுக்குமிடையில் உள்ள வெறுப் புணர்வைக் களைவதில் மிகுந்த நிதானத்துடன் கடும் பிரயாசை மேற் கொண்டான். தமது வாழ் நிலையை மேம்படுத்த வேண்டுமாயின் சகலரும் ஒன்றிணைந்தால்தான் சாத்தியப்படும் என்பதனால் இஸ்லாமியவாதிகள் ஏனையோருடன் ஒற்றுமைப் படுவது அவசியம் என்பதை எடுத்துக் கூறி இணக்கம் ஏற்படுத்துவதில் வெற்றி கண்டான். அவனது முயற்சி சகலரையும் ஒன்றிணைத்தமையால் அங்கே சிறந்த சமாதானத் தூதுவனாக அவன் விளங்கினான்.

இப்போது சாலிஹை அடையாளப்படுத்தும் வகையில் பல அம்சங்கள் உள்ளன. சிறைக் கைதிகளாக உள்ள இராணுவ வீரர்களுள் ஒருவன். இஸ்லாமிய விடுதலைக் கட்சியின் முன்னாள் அங்கத்தவன். அமாஸிகளின் நெருங்கிய நண்பன். அவர்களது மொழியைச் சரளமாகப் பேசும் ஆற்றல் கொண்டவன். கம்யூனிஸ்ட்டுகளுடன் இணைந்து வாழத் தொடங்கிய நாளிலிருந்து அவர்களது சக தோழன். சிறைக்குள் உள்ள எந்தக் கைதிகள் அணியினருடனாவது தமக்கு முறுகல் ஏற்பட்டு நிலைமை கட்டுப்பாட்டை மீறும் சந்தர்ப் பம் வந்தால் சிறையதிகாரிகளே கூட சாலிஹின் உதவியைக் கோரும் நிலை உருவானது.

ஆனால் சாலிஹுக்குத் தெரியாத ஒரு விடயமும் இருந்தது. கைதிகளுக்குள் ஒற்றுமை ஏற்படுத்தி ஒருமுகப்படுத்தும் சாமார்த் தியம் அவனுக்கு இருந்த போதும் கூட, சாலிஹைப் பற்றிப் பாது காப்புத் துறையினருக்குக் கிடைக்கப் பெறும் அறிக்கைகளில் சாலிஹ் ஓர் ஆபத்தான பேர்வழி என்று குறிப்பிடப்பட்டிருப்பதை அவன் அறிந்திருக்கவில்லை. இதன் காரணமாகத்தான் 1988ல் பொது மன்னிப்பு வழங்கப்பட்டோரில் ஒருவனாக அவன் இருக்கவில்லை.

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாகத் தயாரிக்கப்பட்ட பொதுமன்னிப்பு வழங்கப் படுவோர் பட்டியலில் அவனது பெயர் சேர்க்கப்பட்டே இருந்தது. விடுதலைக்குத் தயாரான நிலையில் தன்னிடமிருந்த அற்ப சொற்பப் பொருட்களை அவன் ஒரு நைந்து கிழிந்த சூட்கேஸில் போட்டுத் தயாராக வைத்திருந்தான். கடந்த காலங்களில் மறந்து விடமுடியாத அளவு அனுதாபத்தையும் துக்கத்தையும் ஏற்படுத்திய- கம்யூனிஸ்ட்டு களுக்கான சிறைப் பிரிவில் மரணித்துப்போன ஒருவனுக்குச் சொந்தமான சூட்கேஸ் அது.

சிறைவாசிகள், புலனாய்வுப் பணியகத்தின் தலைவரைச் சந்தித்துத் தமது விடுதலை பற்றிப் பேசியிருந்தார்கள். சில நாட்க ளுக்கு முன்னர்தான் நாட்டின் புரட்சித் தலைவரின் மருமகனாகியி ருந்த பணியகத் தலைவர் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்வ தற்கு ஒப்புக் கொண்டதுடன் புரட்சித் தலைவர் நேரடியாகவே வந்து அனைவரையும் விடுதலை செய்வார் என்றும் தெரிவித்திருந்தார்.

நாட்டின் புரட்சித் தலைவர் தம்மை விடுதலை செய்ய வரும் காட்சியை ஒவ்வொரு விதமாகக் கற்பனை செய்து கைதிகள் ஒவ் வொருவரும் தமக்குள் கலந்துரையாடிக் கொண்டிருந்தனர். ஆனால் சில நாட்களுக்குப் பின்னர் புரட்சித் தலைவர் அங்கு வந்த விதத்தை அவர்களின் கற்பனையோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூட முடிய வில்லை. அவர் ஒரு மஞ்சள் நிற புல்டோஸரின் சாரதி ஆசனத்தில் அமர்ந்தபடி அங்கு வந்து சேர்ந்து அவர்களை ஆச்சரியத்துக் குள்ளாக்கினார். இரு புறங்களிலும் மெய்ப்பாதுகாவலர்களாலும் புரட்சிக் கவுன்சிலின் அங்கத்தவர்களாலும் சூழப்பட்ட நிலையில் மிக வேகமாக பிரதான வாயிலுக்குத் தலைவர் வந்த போது அந்த இடம் கற்குவியலாக மாறிற்று.

சிறைவாசிகள் பிரதான வாயிலுக்கு அப்பால் தங்களது மூட்டை முடிச்சுகளுடனும் அட்டைப் பெட்டிகளுடனும் கூட்ட மாக நின்றிருந்தார்கள். சிலர் தமது உடைகளையும் உடமைகளையும் சாக்குகளிலும் குப்பை கொட்டப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பைகளிலும் வைத்திருந்தார்கள். புழுதியடங்கிய பின்னர் கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிவாங்கியை வைத்துக் கொண்டு புரட்சித் தலைவர் பெருங்குரலில் பேச ஆரம்பித்தார்.

"உங்களைச் சிறைக்குள் தள்ள எதற்காக என்னை நிர்ப்பந்திக்கிறீர்கள்? நான்தான் விலங்குகளை நொறுக்குபவன். நான்தான் சிறைகளை உடைப்பவன். நான்தான் உங்களைக் கொடுங்கோன்மையிலிருந்து மீட்பவன்!!"

இதே வேளை எல்லாப் புறங்களிலும் வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கிகளிலிருந்து சூடானியப் பாடகர் ஒருவரின் பாடல் ஒலிக்க ஆரம்பித்தது.

"எல்லாம் கடந்து விட்டது... இனிமேல் சிறைகள் இல்லை.... சிறைவாசிகள் இல்லை....!"

இந்தக் காட்சிகளைத் தொலைக்காட்சி நேரடியாக ஒளி பரப்பிற்று. நீண்ட காலத்துக்கு முன் ஓய்வு பெற்ற பழைய சிறையின் பொறுப்பதிகாரி வீட்டிலிருந்தபடி இக்காட்சிகளைப் பார்த்தார். சாலிஹ் ஒரு பழைய சூட்கேஸ்"டன் நிற்பதைக் கண்டு தன்னையறியாமல் கரகோஷம் செய்தார். பின்னர் குளியலறைக்குள் நுழைந்த போது அவரது கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் அவர் கன்னங்களை நனைத்தது.

புல்டோஸர் உடைத்துப் போட்டிருந்த கற்குவியலூடாக சிறைவாசிகள் ஒவ்வொருவராக நடந்து வர உத்தரவு பிறப்பிக்கப் பட்டதைத் தொடர்ந்து அவர்கள் முன்னால் வந்து புரட்சித் தலைவரின் கரங்களைக் குலுக்கினார்கள். அவர்களது உறவினர்கள் அவர்களை எதிர்பார்த்து வெளியே காத்து நின்றார்கள்.

இந்த நிகழ்வைக் கொண்டாடுமுகமாக பெண்கள் சிலரின் ஒன்றிணைந்த மெல்லிய குரலின் குரவை ஒலி அவ்வப்போது சிறைச் சுவர்களுக்கு அப்பால் கேட்டுக் கொண்டிருந்தது. இது இவ்வாறு நிகழ்ந்த கொண்டிருக்க, சாலிஹிடம் வந்த புலனாய்வுத் துறையின் தலைவர் அவனைச் சிறைக்குள் செல்லுமாறு உத்தரவிட்டார்.

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ்ட்டுகளும் அமாஸிகளும் இராணுவத்தைச் சேர்ந்த சிலரும் சிறையை விட்டு விடுதலையான பின்னர் சிறைக்குள் பகுதிகளைப் பிரிக்கும் முறை முற்றாக மாற்றியமைக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கைதிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த பிரிவிலிருந்து சாலிஹ், அவனைப் போல தடுக்கப்பட்டோர் இருக்கும் பிரிவுக்கு மாற்றப்பட்டான். அந்தப் பிரிவில் உள்ளவர்கள் மீது ஒரு போதும் வழக்குப் பதிவு செய்யப்படவுமில்லை, விசாரிக்கப்பட்டதும் இல்லை. கைதிகளில் சிறையில் கழித்த கால அளவு அடிப்படையில் சிறைக்குள் புதிய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

ஒரு பிரிவுக்கு 'விடுதலைக்குரியோர்' என்று பெயரிடப் பட்டது. இதற்குள் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட வர்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள். மற்றொரு பிரிவு இராணுவக் குற்றவாளிகளுக்கானது. பழைய பிரிவுகளில் ஒன்றேயொன்றைத் தவிர ஏனையவை பழைய பெயர்களையே கொண்டிருந்தன. அந்தப் புதிய பிரிவுக்கு 'ஸனாதிகா' என்று பெயர் சூட்டப்பட்டது. எண்பது களில் பல்கிப் பெருகிய அங்கத்தவர்களைக் கொண்ட புதிய ஜிஹாதிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் இப்பிரிவுக்குள் அடைக்கப் பட்டனர்.

புதிய பிரிவுக்குள் இருந்த கைதிகளை சாலிஹ் சந்தித்தான். அவர்களில் ஒருவர் ஐம்பது வயதான மனிதர். புரட்சித் தலைவரின் ஊரான 'சேர்த்'தில் அம்மனிதரது காருடன் ஒரு கோவேறு கழுதை மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. ஒருவாறு சேதமுற்ற வாகனத்தில் சிரமப்பட்டுத் திரிப்போலிக்கு வந்து சேர்ந்திருந்தார் அவர். அபூ ஹு"ரைதா சதுக்கத்தில் வைத்து அவரது காரைப் பின்புறமாய் வந்த கார்க்காரன் மோதி விட்டான்.

மோதிய கார்ச் சாரதியை நோக்கிக் கோபத்துடன் அவர் சொன்னார்: -

"இப்போதுதான் 'சேர்த்'தின் கோவேறு கழுதையுடன் ஏற்பட்ட விபத்தில் ஒரு நூலில் தப்பி வந்திருக்கிறேன். இப்போது நீயும் வந்து மோதி விட்டாய்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிச் சொன்னதற்காக அந்த இடத்திலேயே அவர் கைது செய்யப்பட்டார். 'சேர்த்'தின் கழுதை எனத் தேசத்தின் புரட்சித் தலைவரைக் குறிப்பிட்டு அவரை வேண்டுமென்றே அவமதித்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இருபத்து நான்கு வயது இளைஞன் ஒருவன் சிறைக் கைதியாக வந்தான். தஹ்ரா மாவட்டத்தைச் சேர்ந்த அவன் ஒரு கிளாஸ் நாட்டுச் சாராயம் அருந்தியிருக்கிறான். அதன் பின் திரிப்போலி சர்வதேசச் சந்தைக்கு அருகிலுள்ள தனது வீட்டை நோக்கி நள்ளிரவில் தள்ளாடித் தடுமாறியபடி நடந்து போயிருக்கிறான். கிராண்ட் ஹோட்டலை அண்மித்த அவனுக்குச் சிறுநீர் கழித்தேயாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம். இல்லையென்றால் தனது மூத்திரப் பை வெடித்து விடும் என்ற நிலையில் பளீரிடும் மின் விளக்குகளையும் பொருட்படுத்தாமல் அங்கிருந்த வெளியில் சிறுநீர் கழித்திருக்கிறான். உடனடியாக இரண்டு கார்கள் அவனை அண்மித்த போதுதான் தான் சிறுநீர் கழித்திருப்பது 'பச்சைச் சதுக்கத்தில்' என்பதை உணர வந்தான்.

இதே வேளை இளைஞர்களால் சிறைச்சாலை நிறைந்தது. அவர்களில் சிலர் பள்ளிவாசலில் அதிகாலைத் தொழுகையை முடித்த நிலையில் கைது செய்யப்பட்டவர்கள். ஏனையோர் நாடு முழுக்கத் தெருக்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சோதனைச் சாவடிகளில் கைது செய்யப்பட்டவர்கள்.

இளவயது ஜிஹாதிகளும் உள்ளே கொண்டு வரப்பட்டார்கள். சாலிஹ் தனது வாழ்நாளில் கண்டிராத அளவுக்குப் பழமைவாதிகளாக அவர்கள் இருந்தார்கள். நாடும் மக்கள் சமூகமும் மத நம்பிக்கைக்கு எதிரானவை என்றும் அதனை மரியாதைக் குறைவாகக் கணிப்பிடுவோர் என்றும் ஆப்கானிஸ்தானுக்கு ஓடிப் போன இமாம்களின் கருத்துக்களைப் பின்பற்றியோர் எனவும் இளம் ஜிஹாதிகள் கருதினார்கள். ஆகவே இவர்களோடு ஒன்றிப் போவதைத் தவிர்த்த சாலிஹ் இவர்களிடமிருந்து விலகியே இருந்தான்.

தனக்கென ஒரு பிரத்தியேகமான சிறையறையைக் கோரிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறை நிர்வாகத்துக்கு விண்ணப்பித்தான் சாலிஹ். நிர்வாகம் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் அவனது கோரிக்கையை உடனே ஏற்றுக் கொண்டமை அவனுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. சாலிஹ் ஏனைய சிறைவாசிகளுடன் இணைந்து செயற்படுவதைத் தடுப்பதற் காகவே அவ்வாறு அவனுக்குத் தனிச் சிறை வழங்கப்பட்டது என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. இதன் பிறகு சாலிஹ் சிறை வெளியில் உடற்பயிற்சி செய்யும் போது மட்டும்தான் மற்றவர் கண் களில் பட்டான். அவனது கறுப்புத் தலை மயிர்களுள் வெண்ணிற முடிகள் தோன்றும் காலம் வரை தனிச் சிறைக்குள்ளேயே அவன் வாழ நேர்ந்தது.

துர்ப்பாக்கிய மிக்க சிறைவாசத்தைத் தான் அனுபவிக்க வேண்டி வந்த குருட்டு விதிக்குக்குக் காரணமான பெண்ணைத் தனது சிறைக்காலம் முழுவதும் அவனால் மறக்க முடியவில்லை. அவன் கைது செய்யப்பட்ட போது இருந்த அவளது கோபம் கொண்ட முகமே ஆரம்பத்தில் அவனது நினைவில் தங்கியிருந்தது. காலம் செல்லச் செல்ல அவனைப் பார்த்து வெட்கப் புன்னகை சிந்தும் பெண்ணாக அவள் மாறியதும் அந்தக் கோப முகம் நினைவிலிருந்து அகன்றது. பிறகு சாலிஹை நோக்கி காதல் நோக்குடன் வாய் மலர்ந்து சிரிக்கும் பெண்ணாக மாறினாள். இப்படித்தான் அவள் மீது அவன் காதலில் விழுந்தான். ஆனால் அவளது பெயர் என்னவென்று கூட அவனுக்குத் தெரியாது.

நீண்ட காலமாக அவனது சிந்தனையும் உள்ளுணர்வும் லிபியாவில் பெண்களுக்குப் பொதுவாக வைக்கப்படும் பெயர்களை வரிசைப்படுத்திக் கொண்டிருந்தன. அந்தப் பெயர்களிலிருந்து பத்துப் பெயர்களை அவன் தேர்ந்தெடுத்தான். அவளது பெயர் நிச்சயமாக இந்தப் பத்துப் பெயர்களில் ஒன்றாகவே இருக்கும் என்று அவன் நம்பினான். ஒரு நாள் இரவில் அவனது கனவில் வந்த அவள் தனது பெயர் ஸைனப் என்று சொன்னாள்.

தொண்ணூறுகளில் வாழ்க்கை சலிப்பு மிக்கதாக இருந்தது சாலிஹுக்கு. தனக்குப் பைத்தியம் பிடிக்கும் நிலை உருவாவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உணர்ந்த போதும் ஒருவாறு தாக்குப் பிடித்துக் கொண்டிருந் தான். அவ்வாறு தாக்குப் பிடிக்கக் காரணமாயிருந்தவர் கோப்ரல் அஹமட் அல் ஸூபைர். 60 வயதைத் தாண்டிய அவர் 1970ம் ஆண்டி லிருந்து சிறையில் இருந்தார். மிகவும் நீண்ட காலம் சிறையிலிருந்த நபர் அவர். நெல்சன் மண்டேலாவை விடவும் ஆறு வருடங்கள் அதிகமாகச் சிறையில் இருந்தவர்.

அவர் சாலிஹைச் சிறை வெளியில் சந்திக்கும் போது ஈராக்கிலும் சிரியாவிலும் கழிந்த தனது இளமைக் காலங்களைப் பற்றியும் தனது பாட்டனாரான அஹமட் அல் ஷரீப் பற்றியும் சொல் வார். அஹமட் அல் ஷரீப்தான் 1911 முதல் 1917 வரை லிபியாவில் இத்தாலிய ஆக்கிரமிப்புக்கு எதிரான எழுச்சிக்குத் தலைமை வகித்தவர். தனது மைத்துனர் இத்ரீஸ் அல் ஸனூஸிக்காகத் தலை மையை விட்டுக் கொடுத்துப் பதவி துறந்தவர். இந்த இத்ரீஸ் அல் ஸனூஸிதான் பின்னர் லிபியாவின் முதலும் கடைசியுமான அரசராக இருந்தவர்.

சிறைக்குள் நாட்டின் மிகப் பெரிய படுகொலைகள் இடம் பெற்ற அடுத்த மாதம் தற்கொலை செய்து கொண்டு இறக்கும் வழி கள் குறித்துத் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த போது அவன் எந்நேரமும் விடுதலையாகலாம் என்ற செய்தி அடிபடத் தொடங்கி யது. துப்பாக்கி ரவைகள் முடிவில்லாமல் சிதறிப் பறந்த வேளை அவன் தனது சிறையறைக்குள் இருந்தான். அவன் இருந்த அறையின் பூட்டப்பட்ட அறைக் கதவிலிருந்து சில மீற்றர்களுக்கு அப்பால் ரவைகள் பறந்தன. 1996ம் ஆண்டின் ஓர் இரவு. சிறையிலே தாம் எதிர் கொண்ட மோசமான வாழ் நிலைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கலகம் செய்த பல நூற்றுக் கணக்கான கைதிகள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

தமது கோரிக்கைகளை வெல்வதற்காகச் சிறைவாசிகள் சிறைக் காவலர்கள் சிலரைப் பணயமாகப் பிடித்து வைத்துக் கொண்டதுடன் அவர்களது துப்பாக்கிகளையும் கைகளில் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அடுத்த சில மணித்தியாலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பாதுகாப்புப் படையினர் சிறையைச் சுற்றி வளைத்தனர். ஸ்னைப்பர்களுடன் மற்றொரு குழுவினர் சிறை மதில்களின் மேல் நின்று இலக்கெடுத்தனர். கலகத் தடுப்புப் பொலிஸாரும் மேலதிகப் படையினரும் வந்து சேர்ந்தார்கள்.

புலனாய்வுப் பணியகத்தின் தலைவர் கலகக் குழுத் தலைவருடன் நேரடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் தமது தோழர்களை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற கோரிக்கையைக் கலகக் குழுவின் தலைவர் முன் வைத்தார். புலனாய்வுப் பணியகத் தலைவர் அக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். உடல் நிலை சீர் கெட்டிருந்த அனைவரும் பஸ் ஒன்றில் ஏற்றப்பட்டார்கள்.

ஆனால் அவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் படவில்லை. சிறையிலிருந்து வெகு தூரத்தில் உள்ள தனிமையான ஓர் இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கேயே சுட்டுக் கொல்லப்பட்டார்கள். சிறைக் காவலர்களை விடுவித்து ஆயுதங்களையும் ஒப்படைத்த மீதியாயிருந்த கலகக்காரர்களின் கதியும் அப்படியே ஆனது. அதனைத் தொடர்ந்து தேசிய மீன்பிடித்துறைக்கும் தேசிய கால் நடைத் துறைக்கும் சொந்தமான குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் உடல்கள் ஏற்றப்பட்டு அடையாளம் தெரியாத ஓரிடத்தில் புதைக்கப்பட்டன.

□□□

நீண்ட மஞ்சள் நிற உறையிலிருந்த அவனது பணம் காணாமல் போயிருந்தது. அவனது அடையாள அட்டை, இராணுவ அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், மேற் பூச்சு நீங்கி மட்டமான உலோகம் வெளித் தெரியும் ஒற்றைக் காதணி ஆகியவை மாத்திரமே அதற்குள் இருந்தன. சாலிஹ் சிறையை விட்டு வெறுங் காலுடன் வெளியே வந்தான். அவன் சிறையில் இருந்த காலத்தில் வழிகாட்டற் குறியீடுகள் இடப்பட்டுப் பாதைகள் யாவும் விரிவாக்கம் பெற்றிருந்தன. கையில் ஒரு செப்புச் சதம் கூடக் கிடையாது. எங்கே போவது என்பதுவும் புரியாத நிலையில் அவன் இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் வருவோரிடம் பாதை எங்கே செல்கிறது என்று விசாரித்துக் கொண்டு சிற்றி சென்டரை நோக்கி நடந்தான். கடைசியாகத் தியாகிகள் சதுக்கத்துக்கு வந்து சேர்ந்து இடப்புறமாகக் கடலை நோக்கி அமைந்திருக்கும் மியூஸியத்துக்கு அருகே சென்றமர்ந்தான்.

சதுக்கத்தில் இருந்த அரச வங்கிக் கட்டடம் அவனது பார்வையில் பட்டது. அந்த வங்கியில் வேலை செய்த தனது நண்பனின் ஞாபகம் வந்ததும் நேரே அக்கட்டடத்துள் நுழைந்து நண்பனின் பெயரைச் சொல்லி விசாரித்தான். சில நிமிடங்களில் வெளியே வந்த நண்பன் சாலிஹைக் கண்டதும் மகிழ்ச்சியில் சாலிஹின் கால்கள் தரையில் படாத அளவுக்கு இறுகக் கட்டியணைத்துத் தூக்கினான்.

சில தினங்கள் திரிப்போலியில் தங்கியிருந்த சாலிஹுக்குச் சொந்த ஊருக்குச் சென்று தனது குடும்பத்தாரைப் பார்க்கும் எண்ணம் வந்தது. ஊருக்குச் சென்று இரண்டு இரவுகள் தங்கியிருந்த அவன் சிறையில் கழித்த காலத்தை விட மிக மோசமான தனிமையை அங்கு உணர்ந்தான். அவனது பெற்றோர் மரணித்த பிறகு பரம்பரைச் சொத்துக்களையெல்லாம் சாலிஹின் சகோதரர்கள் தங்களுக்குள்ளேயே பகிர்ந்து கொண்டிருந்தார்கள். சாலிஹுக்கென்று எதையும் அவர்கள் ஒதுக்கி வைத்திருக்கவில்லை. உண்மையைச் சொன்னால் சாலிஹ் திரும்பி வருவான் என்று அவனது சகோதரர்கள் ஒரு போதும் நினைத்திருக்கவில்லை.

இருபத்து நான்கு வருடங்களுக்குப் பின்னர் அவன் திரும்பி வந்ததானது அவர்களைப் பொறுத்தவரை இறந்த ஒரு மனிதன் எழுந்து வந்ததற்கு ஒப்பானதாக இருந்தது. மூன்றாம் நாள் தன்னை மையவாடிக்கு அழைத்துச் செல்லும்படி அவர்களைக் கேட்டான். மைய வாடியில் தனது பெற்றோர் அடக்கப்பட்டிருந்த இடங்களில் 'பாத்திஹா' ஓதிப் பிரார்த்தித்தான். இனிமேல் கிராமத்துக்கு வருவதேயில்லை என்ற முடிவுடன் திரிப்போலிக்கு மீண்டான்.

கம்யூனிஸ, இராணுவ, அமாஸி நண்பர்களின் உதவியுடன் திரிப்போலியில் ஒரு வெளிநாட்டுக் கம்பனியில் மொழிபெயர்ப்பாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாக வேலையில் சேர்ந்தான் சாலிஹ். இரவு வேளைகளில் சிற்றி சென்டரில் உள்ள சட்டத்துறை அலுவலகம் ஒன்றில் மொழிபெயர்ப் பாளனாக வேலை செய்து வந்தான்.

ஒரு நாள் பிரயாணிகள் நிறைந்த ஒரு சிறிய பஸ்ஸில் அவன் ஏறிய போது அதே வெள்ளை நிற ஃபிர்சியா அணிந்தபடி ஆசனத்தில் அமர்ந்திருந்த அவளைக் கண்டான். சுருக்கங்களும் அதனால் உண்டான கோடுகளும் பரவியிருந்த போதும் அவளது முகம் தெளி வாகத் தெரிந்தது. எந்தவிதக் கருணையும் இல்லாமல் ஏறக் குறையக் கால் நூற்றாண்டுக் காலம் அவனைச் சிறைக்கு அனுப்பிய அழகில் கொஞ்சம் அவளிடம் இன்னும் மீதமிருந்தது. அவளைக் கண்டதும் தன் இதயம் வெடித்து நெஞ்சுக் கூட்டுக்கு வெளியே வந்து விடுமோ என அவன் பயந்தான். அவனது எண்ணவோட்டத்தை ஏனைய பிரயாணிகள் நிச்சயம் தெரிந்து கொள்ளக் கூடும் என்றும் அவன் நினைத்தான். அவளைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்ட போதும் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

தனிமை உணர்வும் கவலையும் கொண்டவளாக அவள் தோன்றினாள். ஸாவியத் அல் தஹானி பகுதியில் அவள் பஸ்ஸிலி ருந்து கீழே இறங்கினாள். அவளைப் பின் தொடர்ந்த அவன், ஒரு பங்களாவின் முன்னால் அவள் நிற்பதையும் அந்த பங்களாவின் பச்சை வண்ண வாயிற் கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே நுழைவதை யும் கண்டான்.

ஒரு வாரத்தின் பின்னர் அவளைப் பற்றிய தகவல்களை சாலிஹின் நண்பர்களது மனைவிமார் சேகரித்துக் கொண்டார்கள். இரண்டு முறை விதவையாகியிருந்த அவளுக்குப் பிள்ளைகள் யாரும் கிடையாது. ஒரு தையற் கடையையும் ஒரு வீட்டையும் அவளது இரண்டாவது கணவன் அவளுக்கு விட்டுச் சென்றிருந்தான். அந்த வீட்டில்தான் அவள் வாழ்ந்து வந்தாள். அவளுடைய பெயர் ஸைனப்!

சாலிஹின் நண்பர்களின் மனைவியர் இரண்டு மாதங்களில் சாலிஹையும் ஸைனபையும் ஒருவாறு சந்திக்கச் செய்தார்கள். அதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக உடைகள் தைக்கும் சாட்டில் பல முறை ஸைனபிடம் செல்ல வேண்டியிருந்தது. உடைகளைத் தைத்து எடுப்பதற்கு முன்னர் அவளது நம்பிக்கையைப் பெற முயன்றார்கள். முதலில் அது அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. அவர்களில் ஒருவரின் பேச்சுச் சாதுரியத்தின் மூலமே அது சாத்தியப் பட்டது. அவர்களை ஒன்றிணைக்க மனிதக் கற்பனைக்கு எட்டாத விதி நீண்ட காலம் காத்திருந்தது. எப்படியோ இறுதியில் சாலிஹின் நண்பன் ஒருவனின் வீட்டில் அவர்கள் சந்தித்துக் கொண்டார்கள்.

தன்னைத் திருமணம் செய்யக் கேட்பவர்களைத் தனது வியாபாரத்தில் லாப நட்டத்தைச் சமப்படுத்துவது போல் அவள் சமாளித்துக் கொள்ளப் பழகியிருந்தாள். ஆனால் இம்முறை வந்திருக்கும் கோரிக்கை வித்தியாசமாக இருந்தது. அவன் சிறை விட்டுச் சிறை மாறிய காலத்தில் முலாம் கழன்று போன ஒற்றைக் காதணியைத் தனது சட்டைப் பையில் கைவிட்டு எடுத்து அவளிடம் கொடுத்தான். அவள் முதலில் அதை அடையாளம் காணவில்லை. 1972ம் ஆண்டு அவளது வலது காதிலிருந்து அந்தக் காதணி கழன்று விழுந்ததை அவளுக்கு அவன் ஞாபகப்படுத்தினான்.

நீண்ட நேரமாக யோசித்த பின்னர் தன்னைத் தொந்தரவு படுத்திய இளைஞனையும் அவனைப் பாதுகாப்புப் பிரிவினர் மடக்கிப் பிடித்ததையும் ஞாபகத்துக்குக் கொண்டு வந்தாள். மடத்தனத்தின் விளைவாக அவன் செலுத்தியிருந்த விலையை எண்ணி வருந்தித் தனது கரங்களால் நெஞ்சில் அடித்துக் கொண்டு கண்ணீர் விட்டு அழுதாள். அவளது பெயரைக் கனவில் வந்து அவள் தன்னிடம் சொன்னதை அவளிடம் சொன்னான். அவனைத் திருமணம் செய்து கொள்ள எந்தத் தயக்கமும் இல்லாமல் அவள் சம்மதம் சொன்னாள்.

அவர்கள் இருவரும் அவளது சிறிய வீட்டில் வாழத் தொடங்கினார்கள். பிள்ளைகள் இல்லாத காரணத்தால் ஒரு குழந்தையை எடுத்து வளர்ப்பதற்கு சாலிஹ் அவளைச் சம்மதிக்க வைத்தான். அநாதை விடுதியொன்றிலிருந்து கொண்டு வரப்பட்ட அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையால் வீட்டில் மகிழ்ச்சி நிறைந்தது. அவன் மொழிபெயர்த்த பிற நாட்டு இலக்கியங்கள் கல்ஃப் சஞ்சிகையில் பிரசுரம் பெற்றன. பின்னர் அவை நூலுருவாகி அவனுக்கு வருவாயைத் தந்தன. அப் பணத்தில் அவன் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு அதன் மூலம் தான் இழந்தவற்றை அடைய முயற்சித்தான். அவ்வப்போது அவன் எழுதிய நாடகங்கள் பத்திரிகைகளின் பெரு வர வேற்பைப் பெற்றன.

ஆனால் வழமையாகச் செய்யப் பழக்கப்பட்டுப்போன ஒரேயொரு விடயத்தை மட்டும் அவனால் தவிர்க்க முடியவில்லை. புரட்சிக் கவுன்சிலின் அங்கத்தவரான முன்னாள் உள்துறை அமைச்சரின் படத்தை செய்திப் பத்திரிகையிலோ தொலைக் காட்சியிலோ பார்த்தால் அவரின் முகத்தின் மீது காறித் துப்புவதை மட்டும் அவனால் நிறுத்தவே முடியவில்லை! □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச தேசிய சாஹித்திய விருது பெற்றது.

நன்றி

சமநிலைச் சமுதாயம்

ஞானம்

ஜீவநதி

விடிவெள்ளி

தினக்குரல்

---

## நூலாசிரியரின் பிற நூல்கள்

**கவிதை**

காணாமல் போனவர்கள் - 1999

உன்னை வாசிக்கும் எழுத்து - 2007

(மொழிபெயர்ப்பு)

என்னைத் தீயில் எறிந்தவள் - 2008

(அரச சாஹித்திய தேசிய விருது பெற்றது)

**சிறுவர் இலக்கியம்**

புள்ளி - 2007

கறுக்கு மொறுக்கு - முறுக்கு - 2009

புல்லுக்கு அலைந்த மில்லா - 2009

**ஏனையவை**

தீர்க்க வர்ணம் - 2009

(பல்சுவைப் பத்திகளின் தொகுப்பு)

ஸ்ரீலங்காவிலிருந்து

ஸ்ரீரங்கப்பட்டணம் வரை - 2009

(பயண அனுபவங்கள்)

ஒரு குடம் கண்ணீர் - 2010

- உண்மைக் கதைகள் -

(அரச சாஹித்திய தேசிய சான்றிதழ் பெற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

662853

University of Peradeniya
16 JUL 2013
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் "ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள்" என்ற இம் மொழியாக்க நூல், தமிழில் வெளிவரும் முதலாவது அரபுச் சிறுகதைகளின் தொகுப்பாகும் என எண்ணுகின்றேன். அந்த வகையில் இந்த நூல் மிகுந்த முக்கியத்துவம் உடையதாகின்றது.

இத்தொகுதியில் உள்ள சிறுகதைகள் யாவும் ஈராக், எகிப்து, சூடான், சிரியா, பலஸ்தீன், யெமன், மொரோக்கோ, ஓமான், லிபியா முதலான அரபு நாடுகளின் வெவ்வேறு காலகட்டத்து மக்கள் வாழ்வியலைக் கதைக்களமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளன.

அரபுலக மக்கள் வாழ்வியலின் ஒரு பகுதியை, ஒரு நிகழ்வை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள இக்கதைகளின் வாயிலாகப் புலப்படுத்தப்படும் கலாசார அம்சங்கள் குறித்த புதிய தரிசனம் தமிழ்மொழி வாசகருக்குக் கிடைத்துள்ளது.

இக்கதைகளில் வரும் மாந்தர்கள் பலதிறப்பட்ட குணாதிசயங்கள், அவர்களின் உணர்ச்சிப் போராட்டங்கள் என்பன மிக அற்புதமாகப் படைக்கப்பட்டிருக்கின்றமையைப் பார்க்கும்போது இவை தமிழிலேயே எழுதப்பட்ட கதைகள்தாமோ என்ற எண்ணததையும் இடையிடையே ஏற்படுத்தத் தவறவில்லை.

ஒரு மொழிபெயர்ப்பாளர் தான் தேர்ந்தெடுத்த பிரதியை மொழிபெயர்க்கும் போது மிக நுண்ணிய ஒரு சம நிலைப் போக்கைக் கடைப் பிடிப்பவராக இருக்கும் நிலையிலேயே அவரால் ஒரு நல்ல மொழிபெயர்ப்பைத் தருவது சாத்தியமாகின்றது எனலாம். அந்த இலக்கை அடைவதில் அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார் என்பதையே இத்தொகுதியில் அமைந்துள்ள அவருடைய மொழியாக்கச் சிறுகதைகள் நமக்கு உணர்த்துகின்றன.

**லறீனா அப்துல் ஹக்**
முன்னாள் விரிவுரையாளர்,
மொழிபெயர்ப்புக் கற்கைகள்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

ISBN: 978-955-8448-07-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org